ஓம் பரப்ரஹ்மணே நம:

80-பக்கங்கள்.

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

“எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.” (திருக்குறள்.)

 [REGISTERED.

கமலம்-5.	சென்னை: பிரமோதூதஹு மாசிமீ 1உ	இதழ் 59.
Vol. 5.	1931-ம்ஹு பிப்ரவரிமீ 16உ	No. 59.

ஆநந்த தர்சனம்



கற்பினர் கணவர்தம்மைக் காண்டோறுங் களித்தல் போலும்
பொற்புறு சிறார்தாய்கையிற் பொருந்துபு மகிழல்போல
மற்புத வுவகையோடு மடிகளை யடிகள் போற்று
துற்பவ வுவர்ப்போடேத்து முள்ளத்தார் கள்ளத்தாரே.

[கற்புடைய ஸ்திரீகள் தங்கள் நாயகனைப் பார்க்கும்போதெல்லாம் சந்தோஷப்படுவது போலவும், அழகுபொருந்திய சிறு பிள்ளைகள் தங்கள் தாயினுடைய கையிலிருக்கும்பொழுது அகமகிழ்வது போலவும், விசேட சந்தோஷத்துடன் கடவுளுடைய பாதாரவிந்தங்களை வணங்காமல் பாவம் நிறைந்த உள்ளத்தினால் வெறுப்போடு துதிக்கும் உள்ளத்தையுடையவர்கள்—கள்ளத் தன்மையை யுடையவர்களென்க.]

“ஸர்வம் பிரம்ம மயம் ஜெகத்” ஞானிகளுக்கு உலகத்திலுள்ள ஸகல வஸ்துக்களும் பிரம்மஸ்வரூபமாகத் தோன்றும். அஞ்ஞானிகளுக்கோ பற்பல நாமரூபங்களுள்ள பேதப்பொருள்களாகக் காணப்படும். பேதநினைவு இல்லாவிடில் கஷ்டமுமில்லை. பேதம் உள்ளவரை உண்மையான அபிமான மிராது. பேதமொழிந்தால் சிறந்த அபிமானம் ஜெனிக்கும். உதாரணமாக, ஒரு வேலைக்காரன், தான் வேறு, எஜமானன் வேறு என்றெண்ணாமல் எஜமா

☞ “அமிர்த குணபோதினி”யின் ஆறாம் வருஷ சந்தாவை இப்பத்திரிகையைப் பெற்றதும் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

னுடைய வேலையைத் தன்வேலைபோலவே பாவித்து நன்றாகச் செய்தவரின் எஜமானன் பிரீதிகொள்ளத் தடையென்ன? எஜமானன் வேறு, நாம் வேறு, அவனுக்கு லாபம் வந்தால் நமக்கென்ன பிரயோஜனமென்ற பேதபுத்தியை யுடைய வேலைக்காரன் சரியாகத் தன்னுடைய காரியங்களைச் செய்து முடிக்க மாட்டான். இம்மாதிரியே ஸ்திரீபுருஷர்கள் பேதம் பாராட்டாமல் ஒற்றுமையாயிருந்தால் குடும்பகாரியங்கள் செவ்வனே நடக்கும். ஒரு கண்ணிற் றூசிபட்டால் மற்றொரு கண்ணில் ஜலம் வருவதுபோல் ஒருவனுடைய சுக துக்கங்கள் தன்னைச் சார்ந்தவை யென்றெண்ணி யொழுகும் நண்பனே உற்ற நண்பன். மற்றவர்கள் நட்புவியாபாரிகளே யன்றி வேறல்லர். இம்மாதிரியே உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் பகவத் ஸ்வரூபமென்றுணர்ந்து தன்னுடைய ஆத்மாவே பிரம்மமென்று எண்ணி, தன்னைத்தான் அறிவோனே ஞானியாகிறான். அவனுக்குத் தான் ஜீவன்முக்தி கிடைக்கும்.

ஃ

“உற்றுப்பார்த்தால் உண்மை விளங்கும்” நாம் மனிதர்களாயிருந்தும் பலவகைப்பட்டிருக்கிறோம். ஆகிலும் மனிதத்தன்மையில் ஒன்றுதான். புருஷன் வேறு, ஸ்திரீ வேறு. ஆகிலும் மனுஷ்ய ஜாதியென்ற வியவகாரத்தில் இருவரும் ஒரு தன்மையையுடையவரே. இம்மாதிரியே மனுஷ்யனும் பிராணிகளும் பிராணனைக் கொண்டிருப்பதென்னும் விஷயத்தில் ஒரே தன்மையை யுடையவர்கள். இவ்வாறே அனைத்தையும் உற்று நோக்குமிடத்து இருப்பு என்னும் வியவகாரத்தில் எல்லா வஸ்துக்களும் ஒன்றுதான். அதாவது பிரம்ம ஸ்வரூபமேயாம்.

ஃ

“அழகிய இரண்டு பக்ஷிகள்” மனுஷ்யனுடைய சரீரமாகிற விருக்ஷத்தில் ஜீவாத்மா, பரமாத்மா என்ற இரண்டு பக்ஷிகள் குடிகொண்டிருக்கின்றனவாம். பரமாத்மாவின் தயவால் ஜீவன் ஸகல சுகங்களையும் அனுபவிக்கிறதாம். ஆதலின் மனுஷ்யனுக்குள்ள ஸகல மகிமைகளும் பகவானிடமிருந்து கிடைத்தனவேயன்றி வேறல்ல. கடவுள் உன்னிடம் எப்போதும் வஸித்துக்கொண்டிருக்கிறார். அவரைவிட்டு நீ அகன்று தனியேயிருக்க முடியாது. அதனாற்றான் அழகிய இரண்டு பக்ஷிகள் ஒரே மரத்தில் குடியிருப்பதாய் வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலின் “நான் நினைக்கிறேன், நான் பேசுகிறேன்” என்று பிரித்துப் பேசாமல் பகவானையும் கூட்டிக்கொண்டு “நாம் நினைக்கிறோம், நாங்கள் பேசுகிறோம்” என்று சொல்லு. நீ ஸ்வாமியோடு உழைப்பவன்; நீ எண்ணுகிற ஒவ்வொரு நல்லெண்ணத்திலும் பகவானும் நீயும் கலந்து செய்த காரியம் வெளிப்படும். ஆரம்பத்தில் அகம் என்பதைப் பிரித்து, அந்த ஓட்டை உடைத்துவிடு. பின்னர் உனக்குள்ளிருக்கும் அழகிய இரண்டு பக்ஷிகள் இன்னவையென்று தெரியவரும்.

ஃ

“பேதமும் அபேதமும்” ஜலத்திற் காணப்படும் பிரதிபிம்பத்தை வேறொரு நாயென்றெண்ணி கரையிலுள்ள சுவானம் வெள்ளென்று குலைப்பதுபோல் உலகத்திலுள்ள மனிதன் மாயையின் காரியத்தால் மற்ற மனிதர்

கூட்டமாகப் போகிறபோது உண்டாகிற மனோபலமும், கால் பலமும் ஒண்டிக்கட்டையாகப் போகும்போது உண்டாவதில்லை.

களை வேறாக நினைத்து அவர்களின் ஐசுவரியத்தைக் கண்டு சீறி விழுகிறான். இவ்விதமே பிறாது பிள்ளையென்று நினைப்பதால் அதைத் தூக்குவது பாரமாயும், தனது பிள்ளையென்று எண்ணும்போது அதை எடுப்பது இலேசாகவுமிருக்கிறது. வயிற்றுக்குள் குழந்தையிருக்கையில் எந்த பாரமும் தோற்றுவதில்லை. தனியே அதற்கு ஆகாரமும் தருவதில்லை. தாய் வேறு குழந்தை வேறு ஆனபின்பு அது ஒரு தனிப்பட்டதாவதுடன் பிரத்யேகமாய் ஆகாரமும் ஊட்டவேண்டி யிருக்கிறது. ஆகவே, அபேதத்தால் ஆநந்தமும், பேதத்தால் துக்கமும் விளைகின்றன. ஃ

"கை, கண், மனம்" ஆகிய மூன்றும் அசுத்தமாகாமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். கைகள் அநேக பாவ காரியங்களைச் செய்வதற்குத் துணை புரிகின்றன. கண்களோ பார்த்த அளவில் இச்சை மிகுந்து துர்க்கிருத்தியங்களில் மனத்தை ஸஞ்சரிக்கச் செய்கின்றன. மனமோ அசுத்தப்பட்டுவிடின் அதைத் திருத்துவது வெகு கஷ்டம். ஃ

"அறியப்படாத அந்தரங்கமில்லை" யென்பது ஓர் சிறந்த பழமொழி. முன்னர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியிடம் அன்புகொண்ட ஸத்தியபாமா அவர் மற்ற எந்த ஸ்திரீகளிடமும் செல்லாமல் தன்னிடமே இருக்கும்படி வேண்டிக் கொள்ள, அதற்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவும் இசைந்து அன்றுமுதல் ஸத்யபாமாவிடமே இருந்துவிட்டார். சில நாட்களுக்குப் பின்னர் நாரதர் ஸத்தியபாமாவிடம்வந்து க்ஷேமம் வினவ, அவள் முகமலர்ச்சியுடன் "நாரதரே! என்னைப்போல் பாக்கியசாலிகள் யாருமில்லை. ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி என்னை விட்டு அப்பால் போவதில்லை. மற்ற மனைவிகளைக் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை. அவ்வித வரம் அவரிடம் நான் பெற்றுக்கொண்டேன்" என, நாரதர் அதிசயித்து அதைச் சோதிக்குமாறு ருக்மணியின் வீட்டுக்குச் சென்றார். அங்கே கண்ணன் திவ்யாலங்கிருதராய் ருக்மணி ஸமேதராய் எழுந்தருளியிருப்பதைக்கண்டு அதிசயித்து ஸத்தியபாமாவிடம் ஓடிவந்து, ஏ ஸத்தியபாமா, ஸ்ரீ கிருஷ்ணன் உன்னிடமே இருப்பதாகச் சொன்னது பொய்; இப்போது ருக்மணியிடம் அவர் இருக்கக் கண்டேன் என்றார். அதற்கு ஸத்யபாமா நகைத்து, என் நாதர் என்னிடமே யிருக்கிறார் அதோ பாரும் என, பலகணிவழியாய் எட்டிப்பார்த்து பரமாத்மா இருப்பதையறிந்து, மறுபடியும் ருக்மணியின் கிருகத்திற்கு விரைவாக வந்தார். அங்கும் கண்ணன் இருப்பதை யறிந்தார். ஒவ்வொரு ஸ்திரீயின் வீட்டிலும் தேட அங்கங்கும் பரமாத்மா இருந்ததையறிந்து மயங்கினார். நிஜமான பக்தர்களின் ஹிருதயத்தில் எப்போதும் ஈசுவரன் விளங்கிக்கொண்டிருக்கிறார் என்ற உண்மையை இதன்மூலம் அறிந்து ஆநந்திதராய் வீணையைமீட்டிப் பரவசமானார். ஸாமான்யரால் அறியப்படாத ஆத்மாவை ஞானிகள் அறிகின்றனராதலின் "அறியப்படாத அந்தரங்கமில்லை" யென்பது ருஜுவாயிற்று. ஆத்மானந்தமானது அதை அனுபவிக்கும் ஞானிகளுக்கே தெரியும்.

ஃ

"கற்றலிற் கேட்டலே நன்று" எப்போதும் பெரியோர்கள் என்ன சொல்லுகிறார்களென்று நாம் கேட்கவேண்டும். அவர்களுடைய புத்தி அதி

"எல்லாத் துயரங்களும் என்னாலே வந்ததென்று சொல்லப் பிறந்தேனே!"

கூர்மையானது. அநுபோகம் முதிர்ந்தது. ஆலோசனை ஆழ்ந்தது. பண்டைக்காலத்து வித்வான்கள் செய்த கிரந்தங்களைப் படிப்பதானது அவர்களுடன் பேசுவதற்கொப்பாகும். ஒருவரோடு பேசினால் எத்தனை ஆநந்தமடைகிறோமோ அத்தனை ஆநந்தம் அவருடைய கடிதத்தாலும் உண்டாகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் தேகம், ஆத்மா என்னும் இரண்டு பொருள்களிருக்கின்றன. தேகம் பிரத்யக்ஷமாய்த் தெரிகிறது. ஆத்மாவோ கண்ணுக்குத் தெரியாத பொருள். ஆயினும் அதைப்பற்றித் தீர்க்கமாய் விசாரிக்கும்படியான காலமும் வருகிறது; அதாவது, சரீரம் அழிந்துபோகும் தருணமே. அப்பொழுது ஆத்மவிசாரணை செய்யத் தொடங்குகின்றான். அடடா! செத்துப்போனவன் எங்கே போனான்? அவனுடைய சரீரம்தான் சாம்பலாயிற்று; ஆத்மா என்ன கதியாயிற்று? என்று கேள்விகள் கேட்கத் தொடங்குகின்றான்; தன் சரீரத்தையும் மற்றப் பொருள்களையும் பார்த்துப் பரிசிலனை செய்கையில், எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் மாறுகின்றனவென்று தெரிகிறது. செடிகள் விதைகளிலிருந்து உண்டாகி, அச்செடிகளில் காய்கனி உண்டாகி, மறுபடியும் அக்கனியில் விதைகள் உண்டாகி உதிர்ந்து முன்போல் செடிமரங்கள் முளைக்கின்றன. இப்படியே உலகத்திலுள்ள ஸகல வஸ்துக்களும் மாறிக்கொண்டிருக்கின்றன. கடல் நீரானது சூரியவெப்பத்தால் ஆவியாகி ஆகாயத்திற்சென்று பின்னர் மழைநீராகி மறுபடியும் அக்கடலிலேயே விழுகிறது. இம்மாதிரியே பிறப்பு, வளர்ப்பு, பருமன் இளைப்பு முதலியன ஒன்றுக்குப் பின்னொன்றாய்த் தோன்றிக்கொண்டிருப்பது பிரதயக்ஷம். மரத்தின் ஸத்து விதையிலிருக்கிறது. ஆதலின், விதை மரத்தின் குணத்தையுடையதே. இனி உண்டாகப்போகிற பெரிய மனிதனுடைய குணங்களும் நடத்தைகளும் சிறிய குழந்தையினிட மிருக்கின்றன. மனுஷ்யன் குழந்தையாயும், குழந்தை மனுஷ்யனாயும் ஆகின்றனர். விதை மரமாயும், மரம் விதையாயும் ஆகின்றன. அதாவது, ஒன்றின் ஸத்து மற்றொன்றி லிருக்கின்றது. ஒன்றின் வளர்ச்சியானது மற்றொன்றின் உற்பத்திக்குக் காரணம். இவ்வாறே யோசிக்குந்தோறும் எல்லாப் பொருள்களுக்கும் உயிர்போன்ற ஆத்மாவானது ஒன்றெனத்தோன்றும். ஒரு கண்ணாடியை உடைக்கிறோம். அதனால் அக்கண்ணாடி அழிந்துபோயிற்றா? அதன் ரூபம் மாத்திரம் மாறிப்போயிற்று. கண்ணாடி சிறிய துண்டுகளாகப் பிரிந்ததேயன்றி இல்லாமற் போகவில்லை. இவ்விதமே ஒவ்வொரு வஸ்துவும் வெவ்வேறு ரூபங்களை யடைகின்றனவேயன்றி நாசமடைகிறதில்லை. இதுதான் தேகம் நசிக்கிறதென்றும், ஆத்மா நசிக்கவில்லையென்றும் சொல்வோர்களது கருத்து. பலவித காரணங்களால் காரியம் உண்டாகிறது. அக்காரியம் கெட்டுப்போனால் முன்னிருந்த காரணங்களின் நிலைமையை யடையும். மண் காரணம், மண்ணினாலான குடம் காரியம். குடம் உடைந்துபோனால் மறுபடியும் அம்மண்ணுடன் கலந்து மண்ணாகி (மற்றொன்றாய் மாறி) விடுகிறது. இதுதான் மரணத்தின் தாத்பரியம்.

III

பகவத் பிரார்த்தனை:—1. களங்கமில்லாத பரமஸ்வரூபியாய், ஆகாயத்தைக் கடந்தவனாய், இருள் நீங்கினவனாய், அவாங்க மனோகோசரனாய், இறப்

குழந்தைகள் தப்பித் தவறிக் கீழேவிழுந்து படுகிற அடியும் காயங்களும் விருத்தர்களுக்கு ஏற்படுமானால் அதுவே கைலாஸ யாத்திரைக்குப் போதும்.

பும் பிறப்பும் அனுக்கிரகிப்பவனுய், காரணமும் சாதனமுமில்லாதவனுய், ஹிருதய கமலத்தில் வசிப்பவனுய், கைவல்யனுய், சாந்தனுய், பரிசுத்தமும் அபரிசுத்தமும் அற்றவனுய், சிரேஷ்டனுய், திவ்யப்பிரகாசனுய், அப்பிரமேயனுய், பரமோத்தமனுய், ஆதியந்த ரஹிதனுய், பரம ரஹஸியனுமாய் வீற்றிருக்கிற ஏக பரம புருஷனே! உன்னைத் தியானிப்போமாக.

2. ஓ பரமாத்மாவே! உத்தமனும் பிரபஞ்சத்துக்கு ஆதிகாரணனும் ஆகிய நின்பொருட்டு என் நமஸ்கரியாமலிருப்போம்? அநந்தனுய், ஜகத்துக்கு ஆதாரபூதனுய், தேவதேவனுமாகிய ஓ ஸ்வாமி! அழிவற்றதும், இஃதென்று உணரப்படாததும், இவற்றிற்குப் பரமானதும் எல்லாம் நீரேயல்லவா? ஓ அநந்த ரூபா! நீயன்றே ஆதிதேவன்; புராண புருஷன்; ஜகத்துக்கு உத்கிருஷ்டமான ஆதாரபூதன், நீயன்றே சர்வக்ஞன்; அறியத்தக்க பரமபுருஷனும் நீயேயல்லவா? உன்னுலன்றே இப்பிரபஞ்சம் வியாபிக்கப்பட்டது.

3. நின்பொருட்டு முன்னும் பின்னும் எப்புறம் எத்திசையும் நமஸ்காரமாகக் கடவது. அமிதமான சாமர்த்தியமும் வல்லமையும் உடைய நீ ஸர்வத்திலும் ஸம்பூர்ணமாய் வியாபித்திருக்கிறுய். ஆதலின் ஸர்வ ரூபமும் நீயே ஆகின்றனே. உமது பாதமலர் பணிகின்றேம்.

4. ஓ திவ்யாத்புத ரூபா! நீயே தஞ்சமென நம்பி சரணடைந்தவராகிய அடியாரைப் பிழைபொறுத்துக் கைவிடாது காத்து நின்மேல் எங்களுக்குள்ள அன்பை நாங்கள் எப்போதும் மறவாமலும், துன்மார்க்கங்களில் செல்லாமலும் அறிவளித்து அநுக்கிரகித்து ரக்ஷிப்பாயாக. ஓம் தத் ஸத்.

பழகிய பழய நாள் நினைவு.

சின்னஞ்சிறு வயதினில் இருவரும் ஒன்றுய்க்கூடி விளையாடியதையும், பேசி மகிழ்ந்ததையும் எண்ணி ஒருவன் அப்பால்ய நண்பனிடம் சென்றுவரவும், சிலநாள் அவனிடம் தங்கி இன்புறவும் எண்ணுகிறுன். தனக்கு அந்த ஒரு இடம் எப்போதைக்காவது உதவுமென்றும் நெடுநாளாக நினைத்துள்ளான். பிறகு தன் ஊரிலேயே அவர்களைச் சந்திக்க நேருகிறது. முதல் இரண்டுநாள் மிக்க உற்சாகமான பேச்சுகள். பிறகோ அந்தப் பால்ய நண்பன் முற்றும் சுயநலம் பேணுபவனுய் விலகும் தன்மையினனுய், அதிகம் ஒட்டி உறவாடாதவனுய்த் தோற்றப்படவே இவனும் ஒதுங்கிப் பால்யத்தின் ஸ்நேகுணம் இன்னும் அவ்விதமே அவனிடம் மாறுமல் நிலைத்திருக்குமென்று கருதிய தனது அனுபவமின்மைக்கு நொந்துகொண்டு தேறுகிறுன். இதுவே பலரிடத்தும் இன்று காணும் சங்கதி. ஒரு பருவத்தின் குணம் மற்றொரு பருவத்தில் இருப்பது அரிது.

நமது சந்தா நேயர்கட்கு
விசேஷ விஞ்ஞாபனம்.

அனுபவ 'அமிர்த'த்தின் அன்பர்காள்!



உங்களுக்கு ஓர் நற்செய்தி! நமது "அமிர்த குணபோதினி" சென்ற தை மாதமுதற்கொண்டு 64-பக்கத்தி லிருந்து 80-பக்கங்களுக்கு உயர்ந்து விட்டது. அதன் ஐந்தாவது பருவம் அடுத்த பங்குனியுடன் பூர்த்தி. அதன் பின் தொடங்கும் சித்திரையில் நமது 'அமிர்த'ச் செல்வி ஆறாவது பிராயம் கொள்கின்றாள். இந்த ஐந்து வருஷங்களாக 'அமிர்த'ச்சுவை கண்டு பரவசம் கொண்டாடிய குணஸம்பன்னர்கள் ஆறாவது ஆண்டிலும் மாறாத பிரேமையுடனும் அத்யந்த உத்ஸாகத்துடனும் அபிமானித்து மேன்மேலும் அபிவிர்த்தி செய்வார்களென அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

ஃ

தற்பொழுது நமது தமிழ்நாட்டில் பொதுப்பத்திரிகைச் சார்பில் ஒரு தலயங்கமும், விகடச்சார்பில் மற்றொரு தலயங்கமும் கொண்டு, அநுபவஞான போதனையில் மகிழ்வூட்டும் மனோல்லாஸ மாதஸஞ்சிகை "அமிர்த குணபோதினி" யொன்றே யுளதென்பது யாவரும் தெரிந்துவைத்த விஷயமே. நமது "அமிர்த"த்திற்கு இணையாக வேறெந்தப் பத்திரிகையையும் சொல்லவொண்ணாது. "அமிர்தம்" அமைந்துள்ள அமைப்பின் வகையில் அது ஒன்றே தான் உயர்வுகொண்டு சிரேஷ்டதரமாய் ஜ்வலிக்கின்றது. அதனை அச்சுக்கோர்த்து அழகுபடுத்தும் மாதிரியே ஒரு தனிவிதம். புகழ் வாய்ந்த "மஹா விகடதூதன்" பத்திரிகைக்குப் பின்பு அதன் சாயலான விகட விநோத பாகங்கள் "அமிர்த குணபோதினி" யொன்றில் தான் கண்டு மகிழக்கூடியதாயுளது. பத்திரிகையின் முதல் பக்கத்தை பக்திஞான விஷயங்களால் தொடங்கும் அமைப்பினை "அமிர்தம்" ஒன்றே தான் கொண்டிருக்கின்றது. ஒரு வியாசத்தின் கருத்தை விளக்கும் வழியில், எடுத்துக்கொண்ட விஷயத்தை வெகு நுட்பமான ஆராய்ச்சியினோடும் விசால ஹிருதயத்தினோடும் வெகு தெளிவாக விளக்கி ஆரம்பமும் முடிவும் பொருந்தி தோன்றப் பூர்த்தி செய்யப்படுகின்றது. முன்பு நாம் நடத்திய "திராவிடாபிமானி"ப் பத்திரிகை, இப்போதும் நடைபெறும் "பிரஜாநுகூலன்" பத்திரிகை, நாம் இயற்றிய "ஆநந்தகதா கல்பக"த்தின் ஆறு வால்யங்கள், இவற்றின் கொள்கைகள், சாயல்கள் யாவற்றையும் "அமிர்த குணபோதினி"யில் தழுவிச் சென்றிருக்கின்றோம். நகைச்சுவை மிக நல்கும் "நமது கடை" முதலியன முற்றிலும் உலக அநு

பெண்கள் அசைவதும், குனிவதும், திரும்புவதும், நடப்பதும், பேசுகையில் கை அபிநயமும் ஒவ்வொன்றும் ஒவ்வொருவித அழகாகப் புருஷர்களுக்குப் படுகின்றது. அவ்விதமாக ஆடவர்கள் தங்களிடமும் ஒருவித அழகை ஒவ்வொரு வகையிலும் காண்பித்துக்கொள்ள முடிகிறதில்லை. அதற்குப் பதிலாக க்ஷவரம் செய்யாத சோர சோரப்பு முகம்தான் முன்னேவந்து நிற்கிறது!

பவங்களே. பிரதி தடவையும் வெளி வரும் பத்திரிகையின் தலையங்கங்கள் எத்துணையோ சிரமத்துடனும் அனுபவஞான ஆற்றலுடனும் சிந்தித்து வரையப்படுகின்றன. இன்னும் பழமொழிக் குறிப்புகள் போன்ற பலவற்றையும் அவ்வவற்றை அமைக்கும் அழகான முறைகளையும் ஒழுங்குகளையும் மனஸ்பூர்வமாக உழைத்துப் பூர்த்தி செய்து வருகின்றோம். ஸ்வாரஸ்யமான அடிக்குறிப்புகள், விளைவுக்குறிப்புகள், வலது இடது பக்கக் குறிப்புகள் இவையெல்லாம் "அமிர்த குணபோதினி"யின் விசேஷித்த பூஷணங்களாகும்.

ஃ

பத்திரிகைத் தொழிலில் நாம் பெற்றுள்ள முப்பது வருஷகால அனுபவத்தை நமது அமிர்த குணபோதினியில் பூர்த்தியாகச் செலுத்தி, பத்திரிகைக்கான விஷயங்களில் முக்காற் பகுதியை நாமே எழுதி நிறைவேற்றுவித்து, எஞ்சிய கால் பகுதியை மட்டும் அன்பர்களின் விஷயதானங்கட்கு விட்டிருக்கின்றோம். நிலத்திற்கு உடையவனே வர்பிடித்து உழுது பயிர் செய்வதாயின் அது விசேஷித்த பலன் தருமன்றோ? அக்கருத்துடன் நாமே பத்திரிகையின் பக்கங்கள் பெரும்பான்மைக்கும் இரவும் பகலும் சிந்தித்து உழைத்து எழுதி வருகின்றோம். மாதப் பத்திரிகையின் ஓர் முக்கிய அம்ஸம் யாதெனில், அதில் வெளிவரும் விஷயங்கள் இப்போதைக்கு மட்டுமல்ல, இனி ஒரு நூறு வருஷங்கட்குப் பிறகுங்கூடப் பயனளிக்க வல்லதாய், வெறும் வர்த்தமானக் குறிப்புகளைத் தழுவிய வியாசங்களாயில்லாமல் அறிவுக்கு உணவாம் ஆநந்தக் களஞ்சியமாய் அர்த்தபுஷ்டியுள்ளதாய் இருக்கவேண்டுமென்பதே. இந்த முக்கியமான கருத்தை நாம் மனதிற்கொண்டு பிரதி தடவையும் ஒவ்வொரு விஷயத்தையும் நன்கு ஆராய்ச்சி செய்து பல காலங்களுக்கும் பயன்படும்வழியில் அவை உள்ளனவாவென்பதை முக்கியமாய்க் கவனித்துப் பார்த்து அதற்கேற்ற முறையில் ஒவ்வொன்றையும் பக்குவப்படுத்திப் பதிப்பித்து வருகின்றோம். நமது உழைப்பு மனஸ்பூர்வமான பரிசுத்த உழைப்பு. இந்த உண்மையான உழைப்புக்கு நமது அன்பர்களின் ஆறுவது வருட ஆசியை விரும்புகின்றோம்.

ஃ

அந்தந்த ஆசிரியர்களின் எழுதுகோலைப் பொறுத்துப் பத்திரிகையின் சுவையும் இருக்குமென்பர். அந்த உண்மை மாதப் பத்திரிகை, வாரப் பத்திரிகைகளிலுமே மிக விளங்கும். தினசரிகளில் பத்திராசிரியர்கள் மாறினும் அந்த மாறுதலைப் பத்திரிகையின் முகத்தில் அவ்வளவாகக் காணமுடிகிறதில்லை. காரணம், முக்கியமாய்ப் பல உதவி ஆசிரியர்கள் ஒருங்கு சேர்ந்து எழுதியே தினசரிப் பத்திரிகைள் பூர்த்தி பெறவேண்டியிருப்பதில், ஆசிரியர் விலகினும் அதிகமான வித்தியாசம் தென்படுவதில்லை. ஆனல், வார—மாதப் பத்திரிகைகளிலோ அதன் ஆசிரியரே பெரும்பான்மையும் வரைபவராதலின் அவரது கைபாக அமைப்பும், அவரது சாயல் தத்துவங்களும் பத்திரிகையினுள் ஸம்பூர்ணமாக அடங்கியிருக்கும். அவ்விதமே "அமிர்த குணபோதினி"

பேதபுத்திக்காரர்களின் போக்கு தெரியாமலா இருக்கிறது? அவர்களைப் போலவே மற்றவர்களும் கபடமாகவே குலாவிவிட்டுச் செல்கின்றனர். கபடத்திற்குக் கபடமே சன்மானம்.

யில் நமது மூப்பது வருஷகாலப் பத்திரிகா அறிவும், ஆராய்ச்சியும், அதனைச் சம்பந்தித்த அநுபவ ஞான கலாவிலாஸங்களும்கூடி ஒரு தனிச்சுவையுடன் பொருந்தியதாய் நிறைந்துள்ளன. இதுகாறும் ஒரு விஷயம் வரைதற்கு இரண்டு தினங்கள்வரை நாம்யோசித்திருந்தால், இனி நான்கு தினங்கள் வரையும் நன்கு சிந்தித்து முன்னிலும் அத்யந்த ஸ்வாரஸ்யமாய் எழுதிப் பத்திரிகையை அலங்கரிப்பதாகவும், அவற்றை ஆறுவது ஆண்டு முதல் இனிது காணலா மென்றும் நமது அன்பர்களுக்கு நாம் நல்வாக்கு கொடுக்கின்றோம். இனி ஆரம்பிக்கப் பெறும் "அமிர்த குணபோதினி"யின் ஆறுவதுவாஷ்யந்தினை இப்போதுள்ளதைவிட இன்னும் அதிக சிறப்பாகவும் மேன்மையாகவும் நடத்தி வருவோமென்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஃ

ஆதலின், ஆறுவது வருட சந்தாவை நமது கையொப்பநேயர்கள் இது முதற்கொண்டே அனுப்பி வைத்து நமது முயற்சியை மேன்மேலும் ஆதரித்து உத்ஸாக மூட்டுமாறு அதிவிநயமாய் வேண்டுகின்றோம்.

S. G. இராமாநுஜலு நாயுடு,
பத்திராசிரியர்.

யோக்யதையின் பொறுப்பு.

ஒருவன் கையில் கால்ரூபாய்கூட இல்லை. செலவுக்கு அவ்வளவு நெருக்கடி. தெய்வமேயென்று அலறுகிறான்; தவிக்கிறான். நாலு இட்டிலி யுண்பவன் ஒரு இட்டிலியுடன் நின்றுவிடுகிறான். புசிப்புச் செலவையும் வெகு சிக்கனத்தில் வைத்துங்கூட மறுதினத்திற்குச் செலவிட ஒருவகையும் காணவில்லை. அவன் நம்பி எதிர்பார்த்த பணமும் வரவில்லை. இச்சமயம் ஒருவன் வந்து தான் தந்து சென்ற ஒன்பது ரூபாயைக் கொடு என்கிறான். உடனே பெட்டியைத் திறந்து ஒரு பொட்டணத்தை யெடுத்துவந்து அவனிடம் கொடுக்கிறான். அதில் நான்கு ரூபாய்கள் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றில் மடிக்கப்பட்டுள்ளது. அவன் சந்தோஷத்துடன் பெற்றுச் செல்கின்றான். இன்னொரு பெண் வருகிறாள். நான் நேற்று கொடுத்த இருபது ரூபாய் நோட்டை மாற்றிவிட்டீர்களா என்கிறாள். ஆஹா! என்று இருபது ரூபாய்களை எடுத்துவந்து அவளிடம் தந்து அனுப்புகிறான். அவனது கஷ்டத்திற்கு அந்தப் பணத்திலிருந்து ஒரு ரூபாயாவது கடனாக எடுத்துக் கொண்டிருக்கலாமே? யோக்கியதையான உத்தம உள்ளம் அப்படி எடுப்பதை மறுத்துவிட்டு எல்லா கஷ்டங்களையும் தாங்குதற்கே சந்தோஷமாய் உடன்படுகிறது. யோக்கியதையின் பொறுப்பு அவ்வளவு மகத்துவமுடையது. அது மகா பெரியது.

அமிர்தகுணபோதினி

பிரமோதூதஹு மாசிமீ 1௳

உணர்ச்சியின் வேறுபாடுகள்.

ஆடுதலும் பாடுதலும் நாடுதலும் ஓடுதலும் கூடுதலும் யாவும் அந்த ஜீவன் சரீரத்துடன் ஒட்டியிருக்கும்வரையுமே தான். ஜீவனோடுள்ளவரை உணர்ச்சியும் உண்டு. ஜீவன் பிரிந்தால் உணர்ச்சி நீங்கி தேகம் கட்டைபோலாகின்றது. ஜீவன் இருக்கும்போதுகூட பாரிசவாயுவால் பாதிக்கப்பட்ட இடம் உணர்ச்சியற்றதாகின்றது. திமிர் பிடித்த இடத்தில் கையால் சுரண்டினாலும் தெரிவதில்லை. மிதமீறிய சிற்றின்பப்பிரியனுக்கு இன்ப உணர்ச்சி தவறிப்போய்விடுதல் எத்தனையோமுறை காணும் ஸம்பவம். உணர்ச்சியிருத்தலால்தான் குளிரின் நடுக்கத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் அறிய முடிகிறது. உணர்ச்சியின் துணைகொண்டே தேகம் ஏற்றுக்கொள்ளக் கூடிய சூட்டையறிந்து அந்த ஒரு அளவுக்கு உட்பட்ட சூடுடன் ஆகாராதிகளைப் புசிக்கிறோம்; வெந்நீரால் நாவு கொப்பளித்துவிடாதபடி மித உஷ்ணமாய் ஆற்றிப் பருக முடிவதும் உணர்ச்சியினாலே தான். அதிக சூடாயிருப்பின் அதை அருந்த நாவின் உணர்ச்சி மறுத்துவிடுகிறது. சாதத்துடன் ஒரு ரோமம், கல் சேர்ந்துவிட்டபோது அதையும் நாக்கு உணர்ச்சியால் அறிந்து வெளியில் துப்பச் செய்கிறது. ஒருவித உணர்ச்சியின் மூலமாகத் தாங்கள் கர்ப்பிணிகளாயிருப்பதாக நங்கையர் உணர்கின்றனர். ஜீவவர்க்கங்களுக்கு மட்டுமன்று; விருக்ஷாதிகளுக்கும் உணர்ச்சியுண்டு; தொட்டாற் சுருங்கி என்ற மூலிகை கைபட்டதும் சுருங்குதலான உணர்ச்சியைக் கொண்டது. மனிதனின் வாழ்நாளும், ஜீவப்பிராணிகளின் ஜீவியகாலமும் உணர்ச்சிகளுடன் கூடியதே. உணர்ச்சி உள்ளவரையுமே உலகு. ஃ

ஒரு தாயின் வயிற்றிலுதித்த மக்கள் பல்வேறு வகைப்படுவதும் அவரவர்க்குத் தோன்றிய உணர்ச்சிகளின் மாறுபாடுகளாலே

ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு வாக்கியத்திலும் அறிவின் பொக்கிஷமாகிய உயர்ந்த கருத்துகள் இருக்கின்றனவா என்பதிலேயே "அமிர்த குண போதினி" தன் முழுக்கவனத்தையும் பிரதிதடவையும் செலுத்தி வருகின்றது.

யேயாகும். உத்தியோக உணர்ச்சி மிகுந்தவன் வாசிப்பில் அதிக ஊக்கமுள்ளவனுகின்றுன்; மற்ருெருவனுக்கு வியாபார உணர்ச்தியில் மனம் திரும்பி அதில் வல்லவனுகின்றுன்; வேருெருவனுக்கு வியவசாய உணர்ச்சி மிகுந்து நிற்கின்றது; இன்னெருவனின் உணர்ச்சி கைத்தொழில்களைக் கற்பதில் செல்கின்றது; கடைசியில் ஒருவன் சோம்பலான உணர்ச்சியுடன் உண்ணுதற்கும் உறங்குதற்குமேதான் பிறந்ததென்று நினைக்கிறுன்; தேகத்தை உழைத்து வேலைசெய்ய அவனுக்குப் பிரீதி இருப்பதில்லை. ஒருவரையொருவர் கண்டதும் திடீரென்று ஒரு உணர்ச்சி தோன்றி இருவரையும் ஒன்றுகூட்டிவிடுகின்றது. ஃ

உணர்ச்சிகள் எங்கும் ஓரேவிதமாய் இருப்பதில்லை; எத்தனையோ பேதங்கள் அதில் உள்ளன. எல்லா உயிர்கட்கும் இரங்கி அவற்றின் துன்பத்தை நிவர்த்தித்து ஜீவகாருண்யத்துடன் விளங்கவேண்டுமென்பதும், பாவ புண்ணியங்கட்கு அஞ்சவேண்டுமென்பதும், பிறருக்குத் தாம் நலம்புரிந்து அதனுல் அவர்கள் மகிழ—அந்த மகிழ்ச்சி நோக்கித் தாம் இன்புறுதல் என்பதும் பொதுவாக யாவருக்கும் ஏற்பட்ட பொது உணர்ச்சியாகும். வெவ்வேறுபட்ட ஆடவர்—மகளீரது உணர்ச்சிகளை விவாகம் ஒற்றுமைப் படுத்துகின்றது; இரு சரீரங்களும் ஒன்றுடனென்று கூடுதல் போன்று அன்னோரது உணர்ச்சிகளும் ஒன்றையொன்று தழுவிக் கொண்டு "இரண்டு" என்ற பேதம் அற்று ஓர் உருவாகிவிடுகின்றன. அதன்பயனுக செல்வத்தையும் வறுமையையும் மனமொத்து அனுபவிக்க சதிபதிகளிருவரும் சம்மதிக்கின்றனர்; தமக்கு உதித்த குழந்தையினிடத்து இருவரும் ஒரேவித வாத்ஸல்யம் கொள்கின்றனர். தம் மக்களின் க்ஷேமத்திற்காகத் தாய் தந்தையர் எத்துணையோ சகிப்பு உணர்ச்சிகளைத் தாங்குகின்றனர். தமது குமாரன் குமார்த்திகளுக்கு விவாகம்எனில், அன்னை பிதா இருவரின் மனத்திலும்ஒரே விதமான ஆநந்த உணர்ச்சி ஜனிக்கின்றது. உணர்ச்சிகள் ஓரிடத்தில் ஒன்றுபடுதலும், பிறிதோரிடத்தில் பிரிந்து பேதப்படுதலுமாய் நாநாவிதங்களாயுள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு தருகிறேம்.

ஃ

1. நாயக நாயகி உணர்ச்சி:—ஸதிபதிகள் தம்முள் உணர்ச்சியில் ஒன்றுபட்டிருப்பினும் பல சமயங்களிலும் பிரிந்துவிடுகின்றனர். இருவரும் சரீர சம்பந்தத்தால் இன்பவுணர்ச்சி கண்டனரேனும் ஒருவரின் உணர்ச்சியை

எவர்களிடம் நாம் அதிக ஆழ்ந்த அன்பை வைக்கிறேமோ அவர்களுக்கே கடிதம் எழுதப் பல நாளும் தவறி விடுகிறேம். நமது செய்கை நம்மையே சித்திரவதை செய்கிறது. நம்மீது பிரிய முன்னவர்கள் நம்மை மன்னித்தாலும் நமது தாமதத்திற்கு நாம் நம்மை மன்னித்துக் கொள்ள முடிகிறதில்லை.

மற்றவர் அறிவதற்கு முடிகிறதில்லை. இந்த விஷயத்தில் நேர்ந்த பிளவு பல விஷயங்களிலும் பிளவை யுண்டாக்குகின்றது. கணவனே வருவாய் குன்றி எவ்விதமோ சம்சார பாரத்தைச் சமாளித்துச் செல்கிறான். அவன் மனைவியோ அவனது ஸஞ்சலங்களை உணர்வதில்லை. "அந்த என் நகையைச் செய்வதற்குத்தானு பணமில்லை?—இந்த செலவுகளுக்கெல்லாம் பணம் இருக்கிறதா" என்று குத்திப் பேசுகிறாள். அவள் கணவனே, "என்ன இவள் இவ்வளவு அறியாத மூடமா யிருக்கிறளே; என் கடன் கஷ்டங்களை யுணராமல் இப்படிப் பிடுங்குகிறளே என்று நொந்த உணர்ச்சியுடன் துக்கிக்கிறான். மற்றோரிடத்தில் கணவனுக்குப் பாங்கியில் பணத்தைப் போட்டு வட்டியால் பெருக்க வேண்டுமென்ற உணர்ச்சி; மனைவிக்கோ தான் பொன் காய்த்த மரமாக நிற்கவேண்டுமென்ற உணர்ச்சி. இப்போதைக்கு எவ்வாறேனும் குடும்பச் செலவுகள் நடந்தாற்போதுமென்பது மனைவியின் உணர்ச்சி. இனி வருங்காலந் தன்னிலும் தன் குடும்பம் ஏங்காதிருக்க ஒரு திரவியசேகரம் நாடவேண்டுமென்பதில் கணவனின் உணர்ச்சி. காதலர் இருவருள்ளும் பரஸ்பரம் காதலித்தலான ஒத்த உணர்ச்சி ஒருபுறம் காணப்படினும், மற்றொருசார் அந்தரங்கத்தில் மாறுபட்ட உணர்ச்சிகளும் புகுந்துகொள்கின்றன. கணவனை முத்தமிடுகையில் ஒரு உணர்ச்சி; அதே முத்தத்தைத் தன் குழந்தைக்கு இடும்போது வேறொருவித சுக உணர்ச்சி.

2. **மறைக்கும் உணர்ச்சி:**—நாயகன் தன் பணம் வரவு செலவு இனங்களைத் தன் மனைவியின் தொந்தரைக்கு அஞ்சி மறைக்கும் உணர்ச்சி கொள்கிறான். எத்துணைப் பாந்தவ்யம் மிகுந்திருப்பினும் கணவன்—கணவி இருவருக்குள்ளும் எழுகின்ற பல உணர்ச்சிகளை ஒருவருக்கொருவர் வெளியிட்டுக்கொள்ள இயலாமல் மறைக்கவும் வேண்டியுள்ளன. கற்பினுக்கு அரசியான பாஞ்சாலியே தன் மனம் கர்ணனிடத்திற் சென்றதை மறைத்து வைக்கும்படி நேர்ந்தது. ஒரு அன்னிய புருடனுடன் ரமித்ததாகக் கண்ட கனவை ஒரு நங்கை தன் பிராணபதியிடம் வெளியிட இயலுமோ? தன் கணவனிடத்திலேயே பல தடவைகளில் தன் அங்கங்களையும், தன் ரகசிய அவஸ்தைகளையும் மறைத்துக்கொள்ளும்படியான ஒரு உணர்ச்சி அவளது நாணத்துடன் இயற்கையிலேயே புகுத்தப்பட்டுள்ளது. எவ்வளவு மனே ஒற்றுமையிலும் இவ்வுணர்ச்சிப்பிரிவு நேராமலில்லை.

3. **இனவுணர்ச்சி:**—மிருக பக்ஷி வர்க்கங்களிலும் தன் இனத்துடன் அபிமானம் கொள்ளும் உணர்ச்சியுண்டு. வீட்டிற்கு வந்த தன்னவர்களை (தாய் வீட்டினவரை) வரவேற்கும் இனவுணர்ச்சி பெண்மணியின் இருதயத்தில் ததும்ப, அவள் கணவனே இதென்ன பெருங்கூட்டம், இதென்ன பெருஞ்செலவு என்ற அன்னியத்தன்மையான பேதஉணர்ச்சியைக் கொள்கிறான். அந்த கணவனுக்கே அவனைச் சேர்ந்தவர்கள் இல்லத்திற்கு வந்துவிடின் இன உணர்ச்சி மிகுந்தவனாய் அன்னோரை உபசரிக்குமாறு மனைவியை வேண்டிக்

பலர் கூடிச் செய்யும் காரியமும் உண்டு. ஒருவரே செய்தாக வேண்டிய காரியமும் உண்டு. ஒருவரது தலைமையில் அவர் ஏவ, ஒவ்வொரு பகுதியையும் ஒவ்வொருவராகப் பலர் செய்ய, அவ்வகையில் முடியும் காரியமும் உண்டு. இருவரான சதிபதிகள் மட்டுமே சேர்ந்து செய்யவேண்டிய காரியமும் உண்டு. அதது அந்தந்த சமயம் போல அவசியப்படுகிறது.

கொள்கிறான். இந்த வேண்டுதல் மனைவியைச் சேர்ந்தோர் வந்தபோது அவ்வளவாகத் தோன்றுவதில்லை.

4. பாத்தியதையின் உணர்ச்சி:—ஒன்றில் ஒரு பாத்தியதை—பிடிப்பு—ஏற்படாமுன்னர் அதில் எவ்வித உணர்ச்சியுமில்லை. ஒரு பெண்ணை மனைவியாகவோ, மருமகளாகவோ கொள்ளுமுன் அப்பெண் இறந்துவிடில் அதற்காக அதிக வாதனை உணர்ச்சி தோன்றுவதில்லை. விவாகம் நடந்தபின் அப்பெண் மரிப்பினோ அப்போது எழும் உணர்ச்சி எத்துணையோ துயராகாரமன்றோ? பாத்தியதை இல்லாதபோது உணர்ச்சியுமில்லை; பாத்தியதை ஏற்பட்டதும் உணர்ச்சியும் தோன்றிக்கொள்கின்றது. ஒரு மாமியின் உணர்ச்சி தன் குமார்த்தியைக் கொடுத்த வகையில் மருமகனின்மீது தோன்றி, அக்குமார்த்தி மரித்தால் மருமகன்மீது வைத்த பற்றுதலான உணர்ச்சியும் மங்கிவிடுகிறது. தந்தையுடன் பிறந்த சகோதரியான அத்தையின் உணர்ச்சி அவன் கொடுத்த பெண் இறப்பினுங்கூட தன் ஸகோதரனின் குமாரனிடம் என்றும் பற்றுதலான உணர்ச்சியே கடைசிவரையும் கொள்கிறான். இது பிறந்த நாள்தொட்டுண்டான பாத்தியதையின் உணர்ச்சியாகும்.

5. பூர்வ ஜென்ம உணர்ச்சி:—ஒரே தாயின் வயிற்றில் பிறந்த மக்களுள்ளும் ஒவ்வொருவரிடத்து ஒவ்வொரு உணர்ச்சி தோன்றுகிறது. ஒவ்வொருவனும் ஒவ்வொரு தொழிலில் பழக்க உணர்ச்சி பெறுகிறான். ஒருவன் உத்தியோகஸ்தனாக, ஒருவன் வியாபாரியாக, ஒருவன் சங்கீத வித்வானாக, ஒருவன் போர்வீரனாக—இவ்விதமாய் உணர்ச்சிகளுக்கேற்ப அதில் சிந்தை செல்கின்றது.

6. உடன்பிறப்பின் உணர்ச்சி:—தங்கை தமயன், தமக்கை தம்பி இவ்வகையில் எழும் உணர்ச்சி ஒப்பற்றதான ஒரு தனிவகை.

7. துவேஷ உணர்ச்சி:—ஒரு கொடுஞ்சூரியான மாமியின் உணர்ச்சியும், துவேஷமே நிறைந்த மருகியின் உணர்ச்சியும் மிகக் கொடூரமானவை. துவேஷஉணர்ச்சி தோன்றியதும் கொலைக்கும் அது துணிகிறது. பக்கத்து வீட்டுத் துவேஷம், பந்துவின் துவேஷம், நேசர்களின் துவேஷம் எவ்வளவோ கொடுமை செய்கிறது. மகன் செத்தாலும் சாகட்டும், மருமகள் தாலியறுத்தால் போதுமென்கிறது. எடுத்ததற்கெல்லாம் தப்பிதம் கண்டுபிடிக்கிறது.

8. மோக உணர்ச்சி:—ஆரம்பமுதற்கொண்டே மோக புத்தியுடன் இந்த உணர்ச்சி உறவாடிக் கழுத்தை யறுக்கிறது. எந்த அல்பத்தையும் ஒரு தஸ்தாவேஜியாகப் பத்திரப்படுத்தச் செய்கிறது.

9. இரத்த சம்பந்த உணர்ச்சி:—இந்த உணர்ச்சி இலகுவில் விட்டுப் பிரியாதது. தன் பெண்ணைச் சிறுவயதில் விட்டுத் தூரநாடு சென்ற தந்தை

மாதிரிப் பத்திரிகைக்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டுமென்று தெரிவித்திருந்தும் பலர் ஸ்டாம்பு அனுப்பாமல் வெறும் கார்டு எழுதுகிறார்கள். அக்கார்டுகள் குப்பையில் போடப்படுவதை இவர்கள் அறிவதில்லை. சிலர் வெகு பேரைச் சந்தாதாரராகச் சேர்த்து விடுவதாகச் சொல்லி மாதிரிப் பத்திரிகை வேண்டு மென்கிறார்கள். இவர்களின் பொய் தெரியாமற் போகவில்லை.

அநேக வருடங்கட்குப் பின் தன் ஊர் திரும்பி மங்கைப் பருவத்துடனுள்ள ஒரு நங்கையைக் கடைவீதியில் கண்டு என்னவோ ஒரு இரத்தபாசம் தோன்றிக்கொண்டு, அவளை விசாரிக்கப்போக, முடிவில் அவளே தன் குமார்த்தியென்று அறிகிறான். ஒருவரையொருவர் உடன்பிறப்பென்று உணராமலே பாசஉணர்ச்சி கொண்டதுமுண்டு. வீட்டில் ஒருவர் அபாயத்திற்காளாக அதை இரத்த சம்பந்த உணர்ச்சி தூர நாட்டி விருப்பவனின் மனத்தில் மின்சாரம் போன்று பாயச்செய்வித்து அவனை ஒரு கலக்கு கலக்கிவிடுகிறது. திடீரென்று தன் மனதில் வியாகூலம் உண்டானதை யறிந்து தன் வீட்டில் எவருக்கு என்ன ஆபத்தோ என்று தவித்துக் கதறுகிறான். அவன் மனம் ஒரு நிலை கொள்ளாது துடிக்கின்றது. பரிதாபம்!

10. அலக்ஷிய உணர்ச்சி:—ஒருவரின் உணர்ச்சியை மற்றவர் மதியாது அலக்ஷியம் செய்வதுமுண்டு. பொதுவாக ஒருவரின் உணர்ச்சியை மற்றவர் அறிதற்கு முடியாமலே போய்விடுகிறது. மனமொத்த தேக சம்பந்தத்திலும் கூட ஆடவரின் உணர்ச்சி வேறாகியும், மகளிரின் உணர்ச்சி வேறாகியும் போய் ஒருவரின் உணர்ச்சியை மற்றவர் மதிக்காமலும் சிலசமயங்களில் சுயநலமாய் நடந்துகொண்டும் விடுகின்றனர். தன் தாய்வீட்டினரின் நோய் மரணம் கேட்டு மருமகள் கதற, மாமியோ அதை மதியாமல், இப்போதுதானே தந்தி வந்தது, சாயந்திரமல்லவா ரயில் போகிறது, அதுவரை வீட்டுவேலை செய்யப் போ என்கிறாள். பிறர் படும் பிணி உபாதையை மற்றவர் அலக்ஷியம் செய்கின்றனர். பக்கத்துவீட்டுச் சுவர் விழுந்ததென்றால் எதிர்வீட்டுக்காரனுக்கு அது ஒரு அலக்ஷ்யம். நியாயஸ்தலத்தில் கைதி கதற, நீதியதிபரோ அதை லக்ஷியம் செய்வதில்லை. இந்த நீதியதிபதியே ஒரு லஞ்சக் கேசில் சிக்கிக்கொள்ளின் அப்போதுதான் கைதி கதறிய உணர்ச்சி நெஞ்சில் தைக்கும். ஒருவன் மற்றவனையோ, ஒரு பிராணியையோ கொல்லுகையில் அவைகள் படும் அவஸ்தையையும் அலறுதலையும் அலக்ஷியம் செய்கிறான். அவனே பின்னர் விரோதிகளிடம் சிக்கிக் கொலை செய்யப்படுகையில்தான் தான் கொன்றவற்றினது அவஸ்தையை அறிய முடிகிறது. அடுத்த வீட்டிற்கு ஒரு தபாற்கடிதம் வந்து அவர்களைச் சேர்ந்தோர் இறந்ததற்காகப் பிரலாபிக்க, அதுகேட்டுப் பக்கத்து வீட்டினன் அலக்ஷியமா யிருந்துவிடுகிறான். பின் அந்தக் கடிதத்தின் விலாசம் தனக்கே எழுதப்பட்டிருப்பதாயும், தன்னவர்களிலே ஒருவர் மரித்ததாயும் அறிகிறபோது முன்செய்த அலக்ஷியம் பறந்து போய் இப்பொழுது அவனே கதறத் தொடங்கிவிடுகிறான். குடும்பத்தலைவன் செலவுக்குக் கலங்கும் கண்ணீர்களையும் கவலைகளையும் உட்கார்ந்து உண்போர் லக்ஷியம் செல்வதில்லை. எஜமானனின் கவலைகள் வேலைக்காரனுக்கு அலக்ஷியம். வேலைக்காரனின் தவிப்பு எஜமானனின் மனதில் படாது. காலையில் ஒரு காசும் கையிலின்றி கலங்கும் வேளையில் விருந்தினர் சூழ்ந்துகொள்ள, அந்தோ! அத்தருணம் குடும்பத்தலைவன் கலங்கும் உணர்ச்சி தெய்வமே அறியும். விருந்தினரோ அதை அறியாததுபோல் ஜாடையாக இருந்துவிடுவர். பிறர் வீடு தீப்பற்றுகையில், பிறர் வீட்டில் மரணம் நேர்கையில் அலக்ஷிய உணர்ச்சி; அதுவே தன்வீட்டில் ஸம்பவித்தாலோ?

நகைகள் வேண்டுமென்கிற பெண்கள் குடும்பத்தைச் செட்டாக நடத்திக் கணவனின் கையில் இரண்டு ரூபாய் மிஞ்சும்படி செய்தாலல்லவோ?— அந்த நல்ல சிக்கன புத்தியில்லாமல் காசுமாலைக்கு ஆசைவைத்து என்செய்ய?

11. கால உணர்ச்சி :—இது சேர்க்கவும் செய்கிறது ; பிரிக்கவும் செய்கிறது. ஒருவரையொருவர் பன்முறை கண்டிருப்பினும் பற்றுதலான உணர்ச்சி தோன்றுவதில்லை. பிறகு ஒரு காலத்தில் திடீரென்று ஒரு ஸம்பவம் நேர்ந்து கொள்ள, அதிலிருந்து இருவர் மனமும் ஒருவரை யொருவர் விரும்பும் உணர்ச்சி மேற்கொண்டு பற்றுதல் மிகுந்து ஒன்றுபட்டு விடுகின்றனர். பிறகு அவர்கள் தத்தம் ஊர்களுக்குச் செல்லுகையில் கண்ணீர் விட்டுப் பிரிவாற்றாது தவிக்கின்றனர். இத்தகைய உத்கிருஷ்டமான அன்பு மற்றோர் காலந்தன்னில் சயாலம் முற்றியதின் காரணமாக மாறிப்போய் விடுகின்றது. தன்னைப் பிரீதித்தவரையே தான் இகழ்ந்து பேசிட, இகழப்பட்டவரின் நெஞ்சம் புண்ணாகிக் கதற, பிறகு இருவரும் தூரதூரப் போய்விட—முடிவில் விலக நேர்கிறது. இவர்களின் வேறுபட்ட உணர்ச்சி பிறகு ஒன்றுவதில்லை. பிரிந்தது பிரிந்ததே. பிறகு சேரினும், கிழிந்த இடத்தில் தைத்தது போலவேதான். என்ன தைத்தாலும் தைத்த அடையாளம் தெரியும்; பிறகு கிழிவதும் அந்த இடத்திலேயே தான்.

12. பாச உணர்ச்சி:—ஓடும் ரயிலினின்று குழந்தை தவறிவிழ, தாயோ தந்தையோ உடனே கீழே குதித்து விடுகின்றனர். குற்றாலத்து அருவியில் விழுந்த புத்திரியை அலறிப் பிடிக்கப்போய் ஸ்ரீமான் வ. வே. சு. ஐயர் உயிர் துறந்தார். பர்த்தாவின் வியாதி கேட்ட பதிவிரதையின் உணர்ச்சி எப்படி! தன் மனைவிக்குப் பிராணாபத்து என்ற தந்தி கண்டு உடனே புறப்படும் கணவனின் உணர்ச்சி எப்படி? தம் மக்களே இவ்வுலகத்துச் செல்வமென நினைக்கும் பெற்றோரின் உணர்ச்சி எப்படி? அந்த மக்கள் தம் பெற்றோரையே தமக்கு ஜீவாதாரமாய் நம்பிக்கிடக்கும் உணர்ச்சி எப்படி? சகோதர வாஞ்சையின் உணர்ச்சி எப்படி? தன்னை வளர்த்து வாழ்வித்தவர் மீது கொண்டுள்ள உணர்ச்சி எப்படி?

13. அதிர்ஷ்ட உணர்ச்சி :—எத்தகைய வறிஞனும், ஏழ்மைப் பிணியாளனும், சோதனைச் சிக்கலி லுள்ளோனும் தனக்கு ஒரு அதிர்ஷ்ட காலம் பிறகு வருமென்ற உணர்ச்சியே கொள்கின்றான். அவ்வுணர்ச்சியே அவனைப் பல துயரங்கள் தாங்கிச் சமாளித்து உயிர்கொண்டு வாழவைக்கின்றது. அடே! உனக்குப் பெண் பார்த்தாய் விட்டது என்னும்போது அவனது அதிர்ஷ்ட உணர்ச்சி எப்படி? லாட்டரிச் சீட்டில் முதற்பரிசு பெற்றவனின் உணர்ச்சி எப்படி? முதன் முதலாக சாந்தி முகூர்த்த அறையினுட்புகும் சதிபதிகளின் ஆநந்த அதிர்ஷ்ட மனோரம்மிய உணர்ச்சி எப்படி?

14. துரதிர்ஷ்ட உணர்ச்சி :—தன் உத்தியோகத்திற்கோ, வியாபாரத்திற்கோ, தன் தொழிலுக்கோ, தன் குடும்பத்திற்கோ, ஆபத்து வந்து விட்டதென்னும்போது ஒருவன் கொள்ளும் உணர்ச்சி மிக்க கோரமாகும். வேலை காலியில்லை என்று வரும் பதில் கடிதங்கள் தாங்கொணாத் துயர் தருமன்றோ.

15. அவஸ்தையின் உணர்ச்சி :—ஒரு சிற்றெறும்பின் அவஸ்தை உணர்ச்சியும், ஒரு யானையின் அவஸ்தையின் உணர்ச்சியும் ஒன்றே. பகவான் தமது பரமகருணையால் அதிகப்பட்ட அவஸ்தையை உணர இயலாவாறு ஒருவித மூர்ச்சையை அச்சமயம் உண்டாக்கித் தேற்றுகிறார்,

---

கபடம் அதிகமாய்விடும்போது தரித்திரமும் கூடிக்கொள்கிறது. தாராள குணம் பெருகும்போது செல்வமும் பெருகி விருத்திகாண முடிகிறது.

16. போர்வீரனின் உணர்ச்சி :—இது இராஜபக்தியின் கூடியது. தன் உயிரைப் பொருட் செய்யாதது.

17. மதாபிமான உணர்ச்சி :—இது வாழ்வை உன்னத வழியில் அமைப்பது. ஆயினும் இது எல்லை மீறுகையில் மற்ற பரிசுத்த மதங்களைத் தாழ்த்திப் பேசச்செய்து கொடுமை கொலைகளையும் உண்டாக்கி விடுகிறது.

18. தேசபக்தனின் உணர்ச்சி :—இது எல்லை கடந்தது. எல்லா சுதந்திரங்களையும் ஒரு கணத்தில் பெற்றுவிட அவாவுவது. மடமட வென்று தடங்கலில்லாது பேச வைப்பது. சிறை புகச் செய்வது.

19. இராஜதந்திரியின் உணர்ச்சி :—முதலாவதாக இராஜாங்க நன்மையையும், இரண்டாவதாக ஜனங்களின் நன்மையையும் நாடி நிற்பது. வார்த்தைகளைப் பொறுப்பு அறிந்து ஒரு அளவுக்குள் எண்ணிப் பேசச் செய்வது.

20. பக்தனின் உணர்ச்சி :—அவனது ஆத்ம பரவசத்தன்மையில் தன்னையே மறந்து எங்கணும் பகவத் சாயையைக்கண்டு பகவத்தியானத்திலேயே ஆழ்ந்து விடுவது. பரமனைச் சேவிப்பதில் பக்குவ ருசி தெரிந்து சுவைத்துச் சுவைத்துத் தெவிட்டாத இன்பத்தில் மூழ்கி ஆநந்த நடனம் செய்வித்துத் துள்ளித் துள்ளிக் குதிக்க வைப்பது. அந்தப் பக்குவ உணர்ச்சியைப் பக்கத்திலுள்ளவர் பெற இயலா.

21. மான உணர்ச்சி :—கற்பைக் காத்து, நாணயம், யோக்கியதை, பழி அஞ்சுதல் முதலிய நற்குணங்களோடு கௌரவத்துடன் வாழச் செய்கிறது. நாலுபேர் வீட்டிற்கு வந்திருக்கையில் மருகியின் மீதுள்ள துவேசத்தால் அவளையும் தன் குமாரனையும் கண்டபடி கேவலப்படுத்தித் தூஷித்து மானத்தைக் கொலை செய்யும் மாமியின் செய்கை மிக்க நீசத்தனமானது. இவ்விதமே மாமியைத் தூற்றும் மருகியின் செயலும் கொலைகருச் சமமே. மற்றவர் முன் மானம்இழக்கும்படி பேசுதலினும் பெரியபாதகம் சண்டாளத்துவம்வேறில்லை.

22. ஞான உணர்ச்சி :—இது பக்குவ முடையார்க்கே லபிக்கின்றது. அவர்கள் எந்த ஒரு அல்ப வஸ்துவிலும் பெரிய ஞானப்படிப்பினையைக் காண்பர். ஞானபக்குவம் பெற்றவுடன் இவ்வுலகி லிருந்தும் பற்றற்றவராய் விடுவர்.

23. ஜனிப்பிக்கும் உணர்ச்சி :—மனிதர் முதலிய ஜீவ வர்க்கங்களில் தம்மைப்போன்ற ஒரு உருவை ஜனிப்பிக்கும் உணர்ச்சி இயற்கையிலேயே சரீரத்தினுள் அமைந்துள்ளது. அவ்விதமே பூமியும் தனது ஜனிப்பிக்கும் உணர்ச்சியால் எங்கும் செடி கொடி மரங்களை முளைக்கும்படி செய்கின்றது.

24. நேச உணர்ச்சி :—
25. தயாள உணர்ச்சி :—
26. தானதர்மதுண உணர்ச்சி:—

} "நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்"—என்று சுருக்கிச் சொல்லுதல் போதும்.

27. காதல் உணர்ச்சி :—யுவதியான ரமணீமணியை விரும்பிய நெஞ்சம் அவள் கிழவியாய் விட்ட காலத்துங் கூடப் பழய தெய்வாம்சமான காதலில் அணுவும் குன்றாது அபிமானித்து ஆதரித்துக் கௌரவிக்க வைக்கிறது.

வாயிலொரு சிரிப்பு வைத்துக்கொண்டு வஞ்சகமாய்ப் பேசுவோர் எத்தனை பேர்! சிரித்துக்கொண்டே குடி கெடுப்போர் எத்தனை பேர்!

28. காமியின் உணர்ச்சி :—திடீரென்று பெரு வெள்ளம்வந்து மறு தினம் வற்றிவிடும் காட்டாறு போன்றது. அரிப்பு தீர்த்துக்கொண்ட குட்டிச்சுவற்றை நாய் திரும்பிப் பார்ப்பதில்லை. அவ்விதமே காமிகளின் செய்கையுமாம். இவர்களின் கணக்கு ஆசை 60-நாள்; மோகம் 30-நாள். பெண்மணிகளின் ஒவ்வொரு அங்க அசைவிலுங் கருத்து செலுத்திக் காமிப்பர்.

29. மரணஉணர்ச்சி :—இந்த உணர்ச்சியின் அச்சமே தன் குடும்பத்திற்கு முன்னேற்பாடுகளைச் செய்யவைக்கிறது. இவ்வுணர்ச்சியை அநுபவமாகக் கண்டவர்கள் இங்கு இல்லை. கண்டவர்களோ வந்து சொன்னதில்லை. மரணபயம் இருக்கையிலேயே உலகை நிச்சயமாய் எண்ணி அநியாயம் செய்கிறார்களே! இனி மரணமே இல்லாவிடிலோ—என்னென்ன நேருமோ ஈசா!

30. பாடுகளின் உணர்ச்சி :—"நான் படும்பாடு சிவமே உலகோர் தவிலும் பஞ்சுதான் படுமோ—சொல்லத்தான் படுமோ" என்று பாதவிக்கச் செய்வது. "கசப்புணர்ச்சி" என்பது இதிலிருந்தும் தோன்றுவதே.

31. விகல்ப உணர்ச்சி :—விவாகமானதும் மனைவியின் பக்கமாகி சகோதரனை அன்னியனாக நினைக்கவைத்து சண்டாளனுக்குகிறது. மாற்றாந்தாய் இந்த விகல்ப உணர்ச்சியில் பேர் பெற்றவள். சில சமயங்களில் பெற்ற தாயும் கூட குமார்த்தியிடத்திலுள்ள பிரீதியால் தன் குமாரனை அன்னியன் போல நடத்துகிறாள். மருகிமீதுள்ள துவேஷத்தாலுங் கூட.

32. பேத உணர்ச்சி :—தனக்குப் பெண் கொடுத்த உறவுடன் சேர்ந்து கொண்டு, மற்ற பழய உறவைத் தூர உறவாகப் பேதம் காட்டி ஒதுங்கும் தன்மையது. "சுயநலம்" என்பது இதிலிருந்தே ஏற்றுமதி.

33. குழந்தையின் உணர்ச்சி :—வெகு நுட்பமாய் ஒவ்வொன்றையும் கிரகிக்கவல்ல மகாவேகமும் தெய்வத்தன்மையும் அமைந்தது.

34. கலேகளின் உணர்ச்சி :—மனிதனை உயர்ந்த ஸ்தானத்திற்குக் கொண்டு செல்வது. வீடு முற்றிலும் காகிதக் குப்பை யாக்குவது.

35. கலக உணர்ச்சி :—தேசநாசம், குடும்பநாசம், சொத்துநாசம், அன்னியோன்னிய நாசம், உயிர்நாசம் விளைப்பது.

36. சந்தேக உணர்ச்சி:—உள்ள இன்பத்தைக் கொன்று விடுவது; குட்டிச்சுவராகத் தூண்டுவது; குடிகெடுக்க வைப்பது; கொலையில் முடிவது.

37. தீயபழக்க உணர்ச்சி :—பழகுந்தோறும் புதிய உற்சாகத்தைக் கொடுத்து, மறந்துவிட்டகாலத்தும் தூண்டிவிட்டுப் பள்ளத்தில் தள்ளுவது. குடி, சூது, விலைமகளிராசை இவைபோன்றன பலவும் இதனுள் அடங்கும்.

38. அன்னியோன்னிய உணர்ச்சி :—இது மானிடருக்கு இயற்கையில் அமைந்தது. மற்றவருடன் கூடிக் கூட்டமாகவே வாழவிரும்புவது மனித சுபாவம். தனித்து ஏகாங்கியாய் வனத்திற் கிடக்க மனம் ஒவ்வாது.

வெண்பா.

இன்றேநாம் எல்லாம் இனிதாகச் சந்தாவை
ஒன்றாகத் தந்தே உபகரிப்போம்—நன்றாகும்
இன்றிதனில் உண்டோ இயல்புடையப் பத்திரிகை
நன்றாக வோரும் நயந்து.

மு. துரைப்பிள்ளை.

39. சப்த உணர்ச்சி :—உலகம் ஓசை மயம். சப்த உணர்ச்சி ஓர் அரியவான். இவ்வுணர்ச்சியற்றவர் மனோவுணர்ச்சியில் விருத்திகொண்டிடுவர்.

40. திருஷ்டி உணர்ச்சி:—இந்த தரிசன உணர்ச்சி ஒரு தெய்வ அருள்.

41. பரிச உணர்ச்சி :—இது ஸ்திரீ புருஷர்களை ஒன்று சேர்ப்பது.

42. இழிகுண உணர்ச்சி :—இது ஜன்மத்தோடு பிறந்த புத்தி. சுலபத்தில் திருத்துவதற்கு முடியாது; திருந்துவதும் ஏது?

43. ஆத்திர உணர்ச்சி :—இது கண்ணைக் குருடாக்கி, விவேகத்தை சூன்யமாக்கிப் பாதாளத்தில் தள்ளிப் பிறகு புலம்பவைப்பது.

44. நன்றியறிதலான உணர்ச்சி :—இவ்வுணர்ச்சி உள்ளவர்கட்கு தெய்வமே நேரில் வந்து உதவும். என்றும் சோறு கிடைத்து வரும்.

45. நொந்த உணர்ச்சி :—இது பெரிய பெரிய அனுபவ ஞானங்களை வாரிக் கொட்டும்.

46. ஆசிரிய உணர்ச்சி:—உலகுக்கு ஹிதத்தை ஆனவரையிலும் செய்ய வைக்கும். அந்த ஆவலில் தன் குடும்ப க்ஷேமத்தைக்கூட அது கவனியாது.

47. களவு உணர்சி :—திருட்டுக்கை என்றைக்கும் திருட்டுக் கையே.

48. சிக்கன உணர்ச்சி :—இது என்றைக்கும் க்ஷேமத்தைக் கொடுத்து நல்ல வாழ்வு வாழச் செய்யும். ஆனால், கருமித்தனத்துடன் சேர்ந்ததல்ல.

49. வறுமையின் உணர்ச்சி :—வறுமை ஒருவனைச் செல்வவானுக்காவிடினும் ஞானியாக்குவது உண்மை.

50. சென்ற நாள் உணர்ச்சி :—நொந்துபோன உள்ளத்திற்குச் சென்று போன நாட்களை நினைந்து நினைந்து நைவதே தொழில்.

இன்னும் எத்தனை எத்தனையோ !

உணர்ச்சிக்குத் தக்க செயலும், செயலுக்குத் தக்க உணர்ச்சியும் வெளிப்படும். நாலைந்து வருஷகாலம் இயற்கையாக உண்டாகிற உணர்ச்சியை அடக்கி வைத்துவிட்டுப் பிறகு திறந்துவிடின்—அது ஒன்று அழுகிப்போய்விடும் ; அல்லது வெடிக்கும்—என்று ஸ்ரீமான் வி. ஆர். ரெட்டி கூறுகிறார். உணர்ச்சியின் வகை தொகைகளை எண்ணி அளவிடவுங் கூடுமோ? இன்ப உணர்ச்சிகளால் உலகு மகிழ, துன்ப உணர்ச்சிகளால் துடிதுடித்து வேதனையில் ஆழ, துவேஷ உணர்ச்சிகளால் கொலை பழி பாவங்கள் சூழ, ஆவேச உணர்ச்சிகளால் நல்லறிவு—நிதானம் இவைகள் மாள, பற்றுதலற்ற உணர்ச்சியால் எவர் எக்கேடு கெடினும் நமக்கென்னவென்று ஒதுங்கிவிட, இங்ஙனமாக உலகவாழ்வே பலபல உணர்ச்சிகளால் ஆக்கப்பட்டு, உணர்ச்சிகளாலேயே அரசாளப்பட்டும் வருவது அற்புதத்தினும் அற்புதம். இவற்றினுள் உத்தம உன்னத உணர்ச்சிகளே நம்மில் மேலோங்கி நிலவுமாறு முயற்சி நாடி, அதற்குத் துணையிருந்து அருள்பாலிக்குமாறு எல்லாம்வல்ல இறைவனை என்றென்றும் தூயமனத்துடன் பிரார்த்தித்து வரக்கடவோம்.

உள்ளன்பு



கணவனின் வீட்டிலிருந்து தன்னிடம் வரும் குமார்த்தியைக் கண்டவுடனே ஒரு தாய் பெற்ற வயிறு துள்ளிக் குதித்தெழப் பொங்கிய ஆநந்தத்துடனே எத்துணை விரைந்து அவளிடம் ஓடுகிறாள்! ஆ! அதுதான் உள்ளன்பு! ஊருக்குச் சென்ற தாய்தந்தையர்கள் திரும்பி வந்துவிட்ட ஓசை கேட்டதும் தெருவின் வாயிற்படிக்குக் குழந்தைகள் எவ்வளவு ஆவலுடனும் ஓடுகின்றன? தாய்வீட்டுக்குச் சென்று திரும்பிய மனைவியைக் கணவன் எத்துணைப் பூரிப்புடனும் பார்க்கின்றான்? தமக்கை, தம்பி, தமயன், தங்கை இவர்கள் ஒருவரையொருவர் பிரிந்து மீண்டுங் காண்கையில் அவர்கள் எய்தும் புளகிதம்—பரவசம் சொல்லப் போமோ? எத்துணை ஹிம்ஸைகள்—தூஷணைகள் பட்டபோதிலும் மீண்டும் தன் வீட்டுக்கே வர மனம் இசைந்துவிடுவது எதனால்? தன் மனைவி எத்துணை எறுமாறாக இருப்பினும், தன் கணவன் தன்னை சகிக்கொணாத விதமாய்த் துன்புறுத்தினும் பற்றுவிடாது ஒட்டிக்கொண்டே போவது எதனால்?

ஃ

தன் நண்பன் தன்னிலும் உயர் நிலையுற்றுத் தன்னை முற்றும் மறந்த காலத்தும் அவனிடத்துக் கொண்டுவிட்ட பற்றுதலை மற்றோரிடத்தில் மாற்றத் திறனின்றி அவனையே காலமுற்றும் பிரீதிக்க வைத்திடுவதும் எதனால்? தமது பெருமைக்கும் செல்வத்திற்கும் மற்றெதற்கும் இணை காணாத சாமான்யர்களிடம் சிலருக்கு மனது ஒருமித்துப் போய் அவர்களைத் தன்னுயிராகவும் துணையாகவும் கொண்டு அன்னாரை என்று காண்போமோவென்று எதிர்பார்த்து விழி பூத்திடுவது எதனால்? தன் ஜென்மபூமியின் பெயரைக் கூறியதும் தன்னை யறியாமலே ஒரு புதிய உத்ஸாகம் உதித்திடுவது எதனால்? இப்பொழுது மாற்றாந்தாய்க்கு உட்பட்டு நடுங்கிக் கிடக்கும் குழந்தை முன்பு கண்மூடிக்கொண்ட தன் மாதாவிடம் வெகு துடுக்கு சேஷ்டைகளுடன் சொந்தரித்துக் கொண்டிருந்தது எதனால்? பிரேமத்தாலே—வாத்ஸல்யத்தாலே—உள்ளன்பினாலே வந்த மருட்சி படுத்துகிற பாடேயிது!

ஃ

ஆ! அந்த அழகிய உள்ளன்புமட்டும் பொருந்தியிருந்துவிடின் உலகத்தில் எதுதான் சாதிக்கமுடியாது? எந்தக் கஷ்டத்தைத்தான் சகிக்க முடியாது? காலஞ்சென்ற தன் முதல் மனைவியிருந்துவிட்டால் தன் நிதிக்குவியல்கள் சொத்துக்கள் அனைத்தையும் இழக்க நேரினுங்கூட மிகு மனத்திருப்தியுடன் அவளோடும் பிச்சையெடுத்து வயிறுண்டு வாழவும் தயார் என்கிறான் கணவன். யாவற்றையும் விட்டுவிட்டு அவ்வொரு குழந்தை

எவரை நமது அந்திய காலம் வரைக்கும் பிராணாதாரமாக நினைத்து நம்பி யிருந்தோமோ, எந்த இடத்தை நமது ஜீவியத்தில் ஒரு அடைக்கல ஸ்தலமாக எண்ணி ஆசை மூட்டைகள் அநேகம் கட்டினோமோ—அவரும், அந்த இடமும்தான் இப்போது நமக்குப் பெரிய ஏமாற்றமாய் முடிந்தது.

மட்டும் எங்களுக்குக் கிடைத்தால் போதுமென்கிறார்கள் பெற்றோர்கள். உலகமே அன்பினால்தான் ஆளப்படு கின்றது.

ஃ

பரம பிதாவாகிய கடவுளை நமக்கு எவ்வளவு சொந்தமுள்ளவ ராகக் கருதுகின்றோம்? ஒவ்வொரு சோதனையிலும், கஷ்டநஷ்டங்களின் படுகுழிகளிலும் அவர் காப்பார் என்று எவ்வளவு உறுதியாய் நம்பிக்கையாய் நினைக்கிறோம்? ஏன் இப்படி? வேத சாஸ்திரங்களை நாம் நன்கு தெரிந் திராவிட்டாலும், பகவான் எப்பொழு தும் ஆபத்பாந்தவர், பரமதயாளு, பக்தவத்ஸலர் என்பதை மட்டும் மனதார உணர்ந்து தெளிந்திருக்கி றோம். அவரிடத்து நாம் கொண் டுள்ள அன்பின் மிகுதியால் நமது சிறு சிறு (பெருந்) தவறுதல்களையும் அவர் மன்னிப்பாரென்று நம்பிவிடு கிறோம். இவ்வளவுக்கும் நம்மைத் துணியவைப்பதெது? அன்பின் மகத் துவமே—உள்ளன்பே. இவ்வித— "உள்ளன்பிலாத பேர் நிந்திக்கவே பேசி உறவாடுமுறவு முறவோ!"

உன் பேச்சை உடனே முடித்துக்கோள்.

நீ போன இடத்தில் ஒருவனிடம் பேச ஆரம்பிக்கி றாய். அவனோ உன் முதல் இரண்டு வார்த்தைகட்கு இனிமையான முகம் காண்பித்துவிட்டுப் பிறகு உன் மற்ற வார்த்தைகளுக்கு வேறு முகமாகி சீக்கிரம் உன் வார்த்தை கள் முடியபட்டுமென்று நினைக்கிறவனாகி விடுகிறான். அவ் வித நினைக்கிற தோற்றம் அவன் முகத்தால் தெரிகிறது. அதற்கேற்ப, அவன் வேறொருவரிடத்தில் பேச்சுக் கொடுக்க அந்த சமயம் ஆரம்பித்து விடுகிறான். நீயோ தெரிவிக்கவந்த விஷயம் அதிஸ்வாரஸ்யமானதென்று எண் ணிக்கொண்டு அதை முற்றிலும் சொல்ல ஆவற்படுகிறாய். அவனோ நீ வெகு நீட்டப் பேச்சுக்காரனென்றும், கொஞ் சத்தில் ஓயமாட்டாயென்றும் நினைத்துவிட்டு உம்—உம்— உம்—என்று உனக்குத் தலையை யசைத்துக் கண்ணையும் கரு த்தையும் வேறொரு பக்கம் செலுத்துகிறான். அவன் சங்கதி இவ்வளவுக்கு முற்றியபின்பு நீயும் உன் பேச்சை உடனே முடித்துக்கொண்டு விடுவதே ஒழுங்காகும். அத்தகைய மனிதனைப்பற்றிய ஒரு குறிப்பையும் உன் மனதில் பதிய வைத்துக்கொள். தனக்குக்கடன் தந்ததும் ஒருவன் அந்தத் திருப்தியில் விசுவாசம்கொண்டவனாய் சில பேச்சுகள் பேச ஆரம்பிக்க, கடன் தந்தவனோ—இது கடன் பெற்றதற்குப் பேசுகிற உபசார பேச்சு என்று எண்ணிவிட்டால், பேசத் தொடங்கியவன் உடனே வாய்மூடுவதே கௌரவமாகும்.

ஸாமியுயெல் ஸ்மையல்ஸ் புலவர் வாக்கு.

1. ஒரு தேசத்திற்கு நாணயம் பிறப்பதும், பலம் உண்டாவதும் முக்கியமாக அங்குள்ள ஏற்பாடுகளாலல்ல; குடிகளின் குணத்தாலேயே.

2. நாகரீகம் என்றால் என்ன? தேசத்திலுள்ள ஸ்திரீ புருஷ பாலியர்கள் அவரவராகச் சீர்திருத்தம் பெறுவதே நாகரிகம்.

3. தேசத்திலுள்ள அவரவர் முயற்சியும் ஊக்கமும் நேர்மையும் ஒன்றாகச் சேர்ந்துவரும் தொகை தேசவிருத்தி. அவரவர் சோம்பலும், அகப்பற்றும், தீமையும் ஒன்றாகச் சேர்ந்துவரும் தொகை தேசச்சிதைவு.

4. ஒருவனிடத்தில் விளங்கும் ஊக்கமே அதைக் காண்கிற பிறருடைய ஒழுக்கத்தைத் திருத்தி, செய்கையைச் சிறப்பித்து, அவரது தொழிலுக்கு உதவும் உத்தம வித்தை ஆகிறதென்று நாள்தோறும் அநுபவசித்தமாக அறிகிறோம்.

5. நாம் குடியிருக்கும் வீடுகளிலும், போக்குவரவு செய்யும் தெருக்களிலும், வர்த்தகரது பீடங்களின் புறத்திலும், தொழிற்சாலைகளிலும், நெல்தறிக்கூடத்திலும், ஏர் உழும் புலத்திலும் காசுக்கடைகளிலும், நெசவு யந்திரசாலைகளிலும் தச்சவாடிகளிலும், கும்புகூடும் சந்தை முதலிய தலங்களிலும் அன்றன்று கற்பிக்கப்படும் கல்வி, ஜீவனத்திற்குப் பெரும் பயனை விளைவிப்பதாகும்.

6. ஒருவனுக்குப் பக்குவம் முதிர்வது அவ்வளவும் கல்வி கற்பதனாலன்று. தொழில் செய்வதனாலேயே. நித்தமும் ஒருவனைத் திருத்திக் கொண்டுவருவது அவ்வளவும் நூல்களல்ல, அவனது ஒழுக்கமே.

7. பெரியோர் சரித்திரத்தாலும், முக்கியமாக நல்லோர் சரித்திரத்தாலும், பிறர்க்கு மிக்க அறிவும் பயனும் உண்டாகும். அவை அவர்களுக்கு உதவி வேண்டும்பொழுது உதவும். வழி தெரியாதிருக்கையில் வழி காட்டும். தூண்டுதலில்லாதிருக்கையில் முக்கிய தூண்டுகோலாகும்.

8. தன்முயற்சி, புத்திபூர்வமாக உண்டாகும் அபிப்பிராயம், துணிந்து முடிக்கும் கருமம், நிலைபேறு, மனநிறை, இவற்றின் திறத்தை விளக்கும் அரிய திருஷ்டாந்தங்கள் பெரியோர்களது சரித்திரங்களிலுண்டு.

9. ஓயாது உழைக்கும் கையும் மனமுமே தன்னைப் பண்படுத்தி, அறிவைப் பெருக்கிக் காரியசாதகம் செய்யவல்லது.

10. உயர்குலத்திற்பிறந்து குபேர தனமுடையோரா யிருப்பவர்களும் தம்மில் தாம் ஏதாயினும் திடமுறு புகழ் பெறுவார்களானால், அஃது ஊக்கத்துடன் அவர்கள் செய்த முயற்சியின் பயனாக விளைந்திருக்குமேயன்றி மற்றபடி அல்ல.

11. மனிதன் உண்ணும் எவ்வகை உண்டியும், மெய்வருந்தி உழைத்தாயினும், மனம் வருந்தி உழைத்தாயினும் தேடி உண்ணும் உண்டியைப்போல் அவ்வளவு மதுரமுள்ளதன்று.

12. தாமே வழிபிடித்துப் போகாமல் பிறர்பின்செல்வோரும், தம்மைத் தாம் அடக்கியாளாது பிறர் அதிகாரவசப்படுவோரும் எதற்கும் உதவியற்ற அகதிகளாவார்கள்.

T. S. குழந்தைவேல் முதலியார்.

ஸ்ரீரங்கம் கோவிலில் பிரார்த்தனை மாடுகளின் கதி.

நீங்கள் வருடந்தோறும் பணச் செலவையும் நினையாமல், தேக சிரமத்தையும் கருதாமல் பற்பல கஷ்டங்கள்பட்டு ஸ்ரீரங்கத்திற்கு வந்து "கோவிந்தா" என்று குதித்து சுவாமி ஸேவித்துப் போகின்றீர்களே! அது எதற்காக என்று ஆலோசித்துப் பார்த்தீர்களா? நாம் அறிந்தும் அறியாமலும் இந்த உலகத்தில் எத்தனையோ பாவங்கள் செய்துவிடுகிறோம். அந்தப் பாவங்கள் நம்மைப் பலவிதத்தில் துன்பப்படுத்துகின்றன. பலவிதமான வியாதிகளை நாம் செய்த பாவத்தின் காரணமாக அனுபவிக்கிறோம். பாவங்கள் செய்ததினால்தான், பலவிதமாக கஷ்டங்களை அனுபவிக்கிறோம் என்று தெரிந்துகொண்ட நீங்கள் கோயிலுக்கு மாடு, கன்றுகள் கொண்டுவந்து விடுகிறேன் என்றும், காணிக்கை கொண்டுவந்து உண்டியில் சேர்ப்பதாயும் வேண்டிக் கொள்கிறீர்கள். அதே பிரகாரம் வருடந்தோறும் செய்கிறீர்கள். உங்கள் காணிக்கைப் பணம் யாவும் கோயிலுக்கு உபயோகப்படுகிறது. உங்கள் வேண்டுதலும் நிறைவேறுகிறது. ஸ்ரீரங்கநாதரும் சந்தோஷப்படுகிறார்.

ஃ

ஆனால், நீங்கள் கோயிலுக்கு விடும் காளைகள், இளங்கன்றுகள், பசுக்கள் இவைகளை கோயிலில் என்ன செய்கிறார்கள் என்று தெரியுமா? அந்தோ பரிதாபம்! நீங்கள் ஊர்போய்ச் சேர்வதற்குள்ளாக உங்கள் மாடுகள் விற்கப்படுகின்றன. அவற்றை வாங்குவோரில் பெரும்பான்மையோர் கசாப்புக் கடைக்காரர்கள். அவர்கள் அதைக் கொண்டுபோய்க் கொன்றுவிடுகிறார்கள். நீங்கள் நீண்ட காலமாக சுவாமிக்கென்று தீனி போட்டு வளர்க்கப்பட்ட மாடுகள் சுவாமிக்கா அல்லது கசாப்புகடைக்கா? என்று நான் கேட்கிறேன். இதனிலும் கொடிய பாவம் வேறுண்டா? பாவத்தைப் போக்கக் கோயிலுக்கு வந்து முன்னிலும் பெரிய பாவ மூட்டையைச்சுமந்துபோகிறீர்களே? இது தீருமா? கொஞ்சம் யோசித்துப்பாருங்கள்; நீங்கள் செய்வது குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டதுபோலிருக்கிறது. ஃ

நமது நாட்டில் காளைமாடுகள் பரமசிவனின் வாகனமாகக் கருதப்பட்டு "ரிஷபம்" என்றும் "நந்தி" என்றும் அழைக்கிறார்கள். நமது சாஸ்திரங்கள் பசுவைத் தெய்வமாகச் சொல்வதுடன் "காமதேனு" என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீரங்கம் கோயிலில் பசுமாட்டு முகத்தில்தான் காலையில் ரங்கநாதர் விழிக்கிறார். இது இன்றும் நடந்து வருகிறது. இப்படிப்பட்ட பசுமாடுகள், காளைகள் மாமிச உணவுக்காக நாசமாகி விடுகிறதென்றால் அந்தப் பாவம் நம்முடையது அல்லவா? ஆலோசித்துப் பாருங்கள். இவைகளைத் தடுக்கவேண்டியது நம்முடைய கடமை அல்லவா?

ஃ

"கொல்லாமை" என்பது பெரிய சங்கதி. பிற உயிரைக் கொல்லாதவர்களை உலகமேகைதூக்கித் கும்பிடுகிறது என்று திருவள்ளுவநாயனார் என்ற தெய்வபக்தர் கூறுகிறார். பசுக்கள் நன்றாக வாழ்ந்தால்தான் நாம் சௌக்கியமாயிருப்போம். பசுக்களை ஸ்ரீ கிருஷ்ணன் மேய்த்து வந்ததாக நமதுபுராணங்கள் கூறுகின்றன. அத்தகைய பசுக்கூட்டத்தை நாம் காக்கவேண்டியது நமது முக்கியமான வேலையாகும்.

ஃ

ஆகையால், நான் உங்களுக்கு ஒரு யோசனை கூறுகிறேன். கோயிலுக்கு மாடு கொண்டுவந்து விடும் வழக்கத்தை இன்றுடன் விடுங்கள். அந்த மாட்டின் கிரயத்தைக் கொண்டு வந்து போடுங்கள். அதுவே கட்வுளுக்கு சம்மதமாகும். அப்படிக்கின்றி கன்றுக் குட்டிகளையும், சோதா மாடுகளையும் கோயிலுக்குவிட்டால் அவைகள் நிச்சயம் கசாப்புக் கடைக்குத்தான் போகும். அந்த வாயில்லாப் பிராணிகளின் கண்ணீர் நம்மை எத்தனையோ கஷ்டங்களுக்கும், துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் உட்படுத்துவதுடன் எத்தனையோ காலங்கள் நமக்கு நரகவாசமே கிடைக்கும்.

ஃ

உங்களுக்கு தெய்வபக்தி இருக்குமானால், 'கோவிந்தா! கோவிந்தா!!' என்று ஓடிவருவது உண்மையானால், உங்கள் மனதில் நினைத்த காரியங்கள் நிறைவேற வேண்டுமானால் கோயிலுக்கு மாடுகளை விடாதீர்கள்; காணிக்கை கொண்டுவந்து செலுத்துங்கள்.

ஸாவ்கார் கன்ஸாம் தாஸ்
நாராயண தாஸ், ஸ்ரீரங்கம்.

[ஸ்ரீரங்கம் கோவிலுக்குச் சொல்லியது மற்றுமுள்ள சில கோயில்களுக்குங்கூடப் பொருந்தும். ப-ர்.]

உபாத்தியாயர்கள் கல்வி கற்பிப்பது எதற்காக ?

உபாத்தியாயர்கள் தங்கள் மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பிப்பது அவர்களை எதாயினும் ஒரு வித்தையிலாவது, சகல வித்தைகளிலுமாவது பூரணத் தேர்ச்சியடையும்படி செய்வதற்கு அல்ல; அவர்கள் பாடசாலையை விட்டபின்பு கற்கப்புகும் வித்தையையாவது, ஆவசியகமாய்க் கற்கவேண்டிய வித்தையையாவது நன்றாய்க் கற்கத்தக்கதாக அவர்களுக்குப் போதுமான மனத்தெளிவையும், பக்குவ குணத்தையும், நல்லொழுக்கத்தையும் கொடுப்பதற்காகவேயாம்.

பணக்காரர் விலாப்புடைக்க விழுங்கினால்—"திருப்தியாகச் சாப்பிட்டார்"—என்று கௌரவமாய்ச் சொல்வார்கள். ஏழை யொருவன் அவ்விதம் புசித்தாலோ "எவ்வளவு கொட்டினாலும் அவ்வளவையும் விழுங்கி இலையைக் காலிசெய்து விடுகிறானே" என்பார்கள். இதே ஏழை பிறகு பணக்காரனாகி விட்டாலோ அப்போது இந்தத் திருவாய் மூடிக்கொள்ளும்.



1. சென்ற வருடத்தில் மாதம் முப்பது ரூபாய் சம்பாதித்துப் பணம் சேர்க்க முடியவில்லை யென்ற மனிதன், இவ்வருடம் இன்னும் பத்து ரூபாய் அதிக சம்பளம் வந்தும், இப்போதும் பணம் சேர்க்க முடியவில்லை யென்ற பல்லவியையே பாடுகிறான். ஏதாவது ஒன்றுக்குள் தன் தலையை நுழைத்துச் சிக்கிக் கொண்டாலன்றி பணம் சேர்ப்பது பிரயாசையே.

2. "நீங்கள்தான் இவ்விஷயத்தில் ஒரு முடிவு சொல்லவேண்டும்" என்று நம்மைக் கேட்பவர்கள் நாம் சொல்லுவதற்கு முன்பே தங்களுக்குள் ஒரு முடிவைச் செய்துகொண்டவர்களே. ஒப்பாரித்தனத்திற்கே இப்படி நம்மைக் கேட்டு ஆழம் பார்ப்பது. நாம் ஒரு முடிவு கூறினும் அந்தப்படி அவர்கள் நடக்கப்போவதுமில்லை.

3. வீட்டிலுள்ள ஆண்பெண்களிடம் நகை வைத்துக் கடன் வாங்குவதில் இருபக்கத்திலும் எழுத்து மூலமான தஸ்தாவேஜு இல்லை. கோர்ட்டுக்குப் போனாலும் வெகு சிரமமே.

4. லாட்டரிச் சீட்டு விற்பவர்கள் டிக்கட்டு விற்ற பணத்தை லாட்டரி ஆபீசுக்கு அனுப்பாமலே மோசம் செய்வதுண்டு. சீட்டு வாங்கியவர்கள் தங்களுக்கு லாட்டரி விழவில்லை யென்று எண்ணி ஏமாறுவர். பொய் ரசீது பெற்று மோசம் போனவரும் பலர்.

5. வரும்போது ரயில்வே ஸ்டேஷனில் பெட்டி களவு போய்விட்டது; ரயில் சத்தம் ஏதாகிலும் கொடுத்தால் புண்ணியமுண்டு என்று பலவிதம் சொல்லி ஏமாற்றி ஏதாவது பெற்றுச் சென்றுவிடும் மனிதர்கள் பலர். இவர்களின் மோசத்தால் உண்மையாகவே பறிகொடுத்தவர்களின் வார்த்தைகளைக்கூட நம்ப முடிகிறதில்லை.

பண்டிட் K. விஜயராகவ ஐயங்கார்.

II

6. ஒரு நூலாசிரியர் மற்றொரு நூலாசிரியரைத் தாழ்த்தி இன்னொருவரிடம்—"இதோ பார், இந்த இடத்தில் எந்தப் பதம் போடுகிறதென்றே மூடனுக்குத் தெரியவில்லை"—என்று பலவாறுபழித்து மட்டந்தட்டிக் கூறுகிறார். ஏனோ பொறாமை?

7. அவரவர்களுக்கு அவரவர்களின் சங்கதியில் இருக்கிற சிரத்தை மற்றவர்களுடைய விஷயத்தில் இல்லை. தங்கள் காரியம் ஆகவேண்டுமானால் எவ்வளவு நேரமாயினும் பிறரிடம் பசியுடன் காத்திருக்கிறார்கள். மற்றவர்களின் சங்கதிகளுக்கு அப்படிக் காத்திருக்க மனம் வருவதில்லை.

8. நாம் பணமில்லாமல் தவிக்கும் சமயம் எப்போது வருமோவென்று காத்திருந்து நம்மிடமுள்ள முக்கியமானவற்றைப்பாதிவிலை கால்விலைக்கு வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள்.

எழுதுகிற பேனாவுக்கும் கொஞ்சம் ஓய்வு வேண்டியிருக்கிறது. இரவில் சரியாக எழுதாது முரட்டுத்தனம் செய்த பேனா காலையில் நன்றாக எழுதுகிறது. இவ்விதமே எதற்கும் கொஞ்சம் ஓய்வு தேவை.

இத்தகையோரே நம்மிடம் அதிகமாக உறவாடுகிறவர்கள்.

N. C. G. ஸ்ரீநிவாசவாதாச்சாரி.

III

9. அன்புச் சண்டையின் அற்புதம் :—எத்தனை சண்டைபோட்டுக் கொண்டாலும் கோபமிஞ்சித் துணிகளைச் சுருட்டிக்கொண்டு வெளியூருக்கு ஓடினாலும் பின்பொருநாளைக்குக் கூடிக்கொள்ளவே செய்கின்றனர். இது அன்பு உள்ளத்திலிருக்க மேலெழும் அழுக்காகிய அவசரச் சண்டையின் சங்கதி. அன்பு வற்றிய வாட்டுக்கட்டைகளோ சண்டையில்லாவிடினும் வேறுமென்றே முட்டி மோதி சண்டை பிடித்துக் கொண்டு உடனே வெளியேறி, சாகிறவரையிலுஞ் சேராமலே யிருந்து மடிந்துவிடுகின்றனர்.

10. காசிருந்தால் கனவான் :—கையில் காசு மிகுதியாயிருந்தால் கனஉல்லாசமாய்ச் செலவுசெய்து திரிவதும், இல்லாவிடில் ஏங்கி இளைத்து மூலையில் உட்காருவதும் சிலரிடமுள்ள வேடிக்கையான குணம். பின்னால் செலவுக்குப் பணம் வேண்டுமே யென்கிற சிந்தனை தான் இவர்களிடம் ஏது? கையில் கிடைத்த ஒரு அணுவுக்கு முழுவதும் காபியை வாங்கிக் குடித்துவிட்டு முக்கியமாய் தன் நண்பனுக்கோ வேறெவருக்கோ அனுப்பவேண்டிய தபால் கவருக்குக் காசில்லாமல் 'நீ தருகிறாயா—நீ தருகிறாயா'வென்று திண்டாடித் தெருவில் நிற்பர். இக்கால நவீன நாகரீகர்களில் இதுவுமொன்று!

11. அற்பகுணத்தால் அவமதிப்பு:- பெரிய மனிதனாய்த் தோன்றியென்ன? போறிவாளனென்று பிரசித்திபெற்றுமென்ன? அற்பகுணமென்னும் அவதிச் சேற்றில் அகப்பட்டுக்கொண்டபிறகு பிறர் மதிப்பென்னும் பெருங்கரையில் ஏறிடுவதேது?

12. தாசி வீட்டுச் சங்கதி :—காசையே நோக்கித் தவஞ்செய்து கொண்டு மேனியினுக்கி வாலிபர்களை மயக்கிப் பணம் பறித்து வாழும் பரத்தையர்கள் பிரபுகுல மைந்தர்களைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விடுவதை எண்ணிப் பார்ப்பதேது? அதுபோல் தங்கள் புத்திரர்கள் வேறு விலைமகள் வீடு நுழைவதைக்காணின் 'ஐயோ! என் மகன் 'செருக்கிகள்' வீட்டிற்குச்சென்று கெடுகின்றானே!' என ஓலமிடுகின்றனர். இந்த அறிவு தமக்குப் பவுன்களைக் கொடுக்கும் இளைஞரிடம் ஏன் செல்லவில்லையோ?

T. S. குழந்தைவேல் முதலியார்.

IV

13. மனிதனுடைய வாழ்வும் தாழ்வும் அவனுடைய பரிசுத்தமாகிய இருதயத்தராசில்தானிருக்கிறது. அத்திராசை ஒரு பக்கமும் சாயவிடாமல் நேரான நிலையில் நிறுத்தவேண்டும். குற்றம் செய்தவனாக இருந்தால் அந்த நிர்மல திராசானது ஒரு பக்கம் தாழ்ந்துவிடும். அதுவே அவன் வீழ்ச்சிக்கு முதலாவது அறிகுறி.

14. ஒருவன் நாலு அணாவுக்கு ஓயாமல் நாளெல்லாம் உழைப்பவனாக இருக்கலாம். மற்றொருவன் இலேசான வேலையில் மாதம் 500-ரூபாய்

ஸ்திரீகளுடன் சகஜமாய்ப் பழகி சாதாரணப்பட்டிராதவர்கள், மற்ற ஸ்திரீகளைக் கண்டால் விகாரமான பார்வையுடன் நோக்குகின்றனர். அதற்கேற்ப துர்க்கிணவும், குறுகிய சிந்தையும், காமஆவேசமும் குடிகொள்கின்றன. ஸ்திரீகளும் இவர்களைக் கண்டால் அஞ்சி நடுங்குகிறார்கள்.

சம்பாதிப்பவனாக இருக்கலாம். அடுத்தவன் வார்த்தை ஒன்றுக்கு 1000 ரூபாய் வீதம் பில்போட்டு வாங்குபவனாக விருக்கலாம். இவை எல்லாம் மூளையின் வேலையா? அல்லது மேலைத் தவத்தனவா?

A. சுருளிவேலு.

[நமக்கு அதிசமான வியாசங்களும், நீதிமொழிகளும்தேவையில்லை. பட்ட சுய அநுபவமே வேண்டும். ப-ர்.]

V

15. இருந்தாற்போலிருந்து மனதில் யோசனை புகுந்துகொள்கிறது. சுவற்றை அண்ணாந்து பார்க்கிறோம். காலஞ்சென்ற நமது மனைவியின் புகைப்படத்தைப்பார்த்து அவளுடன் நாம் நடாத்திய இல்லறத்தையும் மற்றுமுள்ளவைகளையும் நினைத்துப் பெருமூச்சு விடுகிறோம். கடைசியில் ஆஹா! ஒப்புயர்வற்ற அழகுவாய்ந்த உத்தமியை உயிருடன் பார்த்துக் களித்த கண் இப்போது புகைப்படத்தின்மூலமாகப் பார்க்கும்படியாயிற்றே என்று எண்ணமிட்டு அதே நினைவாக நாம் செய்யவேண்டிய காரியங்களையும் மறந்துவிடுகிறோம். ஆஹா! என்னே, நம்மை மணந்த முதல் மனைவி மரித்ததாலேற்பட்ட மனநோயின் மகிமை! இதை அநுபவமாய் உணர்ந்தார்க்கே இதன் உண்மை தெரியும்.

16. கணவன் மூர்க்கனாயிருந்தால் வேண்டியதைச் செய்துகொடுத்து சமயத்துக்கேற்றவாறு நடத்தல்தான் அழகேயன்றி மாட்டேன் என்று சொல்வது தகாது. ஏனெனில் ஒரு சமயம் கோபத்தால் தீங்கையும் விளைவித்துவிடுவான்.

17. எங்கும் தன் சொல் கேட்பவரிடமும் தனக்கு அடங்கி நடப்பவரிடமும்தான் அதிகாரத்தை ஜாஸ்தியாய் செலுத்துவர். அடங்காதவரிடம் தானே அடங்குவர். தன் சொற்படி கேட்கும் மைந்தனையே அதிகம் வருத்துவர். சொற் கேளாதவனிடம் மிகமிக மரியாதை காட்டுவர். பணிவுடன் உண்மையாய் உழைக்கும் பணியாளனையே இன்னும் வேலை செய்யச் சொல்லுவர். பணியாதவனிடம் தானே பணிவர்.

18. பத்திராதிபர் ஆசிரியர் முதலானோர் பார்ப்பதற்கு சுகவாசியாகத்தான் தோற்றுவர். ஆனால் அவர்கள் ஒவ்வொரு வியாசங்களையும் உண்மையாக ஒழுங்காக எழுதி அச்சியற்றி ராஜமத துவேஷமின்றி வெளியிடுவதற்குள் படும் கஷ்டநஷ்டங்களை இவ்வளவு அவ்வளவு என்று சொல்லிமுடியாது. இதையறிய விரும்புவோர் பல்லாண்டு பத்திராதிபராகவோ ஆசிரியராகவோ இருந்த ஒருவரிடம் வினவின் இதன் உண்மை விளங்கும்.

P. R. நாராயண சர்மா.

நமது நண்பனாயிற்றே, அந்தப் புஸ்தகத்தை அவன் படித்து ஆநந்திக்க வேண்டாமா? என்ற ஆசையோடும் கிடைக்காத ஒரு அரிய புஸ்தகத்தைத் தூக்கிக் கொடுத்தால், அந்த நண்பனே அப்படியே அதைக் கொண்டுபோய் விடுகிறான். நம்முடைய முட்டாள்தனத்திற்கு மனது நோகும்படி யாகிறது.

நமக்கு இருக்கிற பால் பாக்கி, தயிர் பாக்கி, எதிர்வீட்டுக் கடன் இதை முன்னதாகத் தீர்க்காமல், அதைத் தீர்ப்பதற்கே பணம் இல்லாமல் திண்டாடி நிற்கும்போது, நம்மைவந்து கடன் கேட்கிறவர்களுக்கு நாம் கடன் கொடுக்கப் போவது சுத்த மௌடீகமாகும். அதைவிட நாம் பட்ட கடனைத்தீர்க்க முயல்வது மேல்.

பொன் மொழிகள்

(சென்னைக் கவர்னரவர்களின் வாக்கு.)

1. தன்னலமற்று பிறருக்கு ஏதாகிலும் உதவிபுரிவதென்ற சிறந்த குணத்தை நாம் பெற்றிருக்க வேண்டும்.

2. நாம் நமது வாழ்க்கையைத் திரும்பிப் பார்ப்போமாகில் நமது சொந்த நன்மையைத் தேடிக்கொண்டது தவிர, ஏதாகிலும் சிறிதளவாவது நாம் உலகிற்கு உதவியாக இருக்கவேண்டும்.

3. ஒழுக்கமின்றி ஸமூகக் கட்டுப்பாடு ஏற்படுவதற்கில்லை. ஒவ்வொருவரும் தம் இஷ்டப்படி யிருப்பதென்றால், ஸமூக நேர்மையிராமல் எல்லாம் குழப்பமாகவே முடியும். கட்டுப்பாடான, அமைதியான ஸமூக மிருக்க வேண்டுமானால் அதற்குக் கட்டுப்பாடு அவசியமாகும்.

4. எப்பொழுதும் வெற்றியடைவீர்களென்று நினைப்பதற்கில்லை. அதற்காக நீங்கள் மனச்சோர்வடையக்கூடாது. தோல்வி யென்றால் அதையேற்று மேற்கொண்டு உழைக்க நீங்கள் தயாரா யிருக்கவேண்டும்.

5. ஒரு முடிவு செய்தால் அதை நிறைவேற்ற நீங்கள் உறுதி கொள்ள வேண்டும். பின்னர் அந்த முடிவு சரியில்லையென்று பட்டால், அதை மாற்றிக்கொள்ள நீங்கள் தயங்கக் கூடாது.

6. தப்பு செய்யாத மனிதனே கிடையாது. தப்பே செய்யாதவன் பெரிய காரியமேதையும் செய்துவிட முடியாது. ஆகவே, தப்புக்காகப் பயப்படக்கூடாது. தப்பென்று பட்டால் அதைத் திருத்திக்கொள்ளவும் தைரியம் வேண்டும்.

7. ஒருவன் மிகவும் புத்திசாலியாக இருக்கலாம். ஆனால், அவனை விட மட்டமாக இருப்பவர் மேன்மைக்கு வந்துவிடலாம். இது சகஜமாக நடப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே விடாமுயற்சி மிகவும் அவசியமாகும்.

8. கல்வி என்பது என்ன? மாணவனுக்குத் தெரியாத விஷயங்களைத் தெரிவித்துவிடுவது கல்வி போதித்தலாகிவிடாது. தனக்கு ஏற்கெனவே தெரியாத பல விஷயங்களைத் தெரிந்துகொண்டும் அவன் கல்வியின் பயனை அடையாதவனாக இருக்கலாம். ஒருவன் அறியாத விஷயங்களை அறிந்துகொள்வதே கல்வி கற்றலாகுமானால், நாளடைவில் அந்த விஷயங்களை அவன் மறந்து போவானாகில் அவன் கல்வியை இழந்தவனாகி விடுவான். ஒருவன் கற்றுக்கொண்ட பல விஷயங்களை மறந்துவிட்ட பிறகும் அவன் கற்றவனல்லவா? அப்பொழுதும் அவன் நல்ல கல்விமானாக இருக்கக்கூடும்; இருக்க வேண்டும். கல்வி போதிக்கப்பட்ட காலத்தில் அவனுடைய மண்டைக்குள் எத்தனை புதுவிஷயங்கள் திணிக்கப்பட்டனவோ அவைகளைக் கொண்டு அவனுடைய கல்வித்

நகைகள் ஆபத்திற்கு உதவும்தான். ஆனால் ஒரு குறித்த அளவில் நகை செய்துகொண்டு பாக்கியைத் தபாலாபீஸ் 5-வருஷத் தபால் சேட்டில் போட்டு வைப்பது முதலை வட்டியால் அதிகப்படுத்த வழியுண்டு. நகை தேயுமேயன்றி, வளவுபோகுமேயன்றி வளராது.

திறனை மதிக்கக்கூடாது. ஆனால், அவனுடைய புத்தி எவ்வளவுபயிற்சி செய்விக்கப்பட்டதோ அவ்வளவுக்குக் கல்வி கற்பிக்கப்பட்டவனுகக் கருதப்படவேண்டும். ஆகையால், பல விஷயங்களை மண்டையில் அடைத்துக்கொண்டு போவதைக் காட்டிலும், யோசனை செய்ய ஒருவனுக்கு எவ்வளவு பழக்கம் உண்டு பண்ணி வைக்கப்பட்டதோ அவ்வளவே அவன் கல்விப் பயனைப் பெற்றவனுவான். அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களில் பெரிய வியாபாரிகளும் ஸர்வ கலாசாலைப் பட்டதாரிகளையே வேலைக்கு நியமித்துக்கொள்கிறார்கள். அவர்கள் கலாசாலையில் தெரிந்துகொண்ட விஷயங்கள் அந்த வியாபாரிகளுக்குத் தேவையில்லை; ஆயினும் உயர்தாகக் கல்வி பெற்றவர்களையே அவர்கள் நியமிப்பதற்குக் காரணம்—"அவர்களுடைய புத்தி பயிற்சி செய்விக்கப்பட்டது"—என்ற எண்ணமே. (புத்திப் பயிற்சியே—யோசனை செய்யும் அறிவே—பிரதானம். அதுவே கல்வியின் முக்கிய அமிஸம்.)

கூடிக் களிப்படைதல்

கூடிக் களிப்படையவே இறைவன் நம்மைப் படைத்தார். இதில் இருக்கிற நன்மை மற்றெதிலும் இல்லை. ஒருமைப்பாடு இல்லாத குடி ஒருமிக்கக் கெடும். மதிகெட்டவர்கள் கலகப்பட்டுப் பிரிந்து பகைத்துக் கொள்வார்கள். விவேகிகளோ ஒன்றுசேர்ந்து ஒருவருக்கொருவர் சகாயமாயிருப்பார்கள். பலர் ஒன்றுகூடினுல் பொருள்கூடும்; பொருள் கூடினுல் பலம் கூடும்; பலம் கூடினுல் கூடாத காரியமும் கைகூடும். சுகம் அனுபவித்தாலும், துக்கம் அனுபவித்தாலும், லாபம் வந்தாலும், நஷ்டம் வந்தாலும், சுலபமான வேலை செய்தாலும், வருத்தமான வேலை செய்தாலும் எக்காலத்திலும் ஒத்திருங்கள். எவ்விதமான ஆபத்திலும் ஒத்து வாழ்ந்திருக்கக்கடவீர். இவ்வுலகில் செம்மையாய் வாழ்வதற்கேற்ற நல்வழி அனைவரும் அந்நியோந்நியமாய் இருந்து உதவிசெய்து வருவதற்கு ஈடு வேறொன்றுமில்லை. சம்பத்து வந்தாலும், விபத்து வந்தாலும், சவுக்கியம் வந்தாலும், அசவுக்கியம் வந்தாலும். வலிவோடு இருந்தாலும், வலிவற்றிருந்தாலும், நற்செய்தி கேட்டாலும், துர்ச்செய்தி கேட்டாலும், சந்தோஷம் வந்தாலும், வாலிபமானுலும், விருத்தாப்பியமானுலும் எக்காலத்திலும் ஒத்திருத்தலே நலம். ஒத்திருக்குமளவும் சாந்தமும் சந்தோஷமுமுண்டு. பிரிந்து பகைகொள்வதோ சச்சரவுக்கும் சோகமுறுவதற்கும், அழிவதற்குமே வழி. ஒத்து ஒருவருக்கொருவர் உதவிசெய்து வாழ்வதிலும் உயர்வு வேறில்லை.

விவாக தத்துவம்.



கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் அவர்களுக்காகவே நேசிக்கிறார்களே தவிர, கைம்மாறு கருதியன்று. கணவன் தீராப் பிணியாளனாய்விட்டவுடன் மனைவி அவனைப் பிச்சையெடுத்தாவது காப்பாற்றுகிறாளே தவிர, அவனைவிட்டுப் போய்விடுவதில்லை. ஒருவனை உலகமே தூஷிக்கட்டும், அவன் கொலைப்பாதகனாகவே யிருக்கட்டும், திருடனாகவே யிருக்கட்டும், அப்போதும் அவன் மனைவி அவனுக்காகவே பரிந்து, "ஐயோ! என் கணவனைத் தண்டித்து விட்டார்களே" என்கிறாளே தவிர, அவனை அப்போதும் வெறுப்பதுவுமில்லை, மறுப்பதுவுமில்லை. அவள் அவனை அவனுக்காகவேதான் நேசிக்கிறாள். இது இறைவன் கூட்டிய பிரியாத உறவு.

ஃ

அவள் செய்யும் காரியங்களைக் கணவன் தவிர ஊரார் முழுவதும் கண்டு வியந்தாலும், புகழ்ந்தாலும் அவள் சந்தோஷப்படுவதில்லை. ஆனால் அவள் கணவன் ஒருவன்மட்டும் "இக்காரியங்களை நீ செய்வது மிக்க நன்றாயிருக்கிறது" என்றால் உடனே அது அவளுக்குப் பரம திருப்தியை யளிக்கிறது. இன்னும் ஓர் குடும்பத்தில் மனைவியே அதிக கஷ்டமும் பாத்தியதையும் உள்ளவள். ஒருவனின் உண்மைக்குணம் அவன் மனைவியிடத்தேதான் வெளியாகிறது. தன் கச்சேரியில் தன் வேலையைச் சரியாய்ச் செய்துவிட்டு இருந்துவிடுகிறான். தன்னுடைய சிநேகர்களிடம் மரியாதையாயும் அன்பாகவு மிருந்துவிடுகிறான். இவ்வாறு பலவிடங்களிலும் இடங்களுக்குத் தக்கவாறு ஒழுங்காயிருந்து விடுகிறான். ஆனால் வீட்டிலேதான் அவனுடைய தெய்வீக குணமோ, பன்றிக்குணமோ காமவிகாரமோ, குடிகாரத்தன்மையோ முழுதும் வெளிப்படுகின்றது.

ஃ

மணமானது ஓர் ஜனசமூக உடன்படிக்கையே(Social Contract) யன்றி வேறொன்றுமல்லவென்றும் இஷ்டப்பட்ட காலத்தில் ஒருவரையொருவர் விடுபாடு(Divorce) செய்து விலகிக் கொள்ளலாமென்றும் பேசுவது அறியாமையே.

ஃ

கஷ்டத்திலும், சுகத்திலும், குறைவிலும், ஏற்றத்திலும், துக்கத்திலும் இன்பத்திலும், ஒவ்வொருவர்களுடைய குறைவுகளை நிவர்த்தித்துக் கொள்ளவும், இகபர சாதகத்திற்காகவும், உண்மையான தெய்வீக அன்பாகிய காதலால் கடவுள் சந்நிதியில் பிணிக்கப்படும் பந்தமே மணமாகும். இப்பேர்ப்பட்ட மணமே குடும்ப, தேச, ஜனசமூக, உலக ஒற்றுமையும், நன்மையும், முன்னேற்றத்தையும் பயக்குமியல்புடைத்து. மற்ற மணங்களெல்லாம் மணமற்ற மணமே யாகும். இப்பேர்ப்பட்ட மணத்தை மனிதனால் ஏற்படுத்தப்பட்ட, அநித்ய சட்டங்களால் உண்மையில் பிரிக்க முக்காலு மியலாது.

T. V. சிவசுப்பிரமணியம் பி. ஏ.

கோள்சொல்லிக் கோமாளிகள்.



கோள் சொல்லிக் கோமாளிகள் எவ்விதமாய் ஒரு கலகத்தை இருவருள்ளும் மூட்டிவிடுகிறார்களென்பதைப் பின்வரும் கட்டுக்கதை நன்கு விளக்கும். மிக்க உறவாகவே இருந்துகொள்வது ஒரு தந்திரம்; அதே நிமிஷம் அவர்கள் குட்டிச்சுவராய்ப் போகவேண்டுமென்று மனதில் நினைத்துக்கொள்வது மற்றொரு இழிந்த புத்தி. அதற்கென்று அழிவுக்கான வகையில் ஒரு கலகத்திற்கு விதை நட்டுவிடப் பார்ப்பது அதற்கு அடுத்தபடியாயுள்ள முயற்சி. இப்படியே எதிர்பக்கத்திலும் உறவாக இருந்துகொண்டு, உள்ளுக்கு அவர்களின் நாசத்தைக் கோரியவாறு, அங்கும் கலகத்திற்கானவை கூறித் தீமூட்டிவிடுவர். இவ்வளவும் செய்துவிட்டு இவர்கள் இரு பக்கத்திற்கும் உறவாயிருந்து தூண்டிவிட்டு மத்தளம் கொட்டுவது யாவற்றிலும் மகா பெரிய சாமர்த்தியம்.

ஃ

புறங்கூறிப் பொய்த்துயிர்
வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந்தரும்.

ஃ

ஒரு பெரிய ஆலமரத்தின் நுனியிலே கழுகு ஒன்று நெடுநாளாய்க் கூடுகட்டி வாழ்ந்துகொண்டிருந்தது. அதன் அடிமரப் பொந்திலே ஒரு பூனை குடிகொண்டிருந்தது. அம்மரத்தடியிலே ஒரு பன்றியும் தன் குட்டிகளோடுகூடச் சிறிது காலமாக நிலைகொண்டிருந்தது. அவைகளுக்கெல்லாம் அது மிகவும் ஏற்ற இருப்பிடந்தான். "பூனைக்கில்லை தவமும் தயையும்" என்கிறபடி பூனை மட்டும் அங்குவந்து சேராதிருந்தால் எந்தக் கலகமும் நேர்ந்திராது. வந்து குடியிருந்தால்தான் என்ன; மிகவும் இரக்கமற்ற கடுநெஞ்சுள்ளதான பூனை மட்டும் தன் நஞ்சுள்ள நாவை அசைக்காது நிறுத்தி வைத்திருக்குமாயின், அவையெல்லாம் கலகமின்றி சமாதானத்துடன் இருந்திருக்கலாம்.

ஃ

நாமும் வாழ்ந்து அயலாரும் வாழ்கிறதா வென்கிற பொறாமை தவிர, வேறொரு காரணமுமின்றிப் பூனை ஒருநாள் தன் சமீபத்தில் குடிகொண்டிருந்த கழுகண்டை சென்று, அப்பா தோழனே! உனக்குப்பெருத்த அபாயம் வரப்போகிறதே யென்று பயந்து நான் இப்போது உன்னிடம் ஓடிவந்தேன்; அதோ இம்மரத்தடியிலிருக்கின்ற பன்றி எப்போதும் வேறொரு வேலையுமின்றி இம்மரத்தின் வேரைக் கிளறுவதே காரியமாயிருக்கின்றது. அதன் நோக்கத்தைப் பார்த்தால், உன் குஞ்சுகளை எளிதில் பிடித்துக் கொள்ளும்படி இம்மரத்தை வீழ்த்தக் கருதியிருப்பதுபோல் காண்கிறது என்றது. ஃ

அதன் வாய்க்கொழுப்பு இவ்வளவோடு அடங்கிற்றா? இதைச் சொல்லி முடித்ததும் அங்கிருந்தும் இறங்கி மரத்தடியில் பன்றியண்டை

ஒவ்வொரு வேளையில் ஒவ்வொரு குணம். இரவில் மதனதாக வசமாய் விகாரப்பட்டுக்கிடந்தவர்கள் காலையில் மகாவேதாந்திகளாய் மாறிவிடுகிறார்கள்.

வந்து, என் நேசனே! நெடுநாளாய்க் கூடி வாழ்ந்துகொண்டிருந்த பழக்கத்தால் உனக்கு ஒரு தீங்கு நேரிடப் போகிறதென்பதைக் கேட்டு மனம் தாளமாட்டாமல் ஓடிவந்தேன். நானுல் இப்படி உன்னைப்போல் அடிக்கடிக் குட்டிகளைத் தனியே பெருத்த அபாயத்திற்கு ஆளாகும்படி விட்டுவிட்டு நெடுந்தூரம் போகத் துணியேன். நீ சுகமாக வாழ்ந்தாலென்ன?- வாழாமற் போனாலென்ன? அதனால் எனக்கு யாதொரு கெடுதியுமில்லை; உன்னுடைய நன்மைக்காகவே சொல்லுகிறேன். இம்மரத்து நுனியில் துஷ்டப்பறவை யொன்றிருக்கிறதே; அது உன் குட்டியைக் கொன்று தன் சுற்றத்திற்கு விருந்தளிப்பதாகப் பேசிக்கொண்டிருக்கக் கேட்டு மிகவும் துக்கமடைந்து அந்தச் செய்தியை உன்னிடம் அறிவிக்க ஓடிவந்தேன். எச்சரிக்கையா யிரு; இந்நேரம் என் குட்டிகள் என்ன கதியாயினவோ என்று சொல்லித் தீமூட்டிவிட்டுப் போய்விட்டது. அது முதல் அம்மரத்தின் கீழும் மேலும் கோபமும் திகிலும் நாளுக்கு நாள் மிகவும் அதிகமாகிப் பன்றியும் கழுகும் தமது இருப்பிடத்தைவிட்டு அசையவும் அஞ்சி, இரையும் தேடாமல் பட்டினியாய்க் கிடந்தன. இப்படி ஒரு வாரம் போயிற்று.

ஃ

இந்த சமயம் பன்றியின் தோழனை நரியொன்று அங்கு வந்தது. அதைக்கண்டு பன்றி கழுகின் கொடூரமான எண்ணத்தைச் சொல்லி வருந்திற்று. அதைக் கேட்ட நரி, நீ பூனையின் வார்த்தையை நம்பிக் கழுகை விரோதிப்பதிலும் நேரில் கழுகையே கேட்டுவிடுவது சமாதானமாயிருக்கும். உனக்குப் பதிலாக நான் கழுகினிடம் பேசுகிறேன் என்று கழுகினிடம் செல்ல, கழுகு, பன்றி இம்மரத்தை அடியோடு வீழ்த்தப் பார்ப்பதைப்பற்றிச் சொல்லிற்று. அதைக் கேட்ட நரி குலுங்க நகைத்து, பன்றியாவது, இத்தனை பெரிய ஆலமரத்தை வீழத்தவாவது, இது பூனை வடிகட்டின கதை, நீ நேரில் வந்து பன்றியைக் கேள் என்றது. உடனே கழுகு பன்றியிடம் வா, பன்றி தான் ஒரு பாபமும் அறியேன் என, அவ்விதமே கழுகும் தான் ஒரு பாபமும் அறியேனென்றும், பன்றிக்குட்டியைத் தன் இனத்தாருக்குவிருந்திடப் போவதாய் எவரிடமும் சொல்லவில்லையென, பிறகு இம்மூன்றுங் கூடிக்கொண்டு பூனையிடம்போயிற்று. பூனையோ கழுகும் பன்றியும் கூடிக்கொண்டதைக் கண்டு இனி நாம் இங்கிருந்தால் மரியாதை கெடும் என்று ஓடிவிட்டது. நரியின் ஒத்தாசையால் பகைதீர்ந்து கழுகும் பன்றியும் அம்மரத்தின் நிழலிலேயே வெகுகாலம் சுகமாக வாழ்ந்திருந்தன. குண்டுணிகள் கலகமூட்டும் அக்கிரம வழிகளைக் கண்டீர்களா?

பெண்கள் தண்ணீர்க் குடத்தைத் தூக்கிக்கொண்டு வருவதும் ஒருவித அழகே! ஆடவர்கள் குடத்தை எடுத்துவரும் அழகை என்னென்பதோ!

வரவு தொகை கொஞ்சம்; அந்த வேளையில்தான் நமது பசி அதிகம். வரவு தொகை (சம்பளம்) அதிகமானபோதோ பசி வெகு கொஞ்சம்.

குடும்பத்தில் ஏற்படும் துரதிஷ்டமான கலகநிலையைச் சமாளிப்பதற்கு வீட்டுக்காரன் எவ்வளவோ பாடுபட்டுச் சமாதானம் செய்கிறான். ஆனல் கலகம் செய்வோரோ அந்த சமயம் தான் அதிகம் துள்ளிக் குதிக்கிறார்கள்!

உண்மை மனிதர்



சிற்சில சமயங்களில் நாம் முயற்சித்த காரியங்கள் கைகூடாமல் போகின்றன. அச்சமயங்களில் பிறர் நம்மை ஏசுவார்கள். அச்சந்தர்ப்பங்களில் நாம் கோபங்கொள்ளாது அமைதியாயிருக்க வேண்டும். நாம் மேற்சொன்ன காரியம் கைகூடாமற் போனதற்கு நாம் ஜவாப்தாரியன்று என்று சொல்லிவிடக் கூடாது. சில சமயங்களில் நமக்கு முக்கியமான வேலைகள் கொடுக்கலாம். அப்பொழுது மற்றவர்கள் நம்மைச் சந்தேஹிப்பார்கள். நம்மை சந்தேஹிப்பதற்காக அவர்களின்பேரில் கோபங்கொள்ளாது சுயமதிப்போடு திடமான மனத்துடன் நடக்கவேண்டும். நல்ல காரியங்கள் வெளியாவதற்குக் கொஞ்சம் நேரம் செல்லும். நாம் முயற்சிப்பதை விட்டுவிடாமல் பொறுமையுடன் காத்துக்கொண்டிருக்கவேண்டும். பிறர் நம்மைப்பற்றி இகழ்ந்து பேசி நம்மை அவமானம் செய்யுங்கால் அதற்குப் பதிலுக்குப் பதில் அவர்களை எதிர்த்துத் தூஷித்துப் பேசக்கூடாது. மற்றவர் நம்மை வெறுக்கும்போது நாம் அவர்களை வெறுக்கக்கூடாது. நாம் சிறந்தவர்களாகவே இருப்பினும் நம்முடைய சிறப்பைப் பிறர் தெரிந்து கொள்ளும்படி நடக்கக் கூடாது; அல்லது பண்டிதர்களாயிருப்பினும் பாண்டித்யத்தை வெளிக்குக் காட்டக்கூடாது.

உயர்ந்த எண்ணங்களை நாம் வரவேற்கவேண்டும். ஆனாலும் கனவுமட்டும் கண்டால் போதாது. நாம் நினைத்தவைகளை அடைய நம்மால் கூடியவரை தளராத மனத்துடன் உழைக்க வேண்டும். நமக்கு வெற்றி கிடைத்தவுடன் நாம் கர்வமடைகின்றோம். அதுபோலவே ஒரு காரியத்தில் தோல்வியடைந்ததும் மனங்குன்றிவிடுகின்றோம். ஆகையினால் நாம் ஜாக்கிரதையாக இருந்து வென்றவுடன் கர்வமடையாமலும், தோற்றவுடன் மனம் குன்றாமலும் இருக்க வேண்டும். அவைகளிரண்டும் வாழ்வில் மாறிமாறி வருவன. சில சமயங்களில் நம்முடைய வாக்குகளை மாற்றிக் கூறிப் பிறரை மூடத்தனமாக சிலர் நம்பச்செய்கின்றனர். நாம்ஜாக்கிரதையுடன் நிர்ணயித்து வேலை செய்து வந்தும் காரியங்கள் பிறரால் சிற்சில சமயங்களில் கெட்டுவிடக் கூடும். ஆனால், நாம் ஊக்கத்தைக் கைவிடாமல் மேன்மேலும் முயற்சிக்கவேண்டும். அவைகளைச் சீர்திருத்தி, பல கெடுதல்கள் வரினும் அவைகளைப் பார்க்காமல் மேன்மேலும் முயல வேண்டும்.

நம்முடைய சம்பாத்யமெல்லாம் சாமர்த்தியமான ஆட்டதிலோ அல்லது அதிர்ஷ்ட ஆட்டத்திலோ வைத்து ஆடித் தோற்க நேர்ந்தாலும்

இரண்டணா கடன் பெற்றும் அதைத் தராமலே பலநாளும் போக்கி, பிறகு அக்கடனைக் கொடுத்தவர் அதை மறக்கவில்லை யென்று அறிந்து அப்பால் அந்த இரண்டணாவைக் கொடுப்பதில் என்ன பிரயோஜனமோ? பிறகு மற்றொரு சமயம் எட்டணா கேட்கவா, தன்னிடம் இல்லையென்று முன்கடன் தந்தவன் சொல்லிவிடுகிறான். இவர்களும் மௌனமாய்த் திரும்பநேர்கிறது.

ஊக்கத்தைக் கைவிடாமலும் முறுமுறுக்காமலும் சம்பாதிக்க ஆரம்பிக்க வேண்டும். சில சமயங்களில், நாம் வயோதிக திசையை அடைந்து விட்டபோதிலும், நம்முடைய நரம்புகளெல்லாம் தளர்ந்தபிறகு, நம்முடைய உதவி பிறருக்கு வேண்டியிருக்கும். நமக்குப் பலமில்லாவிட்டாலும், திடமனதுடன் பிறருக்கு எவ்வளவு நன்மையை செய்யக்கூடுமோ அவ்வளவு நன்மையைச் செய்யவேண்டும்.

சம்பளம் வாங்கும் இடத்தில் தன்வேலையை எஜமானன் மெச்ச வேண்டுமென்று அதில் ஒருபுகழ்ச்சியை விரும்புவதால் ஊக்கத்துடன் செய்ய முடிகிறது. தன் சக்திக்கு மீறியும் பாடுபடுகிறான். அதற்கேற்ற சாமான்களின் சௌகரியமும் எஜமானர் தருகிறார். வேலையும் நன்கு நடைபெற சாத்தியமாகிறது. தன் வேலையிலோ குற்றம் பேச எவருமில்லை. தேவைக்கான சாமான்களின் சௌகரியமுமில்லை. ஆதலின் தன சொந்த வேலையைமெதுவாகச்செய்கிறான்.

நாம் பொது ஜனங்களுடனே சேரவேண்டும். ஆனாலும், அவர்களிடமிருந்து பழிக்கக் கற்றுக்கொள்ளக் கூடாது. நமக்கு அரசர்களுடனும் ஜமீன்தார்களுடனும் பழக நேர்ந்தாலும் கர்வமடையலாகாது. தாழ்ந்தவர்களை எழ்மையாக நினைக்கக்கூடாது. நமது நண்பர்கள் நமது புகழ்ச்சிகளைப் போற்றுவர். நமது பகைவர்களும் அவர்களுடைய முறையில் நமது இகழ்ச்சிகளை விரித்துத் தூற்றுவர். நாம் புகழ்ந்தவுடன் கர்வமடையக் கூடாது. இகழ்ந்தவுடன் நாமும் மனமுடைந்து விடக்கூடாது. ஒவ்வொருவனுடைய அந்தஸ்தையும் சரியாக மதிப்பிட வேண்டுமேயொழிய ஒருவரையும் அதிகமாக மதிப்பிடக் கூடாது. காலத்தின் வேகமோ மிகவும் அதிகம். சென்றுவிட்ட காலத்தை மீண்டுமடையவே முடியாது. ஒவ்வொரு விநாடியையும் நமக்கு வேண்டிய அளவு நன்மையை அடையாது விட்டுவிடக்கூடாது. இப்படி நடந்தால்தான் நாம் உண்மையான மனிதர் எனக்கருதப்படுவோம். நாம் எல்லாவற்றிற்குமேல் சந்தோஷமாகவும் இருக்கலாம்.

ஜெ. சுந்தாரங்க ராஜு.

வெண்பா.

இன்னீ ருலகத்துக் கின்னுயிரா வந்துலவும்
பொன்னீ! அமிர்தகுண போதினியே!—என்றும்
எமக்கேற்ற வெல்லா மெடுத்துரைக்கும் நல்லாய்!
உமக்கேவரோ ஒப்பு உரை.

பூ. துரைப்பிள்ளை.

கள்ளு—சாராயம்—அபினி—கஞ்சாக் கடைகளைக் குத்தகைக்கு எடுத்தும் ஒரு சொட்டுகூட ருசிபார்த்தறியாக குணசீலர்களு மிருக்கிறார்கள்.

மூளைக்கு விருந்து.

1. ஒரு தர்மவான் மூவருக்கு ஒவ்வொன்றிலும் 10-காய்களையுடைய மூன்று பனங்குலைகளைக் கொடுத்துச் சமமாகப் பாகித்துக்கொள்ளும்படி கூறினார். அம்மூன்று குலைகளில் முறையே 1-கண் நுங்குடையனவும், 2-கண் நுங்குடையனவும், 3-கண் நுங்குடையனவுமாக இருந்தன. அவற்றை ஒவ்வொருவரும் எவ்விதம் பகிர்ந்துகொள்வது? ஒவ்வொருவருக்கும் காய்கள் 10-இருத்தல் வேண்டும். நுங்குகளும் 20-கணக்காக வேண்டுமானால் ஒவ்வொருவருக்கும் தினுசில் எத்தனை காய்கள்?

2. முதலில் ஒன்றும், நடுவில் காலும், கடைசியில் 'ர்'ம் சேர்ந்தால் என்ன?

3. பகவான்தாஸ் என்பவன் வீதியில் ஓர் முத்துமாலையைக் கண்டெடுத்தான். எடுத்து அதைப் பார்வையிட்டுக்கொண்டிருக்குஞ்சமயம் ஒருவன் அவனை நெருங்கினான். இருவரும் அதைப் பாகித்துக்கொள்ளத் தீர்மானித்துப் பகிர்ந்துகொண்டனர். அச்சமயம் 1-முத்து மிகுதி ஏற்பட்டது. மிகுதியை என்செய்வது என்று யோசித்திருக்குந் தருவாயில் வேறொருவன் அவர்களையடைந்தான். மறுபடியும் அம்மாலையை அவர்கள் பாகித்துக்கொண்டு பார்த்ததில் 2-மிச்சம் காணப்பட்டது. மிகுதியைக் குறித்து யோசித்திருக்குஞ் சமயம் நான்காவது ஒருவன் அவர்களை அண்டினான். நால்வரும் பழயபடி அதைப் பங்கிட்டுப் பார்த்ததில் அவர்களுக்கு 3-மிச்சமிருந்தது. இதை நம்மால் சரியாகப் பாவிக்கமுடியாதென்ற தீர்மானத்துடன் நால்வரும் மாலையுடன் ஊரை யடைந்தனர். போகும்வழியில் இரு நண்பர்கள் இவர்களை எதிர்கொள்ள அறுவரும் அதைப் பாகிக்கத் தொடங்கிக் கணக்கிடும் சமயத்தில் 5-மிகுதி காணப்பட்டது. ஆகையால் அவ்வூரிலுள்ள கர்ணம் நரசிம்மனிடம் அவர்கள் சென்று சங்கதி தெரிவித்தனர். மிகுதியின்றிப் பாகிக்கத் தனக்கும் ஒரு பாகம் தரவேண்டுமென்று கேட்க, அதற்கு அவர்களும் இசைய, பின் எழுவருக்குப் பாகித்ததில் சமமாக இருந்ததென்றால் மாலையிலுள்ள முத்துக்கள் எத்தனை?

D. இரத்தின முதலியார்.

[அன்பர்களிற் சிலர் "கணக்கதிகாரம்" என்ற பழய நூலிலிருந்தும் எடுத்தெழுதி அனுப்பியிருக்கின்றனர். அது கூடாது. ப-ர்.]

4. ஒரு பெரியவர் ஓர் மாணவனிடம் ஆயிரம் ரூபாய்களும் பத்து பைகளும் கொடுத்து ஷை ரூபாய்கள் பத்துபைகளிலும் கட்டவேணுமென்றும் கட்டியதன்பின் அவர் கேட்கும் ரூபாய்களை பையை அவிழ்க்காமல் கட்டியபடியே தரவேண்டுமென்றும் (அதாவது 50 ரூபாய் கேட்டாலும் பையாகவே தரவேண்டும்; 500 ரூபாய் கேட்டாலும் பையாகவே தரவேண்டும். ஆனால் 4, 5 பைகளாக சேர்த்தும் கொடுக்கலாம்) பையைமட்டும் அவிழ்க்கக்கூடாது

அந்த சரக்கை வாங்கிக் கொள்ளுகிறீரா வென்றால், கொண்டு வாருங்கள் பார்ப்போம் என்கிறார் வியாபாரி. கொண்டு வந்தபின் விலை குறைத்துப் பேரம் பேசுவது வியாபார தந்திரம்.

என்றும் சொன்னார். அவர் விரும்பியவாறு கொடுப்பதானால் அவன் ஒவ்வொரு பையிலும் எவ்வளவு ரூபாய்கள் கட்டவேண்டும். சேதுநாதன்.

II

விடுவிப்பு:—

தைமாத பத்திரிகையின் 628-ம் பக்கத்திலுள்ளதற்கு விடை:— (1) காரு முருகா. (2) திருமால்மாருதி. (3) மாடுஓடுமா. (4) யானை சினையா. (5) கோடு கெடுகோ. (6) தாரி பெரிதா. (7) வாழை மாழைவா. (8) தேரு வருதே. (9) தாசி மசி தா. (மாழை—அழகு, கிரட்சி.) இப்பெயர்களைத் தலைகீழ் வாசித்தாலும் ஒரே பெயராக வரும்.

2. அரி (விஷ்ணு.)

3. நண்டு, சிப்பி, வேய், கதலி.

4. தேரை. (மலைகுள்ளிருப்பது.) 5. வாழைமரம். 6. தராசு. 7. கொப்பூழ்.

8. அணிலுக்கும் குரங்குக்கும் சாகாமிருகம் என்ற பெயர் உண்டு.

9. 1-பலம் படிக்கல் 1, 3-பலம் படிக்கல் 1, 9-பலம் படிக்கல் 1, 27-பலம் படிக்கல் 1.

10. முதல் குமாரனுக்கு கால்படி பால் கறக்கும் பசுக்கள் 5. முக்கால் படி பால் கறக்கும் பசு 1. 2 படிபால் கறக்கும் பசுக்கள் 4. இரண்டாவது குமாரனுக்கும் அப்படியேதான். மூன்றாவது குமாரனுக்கு முக்கால் படிபால் கறக்கும் பசுக்கள் 8. 2-படிபால் கறக்கும் பசுக்கள் 2—வீதமாகக் கொடுத்தான்.

[விடுகதைகளை வரைவோர் அத்துடன் விடுவிப்பையும் அனுப்புகின்றனராக, அவை மறு பத்திரிகையில் வெளிவருகின்றன. ஆதலின் அதற்கு மற்றவர்கள் வேறு விடுவிப்பை அனுப்பவேண்டாம். ப-ர்.]

செல்வமும் சௌக்கியமும் தரப்படுவதேன்?

தனக்கு சௌக்கியமும் செல்வமும் கொடுக்கப்படுதல் எதற்காகவென்று எண்ணுகிறாய்? தன் ஜீவனத்திற்காகவென்று உழைத்துத் தேடவேண்டிய அவசியமில்லாதபோது தன் மனத்தையும், புத்தியையும் பரோபகாரமான விஷயங்களில் செலுத்துவான் என்னும் கருத்தினால்தானே? அதை மறந்து அக்கிரமத்தில் பிரவேசிக்கிறவர்கள் எத்துணைத் தவறுள்ளவர்கள்? எத்துணைத் துக்ககரமானவர்கள்?

ஒருவன் மற்றொருவனுக்குச் செய்யும் கெடுதி தன்னைத்தானே மோசம் செய்துகொள்வதாகும். அதன் பலன் அறிவது உடனே இல்லாவிடினும் பிறகு என்றைக்காவது நேரிடுவது நிச்சயம்.

சென்றுபோன நாட்கள்.

ஸ்ரீமான் D. A. ஜான் நாடார்,

சேலம் "திராவிடாபிமானி" பத்திராதிபர்.

(589-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீரங்கத்தி லிருந்த இராமாநுஜத்திற்குத் தான் சீக்கிரம் குணப்பட்டு விடுவே னென்றும் கவலைப்பட வேண்டா மென்றும் ஒரு கார்டு ஸ்ரீ ஜான் நாடார் எழுதியவிதமாக வந்தது. ஆனால், அதில் அவரது எழுத்தில்லை. கையொப்பமும் அவருடையதல்ல. பரஸ்பரம் உயிரோடு உயிர் கலந்துள்ள நண்பர்கள் ஒருவருக்கொருவர் எழுதிக்கொள்ளும் கடிதங்களைத் தாமே தமது கைப்பட வரையாவிடில் அதைப் பெறும் நண்பர்களின் மனம் மிக்க வேதனைக்குள்ளாகி விடுவது இயல்பு. கடிதங்கூட எழுதமுடியாத நிலையில் பிணிவசமாகிக் கிடக்க நேர்ந்ததோவென்று அன்பின் நெஞ்சம் அச்சமும் ஐயமும் கொண்டு தத்தளிக்கும். அவ்விதமே இராமாநுஜமும் திகில்பட்டுக் கலங்கி உடனே புறப்பட இருக்கையில், ஸ்ரீ ஜான் நாடார் காலஞ் சென்றுவிட்டதாகத் தந்தி கிடைக்கவும் ஐயோ! என்று அலறிக்கொண்டு சேலம் சென்றார். அதற்கு முன்னரே நல்லடக்கம் செய்துவிட்டனர். ஆருயிர் நண்பரின் முகம் பார்ப்பதற்குக்கூட இல்லாது போய்விட்டது. இராமாநுஜமும் ஜான் நாடாரும் பிராண மித்திரர்களா யிருந்தபோதிலும் அந்தோ! இவர்களின் சந்திப்பு வருஷத்திற் கொருமுறை சில தினங்களே தான். உத்தம நண்பர்களின் சந்திப்புக் கதைகள் இப்படித்தான் பல இடங்களில் இருக்கின்றன. இது நிற்க, "தக்ஷிணதீபம்"-"திராவிடாபிமானி" இப்பத்திரிகைகளை நிர்வகித்த ஸ்ரீ டி. வில்ஸனும், ஸ்ரீ ஜான் நாடாரும் திடீரென மார்படைத்து மரணமானதும் விசித்திரமே. ஃ

"திராவிடாபிமானி"ப் பத்திரிகை எஸ். ஜி. இராமாநுஜத்தின் வசம் ஒப்புவிக்கப்பட்டுத் திரைமறைவில் இருந்து வந்த அவர் உண்மையான ஆசிரியராக வெளிவந்து நடத்தினார். இராமாநுஜமே ஆரம்ப முதல் ஆசிரியராதலின் ஸ்ரீ ஜான் நாடார் சென்ற பின்பும் பத்திரிகையின் நடை கொள்கை மாறவில்லை. முன்போல் சிறப்பாகவே நடைபெற்று வந்தது. 1917-ம் ஜூ மத்தியில் அந்த வாரத்திய பத்திரிகையை வெளியிட்டு விட்டு ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். பிறகு சேலத்திற்குப் புறப்படவில்லை. காரணம், அவரை வேண்டா மென்றும், தாங்களே நடத்திக் கொள்வதாயும் ஸ்ரீ ஜான் நாடாரின் மனைவியான ஸ்ரீமதி சொர்ணம்மாள் கடித மூலம் தெரிவித்து விட்டதேயாகும். பத்து வருட காலமாக அரும்பாடு பட்டு

ஜலதோஷம் வந்து மூக்கு மூடி சுவை தெரியாதபொழுதுதான் வீட்டில் விசேஷித்த போஜனாதிகளும் பக்ஷணங்களும் தயாராகின்றன.

எழுதி வளர்த்த ஒரு பத்திரிகையி னின்று எவ்வித காரணமு மின்றி விலக்கிய அநியாயத்தைக் கடவுளே பார்த்துக்கொள்ளட்டு மென்று இராமாநுஜனும் மௌனமாக இருந்து விட்டார். அவருக்கு நூறு ரூபாய் போல் பாக்கியும் வரவேண்டும். அது வும் கிடைக்கவில்லை. இராமாநுஜம் அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவு மில்லை. பத்திரிகையே போனபோது இந்த அல்பமும் அத்துடன் தொலை யட்டும் என்று இருந்து விட்டார்.

ஃ

இராமாநுஜம் விலகிக்கொண்ட பின்பு கத்திரிக்கோல் துணைகொண்டு மற்றப் பத்திரிகைகளிலிருந்து கத்த ரித்தும், அடுக்கிவைத்துள்ள பைண்டு செய்த பத்து வருஷ திராவிடாபி மானியின் பழய வால்யங்களிலிருந்து சுரண்டியும் பத்திரிகையை நடத்துவ தற்கு முற்பட்டனர். எவ்வளவு காலம் இப்படி சாத்தியப்படும்? பத்திரிகை யின் சுவை குன்றிற்று. கொள்கையும் மாறியது. அடுத்த வருஷத்தில் சந்தா தார்கள் பெரும்பான்மையும் விலகிக் கொள்ளப் பத்திரிகையும் நின்று போயிற்று. கீர்த்திவாய்ந்த ஒரு பத் திரிகையின் கதி அதன் ஆரம்பமுதல் பாடுபட்டு நடத்திய அதன் சொந்த ஆசிரியரை விலக்கிய அநியாயத்தின் காரணமாக அதன் நடை, கொள்கை, அமைப்பு, வனப்பு, ருசிகரம் யாவும் மாறிக் கடைசியில் நின்றுவிடும்படி யாக நேர்ந்துவிட்டது. ஆசிரியரே எழுதி நடத்திய மஹாவிகடதூதன், பஞ்சாமிர்தம்போன்ற பத்திரிகைகளை இன்னொருவரால், அந்த அமைப்பில் நடத்தக்கூடாமையும் ஒரு உதாரண மாகும். அவ்விதமே திராவிடாபி மானியும் மறைந்தது போலும்! பத் திரிகை நடத்திய கடன்களுக்காக அச்சுக்கூடமும் விற்கப்பட்டுப் போயிற்று. என்ன பரிதாபம்! ஒரு குடும்பத்தலைவன் திடீரென்று போய் விட்டதின் பேரிடி இதுவேயோ!

ஃ

1917-ம் ஸு சேலத்தி லிருந்து திரும்பிய இராமாநுஜம் பிறகு சேலம் போகவேயில்லை. பல வருஷங்களுக் குப் பிறகு டாக்டர் வரதராஜுலு நாயுடு தமது "தமிழ்நாடு" பத்திரிகை யைத் தாம் வெளியில் செல்வதால் ஆசிரியத்துவத்தைப் பார்த்துக்கொள் ளும்படி தந்தி தந்து தருவிக்க, அப் பொழுது சேலம் வந்த இராமாநுஜம் "தமிழ் நாடு" பத்திரிகையைக் கவ னித்து வருகையில், ஒரு நதியோரத் தில் ஸ்ரீ ஜான் நாடாரின் பத்தினி யான ஸ்ரீமதி ஸ்வர்ணம்மாளை மிக்க ஏழ்மையில் கண்டு திடுக்கிட்டுக் கண் ணீர் பெருகக் கதறினர். அந்த அம் மையும் "மற்றவர்களின் வார்த்தை யைக் கேட்டு உம்மை நீக்கினேன்; நீங்களேயிருந்து நடத்தியிருந்தால் நான் எவ்வளவோ க்ஷேமமாக இருந் திருப்பேன்" என்று பிரலாபித்தார். இப்பொழுது அந்த அம்மையாரும் அவரது குழந்தைகளும் எங்கு இருக் கிறார்களென்று தெரியவில்லை. கட வுள் தான் அவர்களுக்குத் துணை.

சொந்த ஜில்லாவிலுள்ள கிராமங்களைத் தெரியாது. ஆனால், நெடுந் தூரத்திலுள்ள பல ஊர்களின் தெரு சந்துக்களை யெல்லாம் விவரமாய்ச் சொல்லத் தெரியும்.

வாசனையற்ற புஷ்பமும், பிள்ளைப் பேறில்லாத பெண்ணும், சம்பாத் தியமற்ற மனிதனும், விருந்திக்கு வாாத வீடும், கணவனின் கஷ்டமறியாத மனைவியும் பார்வைக்கு மட்டும் டாம்பீகமாய் அழகாய் இருந்தென்ன பயன்?



பெரியாரின் மொழிகள்



(609-ம் பக்கத் தொடர்ச்சி.)

615. Glory is like a circle in the water, Which never ceaseth to enlarge itself. SHAKSPEARE.

தண்ணீரில் எழும்புகின்ற வட்டங்களைப் போன்று நம்முடைய புகழ்ச்சியும் அழியாது மேன்மேலும் பெருகிக் கொண்டே இருக்கும். ஷேக்ஸ்பியர்.

616. Time has a Doomsday-Book, upon whose pages he is continually recording illustrious names. LONGFELLOW.

காலம் ஒரு காலநிர்ணயப் புஸ்தகத்தை வைத்திருக்கிறது. அதில் புகழ்ச்சி அடைவோர்களின் பெயர்களை அழியாது எழுதிக் கொண்டே வருகிறது. லாங்பெலோ.

617. High be our thoughts. SHAKESPEARE.

நம்முடைய எண்ணங்கள் மேன்மையானவைகளாகவே இருக்கட்டும். ஷேக்ஸ்பியர்.

618. Whene'er a noble deed is wrought, Whene'er is spoken a noble thought, Our hearts in glad surprise, To higher levels rise. LONGFELLOW.

எப்பொழுதாவது ஒரு அரிய செய்கையை நாம் செய்தவுடனேயாவது அல்லது சிறந்த எண்ணத்தைப் பிறர் பேச நாம் கேட்ட போதாவது நம் உள்ளம் சந்தோஷத்தினால் களிப்படைகின்றது. லாங்பெலோ.

619. Every failure teaches a man something if he will learn. DICKENS.

ஒருவன் தோல்வி அடைந்த பொழுது கற்க ஆசைப்பட்டால் அதில் ஏதாவது கொஞ்சம் கற்றுக் கொள்ளுகின்றான். டிக்கன்ஸ்.

620. I am the true, vine and My father is the husbandman. BIBLE.

என்னுடைய தகப்பனார் ஒரு குடியானவர். யானோ எப்பக்கம் வளைத்தாலும் வளையக்கூடிய ஒரு கொடியைப் போன்றவன். என்னை எவ்விதத்திலும் என் தகப்பனார் திருத்தலாம். பைபில்.

621. The Lord make His face shine upon thee, and be gracious unto thee. BIBLE.

சர்வஞ்ஞன் தன் திருமுகத்தை நின்பால் பிரகாசிக்கச் செய்கின்றார். அவருடைய திரு அருள் உனக்கு நன்மை செய்வதாக. பைபில்.

622. Sorrow and silence are strong, and patient endurance is god-like. LONGFELLOW.

துக்கமும் நிசப்தமும் சக்திவாய்ந்தவை. ஆனால் பொறுமை தெய்வீகத் தன்மை வாய்ந்தது. லாங்பெலோ.

படியாதவன் எப்படியோ நாலுகாசு சம்பாதிக்க வழிதேடிக் கொள்கிறான். படித்தவனோ இழி தொழில் நாணிப் பிழைக்க வகை தெரியாது வாடுகிறான்.

623. All the world's a stage, And all the men and women merely players: They have their exits and their entrances: And one man in his time plays many parts. SHAKESPEARE.

உலகமே ஒரு நாடகமேடை. அதிலுள்ள ஜனங்கள் நடிகர்களே! அவர்களுக்கு பிறப்பும் இறப்பும் இருக்கின்றன. ஒவ்வொருவனும் அவனுடைய நேரத்தில் பல பாகங்களை நடிக்கின்றான். ஷேக்ஸ்பியர்.

624. A jest's prosperity lies in the ear Of him that hears it; never in the tongue Of him that makes it. SHAKESPEARE.

ஒரு விகடனது விகடம் அவன் சொல்வதைக் கேட்கின்றவர்களது காதுகளுக்கே இன்பமூட்டுகின்றனவேயன்றி அவனுடைய நாவிற்கு ருசிப்பதில்லை. ஷேக்ஸ்பியர்.

625. We never say fail. There is no such word in our dictionary. LONGFELLOW.

தோல்வி என்னும் பதம் எங்கள் நாவில் வருவதே இல்லை. எங்கள் அகராதியிலும் அப்பதம் கிடையாது. லாங்பெலோ.

626. Let not him that putteth his hand to the plough look backwards, Though the ploughshare cut through the flowers of life to its fountains. LONGFELLOW.

ஒருவன் ஒரு கருமத்தை ஆரம்பித்துவிட்டால் அதனால் விளையும் கஷ்டநிஷ்டூரங்களைச் சிறிதும் ஆராயாமல் பின்வாங்காது முடிக்கவேண்டுமேயன்றித் திரும்பிப் பார்க்கக் கூடாது. லாங்பெலோ.

627. Work: don't make fine playing speeches about bread, but earn it. DICKENS.

வேலையை செவ்வனச் செய். ஜீவனார்த்தத்தைப்பற்றி அழகிய பிரசங்கங்களைச் செய்யாது அதை அடை. டிக்கன்ஸ்.

628. Don't speak lightly of a true heart, which is all your own,...even in jest. DICKENS.

விளையாட்டாகவும்கூட உன் உண்மையான மனதைப்பற்றித் தாழ்த்திப் பேசாதே. டிக்சன்ஸ்.

629. Win straying souls with modesty again. Cast none away. SHAKESPEARE.

தத்தளிப்பவர்களின்பால் நின் கிருபை செல்லட்டும். எவரையும் விட்டுவிடாதே. ஷேக்ஸ்பியர்.

630. Sweet are the uses of adversity, Which like the toad, ugly and venomous, Wears yet a precious jewel in his head.

SHAKESPEARE.

எப்படி அவலக்ஷணமும் விஷமும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு சர்ப்பத்தின் தலையில் மாணிக்கம் திகழ்கின்றதோ, அவ்விதமே கஷ்டதிசையும் ஒருவனுக்கு இன்பத்தை ஊட்டும். ஷேக்ஸ்பியர்.

ஒருவரை வெளியில் ஒருவேலை சொல்லியனுப்புவது தனது வேலையைத் தொந்தரவின்றி ஏகாந்தமாய்ச் செய்வதற்காகவே தானும். மற்றபடி அவரிடம் சொல்லியனுப்பிப் போகச் செய்த சங்கதி அத்தனை முக்கியமல்லவாம். அவர் வெளியில் போனால் அதுவே மகாபெரிய முக்கிய சங்கதியாம்.

631. Not waste the golden hours of youth in vain regrets for the past and indefinite, dim-longings for the future. Youth comes but once in a lifetime.

LONGFELLOW.

வாலிபம் ஜீவியகாலத்தில் ஒரு முறைக்குமேல் பெற இயலாது. நாம் நம்முடைய விலையுயர்ந்த வாலிபத்தை வீணில் பழைய நாட்களின் நிகழ்ச்சிகளிலும் இனிமேல் வருவதாக நாம் எதிர்பார்க்கும் காரியங்களிலும் போக்கக்கூடாது.

லாங்பெல்லோ.

632. The heights by great men reached and kept Were not attained bp sudden flight, But they, while their companions slept, Were toiling upward in the night. LONGFELLOW.

பெரிய மனிதர்கள் அடைந்த புகழும் பிரக்யாதியும் ஒரே நாளில் வந்துற்ற சம்பவங்களன்று. அவர்களுடைய சிநேகிதர்களும் மற்றோர்களும் உழலாதிருக்கும்போது இப்புகழ் அடைந்த பெரியோர் இரவும் பகலும் தளராத மனதுடன் பட்ட கஷ்டங்களின் பயனேயாகும்.

லாங்பெல்லோ.

633. Thinking begets not only thought, but drowsiness occasionally. DICKENS.

ஆழ்ந்து நினைத்தல் ஒருவனுக்கு நல்ல எண்ணங்கள் தோன்றக் காரணமாய் இருத்தலே அன்றி சில சமயங்களில் சோம்பலாய் இருப்பதற்கும் தூண்டும். டிக்கன்ஸ்.

S. ஸ்ரீரங்கராஜு.

உற்சாகத்தின் வேகம்.

ஒருவனுடைய உற்சாகம் முழுமையும் அவன் இடும் சத்தத்திலும், போக்குப்பாங்கிலும், பார்வையிலும், வியவகாரத்திலும் விளங்கும். இவ்வாறு விளங்கும் உற்சாகம் அவனைக் காண்பவர் உள்ளத்தில் அவன் வாக்கியங்களைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பதியும். இந்த உற்சாகம் கண்களில் துலங்கும்; சத்தத்தில் தொனிக்கும்; மிதிக்கும் அடியில் ஒலிக்கும்; ஒவ்வொரு குறிப்பிலும் விளங்கும். அது தன்னைத்தானே அறிவிக்கும். குடும்பத்தின் தலைவி தலைவனுடைய உற்சாகம்தான் அந்த வீட்டுக்கு உயிர். சகல குணாதிசயங்களும் அமைந்திருக்கப்பெற்ற ஒருவனிடத்தில் உற்சாகத்துடன் கலந்திருக்கவேண்டிய சாந்தமும், உற்சாகத்தைப்போலவே அவ்வப்போது பிரத்தியட்சமாகும்.

காபி ஹோட்டலில் கைப்பணம் செலவிட்டாலும் குழந்தைகளின் வயிறும் நிறையவில்லை; நமது பசியும் தீரவில்லையென்கிறார் ஏமாறிய ஒருவர்.



அமைத்த விதி பிசகாது.

[கானஸ்டண்ட் சக்ரவர்த்தியின் சரிதை.]

முற்காலத்தில் பைஸேஞியம் (Byzantium) என்று வழங்கப்பட்டதும், தற்காலம் கான்ஸ்டேண்டிநோபில் (Constantinoble) எனப் பெயர் புனையப்பெற்றிருக்கிறதுமான நகரை முஸ்லீன் (Muselin) சக்ரவர்த்தி ஒருகால் அரசாண்டு வந்தான். அவன் ஒரு யூதன். கல்வி கேள்விகளிற் சிறந்தவன். பல வேறு சாஸ்திரங்களைக் கற்றறிந்தோன். அவன் வானசாஸ்திரத்தில் நிகரற்ற நிபுணனாய் விளங்கினான். நக்ஷத்திரங்களின் போக்குகளையும், அவற்றால் மானிடருக்கு உண்டாகும் நன்மை தீமைகளையும் உய்த்துரைக்கவல்ல ஆற்றல் படைத்தோனவன்.

ஃ

இவனது ஆட்சியில், பட்டப்பகல்போல் நிலவுகாய்ந்து கொண்டிருக்கும் ஓர் இரவில் இச்சக்ரவர்த்தியும், இவனது நம்பிக்கைச் சேவகர் சிலருமாய் நகரசோதனையின்பொருட்டுத் தெருக்கள்தோறும் சென்று கொண்டிருக்கும்பொழுது ஒரு வீட்டின் சாளரத்தண்டை ஒரு மனிதன் நின்றுகொண்டு உரத்த குரலுடன் தேவஸ்துதி செய்திருந்ததை இவர்கள் கேட்டார்கள். அம்மனிதன் ஒரு கிறிஸ்தவன். அவன் தன் வேண்டுகோளுக்கிணங்கக் கடவுள் தனக்கு ஒரு குழந்தையை நன்முகூர்த்தத்தில் தந்தருளியதைப் பற்றி அவரைப் போற்றித் துதித்துக் கொண்டிருந்தான்.

ஃ

“அவன் தனக்கு எவ்வேளையில் மகவு பிறக்கவேண்டுமென எண்ணியிருந்தானென்பதை யறிய மிகுதியும் ஆவலுள்ளவனா யிருக்கிறேனாதலின் அவனுடன் சற்று ஸம்பாஷிக்கவேண்டும்” என்று சக்ரவர்த்தி சொல்லவும், அவனுடனிருந்த வீரனொருவன் அக்கிறிஸ்தவன்பாலணுகி அவனையழைத்து வந்து சக்ரவர்த்தியின் முன்பு நிறுத்தினான். அவனது தெய்வத்தியானம் எந்த வார்த்தை உத்தேசித்ததென்று சக்ரவர்த்தி கேட்க, அவன், தன்னுடன் வார்த்தையாடுவது சக்ரவர்த்தியென்று ஒரு சிறிதும் உணராது, தன் வேண்டுதலைக் கடவுள் கிருபைகூர்ந்து ஏற்று ஜோதிமயமான உருவமைப்பெற்றுள்ள ஆண்மகவைச் சுபமுகூர்த்தத்தில் தனக்கு உபகரித்துள்ளாரென்று கூறினதுமன்றித் தான் சிறிது கற்றறிந்தோனென்றும், நக்ஷத்திர பலாபலன்களையறியும் வன்மை யுடையோனென்றும், தனது புத்திரனது ஜனன லக்

உற்பத்தி தேவைக்கதிகமாகி விடும்போது விலை குறைவது சகஜம்.

னத்திற்கேற்ப அவன் தக்க பதவியில் வாழ்வானென்றும் கூறினான்.

ஃ

"எவ்வித நிலையில் உன் புதல்வன் விளங்குவானென்று நினைக்கிறாய்?" எனச் சக்ரவர்த்தி வினவ, அதற்கு அக்கிறிஸ்தவன் அந்த லக்கினத்தில் பிறக்கும் குழந்தை சக்ரவர்த்தியின் புதல்வியை மனைவியாகப் பெற்று இந்நகர்க்கும் இந்நாட்டிற்கும் ஏக சக்ராதிபதியாய் விளங்குவான்" என்று உரைத்துத் தன் வீட்டிற்குள் சென்றான்.

ஃ

இதைக் கேட்டதும் சக்ரவர்த்தியின் மனம் சற்று கலங்கிற்று. சிறிது அச்சமும் கொண்டான். ஏனென்றால், இந்த ஏழைக் கிறிஸ்தவனின் மகன் பிறப்பதற்கு எட்டு நாட்களின் முன்புதான் இந்த சக்ரவர்த்திக்கு ஒரு குமார்த்தி பிறந்திருந்தனள்.

ஃ

கிறிஸ்தவன் சென்ற பின்பு சக்ரவர்த்தி தன்னுடன் துணையாக வந்துள்ள வீரனுடன் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசுவதானான். "நீ உடனே இவன் வீட்டிற்குச்சென்று பிறர் ஒருவரும் அறியாவண்ணம் அக்குழந்தையைத் தூக்கிக்கொண்டு வருக" என்று சக்ரவர்த்தி அவ்வீரனுக்குக் கட்டளையிடவே; வீரனும் அவ்வண்ணமே அவ்வீட்டை யடைந்து நல்ல சுக நித்திரையிலுள்ள அக்குழந்தையைத் தூக்கிவந்து தன் அரசனின் முன்பு கிடத்தினன். உடனே சக்ரவர்த்தி ஒரு கத்தியால் இரக்கமென்பது தினைத்துணையு மில்லாதவனாய் அம்மாசற்ற குழந்தையைக் குத்தவே அது இறந்ததுபோல் மூர்ச்சித்து அசைவற்றிருந்தது. இன்னுமொரு முறை குத்த எத்தனிக்கும் சமயம் வீரன் தடுத்து, "மகாராஜ்! வேண்டாம்; ஏற்கெனவே இறந்து கிடக்கும் குழந்தையை மறுமுறை குத்த வேண்டிய நிமித்தமில்லையே; நான் அதை எடுத்துச்சென்று கடலில் எறிந்துவிட்டுத் திரும்புகிறேன்" என்று கூற, அதற்கு சக்ரவர்த்தி "இதன்மீதுள்ள என் வெறுப்புக்கு அளவில்லை; அவ்வாறே செய்வாயாக" என்று உத்தாவளித்தனன்.

ஃ

உடனே வீரன், குற்றுயிராய்க் கிடக்கும் குழந்தையை எடுத்து ஒரு வஸ்திரத்தால் சுற்றி மார்புடன் அணைத்துக்கொண்டு, சக்ரவர்த்தியிடமிருந்தும் விலகி தூரத்தில் வந்ததுமே அந்தப் பச்சைப் பாலகனை பேதைக்குழந்தையினிடம் பரிதாபங் கொண்டவனாய் அதனைச் சமுத்திரத்திற்கு ஆகாரமாக்காமல் அந்நகரின் கண் இருந்த மடத்தின் தலைவாயலில் கிடத்திச் சென்றான். சற்று நேரத்தில் குழந்தை மூர்ச்சை தெளியவே, கத்த ஆரம்பித்தது. அம்மடத்தினுள் வசிக்கும் மடாதிபதியும் ஸந்யாசிகளும் குழந்தையின் குரலைக் கேட்டு மிக்க வியப்படைந்தவர்களாய் வெளியில் வந்தனர். மடாதிபதியின் உத்தரவால் அக்குழந்தையை உள்ளே எடுத்துச்சென்று, அது கத்தியால் குத்தப்பட்டிருப்பதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியத்தையும் பரிதாபத்தையும் கொண்டனர்.

ஃ

"உலகம் பழித்திடப் பாவி பானை பிடித்த பாக்கியம் இதுவேயோ? ஐயையோ பிராண நாதா! ஆவி யெனக்கும் போகாதா?"

அவரவர்கள் உபசரிக்கும் உண்மை உபசரிப்புக்குத் தக்கபடியே நாளும் மணியும் அதிகமாகும்படி உட்கார்ந்து கொண்டு உள்ளம் குளிர வசதிப்படும்.

மறுநாட் பொழுதுபுலர்ந்து கதிரவன் உதயமானதும், மடாதிபதி இரண வைத்தியர்களை அழைத்து வரச் செய்தார். அவர்களது சிகிச்சைகளால் குழந்தையும் சிறிது நாட்களில் சுகமடைந்தது. அக்குழந்தை சொஸ்தமடையும்வரை அவனது தேகஸ்திதி சிறிதும் மாறுபாடின்றி ஒரு நிலைமையில் நின்றிருந்ததினால் கான்ஸ்டன்ட் (Constand-மாறாமை) எனும் காரண இடுகுறிப்பெயரை அம்மடாதிபதி அவனுக்கு இட்டார். பின் அவனுக்கு ஒரு செவிலித்தாயை நியமித்து வேண்டுவனவற்றை யெல்லாம் அளித்துப் பராமரித்து வந்தனர். சிறுவனும் செல்வமாய் வளர்ந்தனன். எல்லோரும் விரும்பி எடுத்தற்கான திருவுருவும் வாய்க்கப் பெற்றிருந்தனன். ஆனால் கத்தியின் கொடூரகாயத்தால் ஏற்பட்டுள்ள வடு மட்டும் நீங்காமலிருந்தது. ஐந்தாம் வருடத்தில் பள்ளியில் வைக்கப்பட்டுப் பல கலைகளையும் பரக்க வுணர்ந்தனன். தந்தைபோற் பாதுகாத்து வரும் மடாதிபதியுடன் பல சமயங்களில் இவன் குதிரைச் சவாரி வருவது வழக்கம். ஃ

இவ்வாறாக இருக்க, கான்ஸ்டன்ட் பன்னிரு பிராயமுள்ள பாலகனாய்ப் பொலிவுற்று விளங்கும் போது ஒரு நாள் மடச்சம்பந்தமாய் மடாதிபதி சக்ரவர்த்தியுடன் ஸம்பாஷிக்கவேண்டிய ஆவசியகம் ஏற்பட்டது. ஏனெனில் அம்மடத்தைச் சார்ந்துள்ள சிலபலாதிகளும் ஸந்யாசிகளும் அவனது ஆக்ஞைக்குக் கீழ்ப் பட்டவை. ஆகவே சிஷ்யகூட்டங்களும் வேலையாட்களும் தன்னைப் புடைசூழ்ந்து வர மடாதிபதி காணிக்கை கொண்டு குதிரையின் மீது ஆரோகணித்தவராய் முன் செல்ல, இவரது அருமைச்சிடனும் கான்ஸ்டன்டும் பின்னுற் சென்றனன். ஃ

சக்ரவர்த்தியின் முன்பு இவர்கள் வந்து நிற்க, சக்ரவர்த்தி இச்சிறுவனது நிகழ்ந்து விளங்கும் திருமேனியின் வனப்பினைக் கண்டு வியந்தவனாய் மடாதிபதியினிடம் இவனைப் பற்றி விசாரித்தான். பின் மடாதிபதியின் மகுடத்தைத் தாங்கிநிற்கும் கான்ஸ்டன்டுடன் ஸம்பாஷித்து இவ்வளவு அழகினைப்பெற்ற இந்த சுந்தரச் சிறுவன் யூதனாய் இல்லாமல் கிறிஸ்துவனா யிருப்பது பரிதபிக்கத் தக்கதேயாமென்றனன். இச்சொற்கள் மடாதிபதியின் மனதைத் துளைத்ததெனினும் மறுமொழி கூற அஞ்சி மௌனமாக இருந்தனன். ஃ

"இந்த அதிரூபன் உமக்கு எவ்வாறு கிடைத்தான்? அதை எனக்குச் சொல்லுக" என்று சக்ரவர்த்தி வினவ, மடாதிபதி ஆதியோடந்தமாய் மடத்தின் வெளிப்புறத்தே குழந்தையைக் கண்டதும், அதன் மீதிருந்த காயத்தை ஆற்றின விதத்தையும், 'கான்ஸ்டண்ட்' என்று நாமகரணமிட்டதின் வரலாற்றையும் விவரித்துக் கூறினர். ஃ

மூஸ்லீன் சக்ரவர்த்தி இவ்வரலாற்றைக் கேட்டதும் திடுக்கிட்டு இந்தக் கான்ஸ்டன்டே தான் முன்னர் கொல்லவிரும்பியிருந்த குழந்தையென்றுணர்ந்து, மோசக்கருத்து கொண்டவனாய், இவனைத் தன்பால் விட்டேகும் வண்ணம் மடாதிபதி

தங்களுக்கு ஒரு தாசி—வைப்பு—இருப்பதாகச் சிலர் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள். அதன் மூலம் தங்களின் நடத்தைக் குறைவை மற்றவன் கிரகித்துக் கொள்கிறான் என்பதை இவர்களின் மூளை யறிவதில்லை.

யை வேண்டினன். அவரும் தன் சிஷ்ய வர்க்கத்தினரோடும் ஆலோசனை செய்து குறினை யறியாமல் களங்கமற்ற கான்ஸ்டன்டை சக்ரவர்த்தியிடம் இருக்குமாறு விட்டுச் சென்றார். அநாகரீகமுள்ள ஒரு குடியானவனின் மகன் ஏகபோக சல்லாபத்திலிருக்கும் தன் அருமைப் புதல்வியை மனைவியாகக் கொள்வான் என்ற விஷயம் மனதில் உதிக்குந்தோறும் தாங்கொணுக் கோபம் கொண்டு, எவ்வகையிலேனும் கான்ஸ்டன்டைக் கொன்று தொலைக்க வழி தேடியவா றிருந்தான்.

ஃ

சீக்கிரம் அதற்கு ஒருவழியும் ஏற்பட்டது. யுத்தவிஷயமாய் அரசன் நெடுந்தூரம் செல்ல வேண்டியதாகி, கான்ஸ்டன்டையும் தன்னுடன் அழைத்துப் போனான். பின்பு அவ்விடமிருந்து கான்ஸ்டன்டினிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து இதை பைஸேன்ஷியம் கோட்டைக்குத் திரும்பிச்சென்று அரண்மனைக் காரியதரிசியிடம் அக்கடிதத்தைத் தருமாறு ஆக்ஞாபித்தனுப்பினன்.

ஃ

தன் மாணச்சீட்டைத் தானே கொண்டு செல்கிறோ மென்பதை யுணராதவனாய் கான்ஸ்டன்ட் மிக்க குதூகலத்துடன் புறப்பட்டான். அக்கடிதத்தில் "இச்சிருபங் கொண்டு வருபவனை உடனே கொன்றுவிடு" என்று சக்ரவர்த்தி அரண்மனைக் காரியதரிசிக்கு உத்திரவிட்டிருந்தான். மிக்க ஸந்தோஷமாய்ப் பிரயாணம் செய்த கான்ஸ்டன்ட் பதினைந்து நாட்களுக்குள் பைஸேன்ஷியம் நகரையணுகி அரண்மனையைச் சார்ந்துள்ள நந்தவனத்தை யடைந்தான். அத்தருணம் பகற்போஜனமுண்ணும் வேளையாயிருந்ததினுல் காரியதரிசிக்காக அவ்விடத்தில் எதிர்பார்த்தபடி படுத்துக்கொண்டிருந்தவன் களைப்பினுல் சோர்ந்து நித்திரை போய்விட்டான்.

ஃ

வனிதா ரத்நமான சக்ரவர்த்தியின் புதல்வி அன்னம் புசித்தபின்பு தன் தோழிமாருடன் இந்த நந்தவனத்திற்கு வந்து, "ஒடிப் பிடித்தல்" என்னும் விளையாட்டை ஆடிக்கொண்டே கான்ஸ்டன்ட் படுத்திருக்கும் மரத்திற்கு அருகே வந்துவிட்டாள். பூலோக சந்திரனைப் போல் புன்முறுவல் பூத்துப் படுத்திருக்கும் புனித புருஷமூர்த்தியைக் கண்ணுற்ற அரசிளங்குமாரி அவன் மீது அடங்காத மையல் கொண்டாள். அய்யனிட்ட எழுத்து தப்புமோ! இத்தகைய வடிவம் வாய்ந்துள்ள வாலிபனை அவள் இதுவரையும் கண்டாளில்லை. தன் அந்தரங்கத் தோழி யொருத்தியைத் தவிர்த்து மற்றெல்லோரையும் அனுப்பிவிட்டு, அத்தோழியின் கரங்களைப் பற்றிக் கொண்டு "என் அருமந்த சிநேகி, என் ஆயுளில் இந்நாள்வரையும் இவ்வித அழகுவாய்ந்த ஆடவனை எங்கும் கண்டிலேன். இவன் யாருக்கோ கடிதம் கொண்டுவந்திருக்கின்றான். அக்கடிதத்தில் என்ன வரையப்பட்டிருக்கிறதென்று அறிய ஆவல் கொள்ளுகிறேன்" என்று உரைத்து, கான்ஸ்டன்டினிடமிருந்த கடிதத்தை மெதுவாக எடுத்துப் பார்த்துத் துக்கித்தவளாய் மௌனமாக அரண்மனைக்கு விரைந்து சென்று, தன் தந்தை தன்னிடம் கொடுத்திருப்பதும், அவரு

கடவுள் தாமே தனியே இருந்து சகலமும் சிருஷ்டிக்கின்றார். அவர் படைத்த ஜீவ வர்க்கங்களோ மற்றொன்றின் உதவி கொண்டு சிருஷ்டித் தொழிலைச் செய்கின்றன. தனியே இருந்து செய்ய முடியவில்லையாம்!

டைய இராஜமுத்திரை யிடப்பட்ட தும், ஒன்றும் எழுதப்படாததுமான கடிதத்தை எடுத்துப் பின்வருமாறு அதில் வரைந்தாள் :—

ஃ

"கிரீஸ் (Greece) தேசத்திற்கும் பைஸேன்ஷியத்திற்கும் ஏகசக்ராதிபதியும், முன்வீன் என்னும் பெயரைப் பூண்டவருமான நாம் நமது அரண்மனைக் காரியதரிசியாருக்கு அன்புடன் விடுக்கும் கட்டளையிருப்பு:—இக்கடிதம் கொண்டுவரும் வாலிபருக்கு நமது அருந்தவக் குமாரியை நம் மதாசாரத்திற்கேற்பக் கன்னிகாதானம் செய்து கொடுப்பீராக. இவ்வாலிபன் உத்தம குணங்கள் வாய்க்கப் பெற்றுள்ளானென்றும், உன்னத நிலைமையை யடைவதற்கேற்றவனென்றும், நம் புதல்விக்குச் சாலவும் பொருந்திய மணவாளன் இவனேயென்றும் நாம் அறிந்திருக்கின்றோம். நம் நாட்டுக் குடிபடைகள் அனைவருக்கும் ஒரு பெரும் விருந்திட்டு அத்திருமணநாளை ஒரு திருவிழாபோற் கொண்டாடும்படிச் செய்வீராக"—என்பதேயாம்.

ஃ

இக்கடிதத்தை எழுதிமுடித்ததும் அதைஎடுத்துக்கொண்டு கான்ஸ்டன்டிடம் சென்று அவனது உடையில் அக்கடிதத்தை வைத்துவிட்டாள். நற்காலமாக அதுவரை அவன் கனத்த நித்திரையிலேயே இருந்தான். பின் அவனை விழிக்கச் செய்யும்பொருட்டுக் குயிலின் குரலனைய தொனியில் அரசிளங்குமரி சில பாக்களைப் பாடலும், கான்ஸ்டன்ட் கண் விழித்துக் கன்னிகைகளைக் கண்டனன். உடனே எழுந்தனன். கோமகளின் வனப்பினைக் கண்டு ஒன்றுங் கூறத் தோன்றாதவனாய் ஸ்தம்பித்து நின்றனன். ஃ

"நீவிர் எங்கு செல்கின்றீர்?" என்று சக்ரவர்த்தியின் புதல்வி கேட்க, கான்ஸ்டன்ட் தான் சக்ரவர்த்தியினுடைய கடிதத்தை அரண்மனைக் காரியதரிசிக்குக் கொடுப்பதற்காக அவர் வரவை எதிர்பார்ப்பதாய் விடை பகர்ந்தனன். உடனே இராஜசெல்வி அவனை அழைத்துச்சென்று காரியதரிசி முன்பு விட்டனர். அவனும் கடிதத்தைப்பெற்று அதன் விஷயத்தை வாசித்தறிந்ததே கான்ஸ்டன்டின் கரத்தைப்பற்றிக் கைலாகு கொடுத்து உபசரித்தனன். அரசகுமாரி இக்காட்சியைக் கண்டதும் மிக்க வியந்தவள்போல் நடித்து, அக்கடிதத்தில் அடங்கியுள்ள விஷயங்களைத் தானும் அறியுமாறு படித்துக் காண்பிக்கும்படி காரியதரிசியை வேண்டினள். ஃ

இவ்வேண்டுகோளிற் கிணங்கிக் காரியதரிசியும் கன்னிகையுடன் அவ்வறையினின்றும் வெளிவந்து அவளிடம் அக்கடிதத்தைத் தந்தனன். அவள் அதனை வாசித்து மிகுதியும் ஆச்சரிய மடைந்தவள்போல் அபிநயித்தனள். ஃ

காரியதரிசி :—"சீமாட்டி! உம் தந்தையாரான என் எஜமானரின் கட்டளையைச் சிரமேற்கொண்டு அதன்படி நடத்தல் நம் கடமையாகும். இல்லாவிடில் அவருடைய கோபத்திற்குப் பாத்திரமாக வேண்

புருஷன்—மனைவிக்குள்ளிருக்கும் சங்கட சஞ்சலங்களைப் புகுந்து பார்ப்பினும் அறிய இயலா. அவ்வளவு மூடுமந்திர தந்திரம் அது.

அவனுக்கு நேர்ந்த பொல்லாப்புக்குக் கொண்டாட்ட மடித்தவன் தனக்கே அந்தப் பொல்லாப்பு வந்துவிடும்போது ஆ! என்று வாயைப் பிளக்கிறான்!

டும் என்று கூறவே, கன்னிகை தன் சந்தோஷத்தை வெளிக்குக் காட்டாது, நகரிலுள்ள பிரபுக்களனை வரும் இம்மணத்தினை ஆமோதிப்பாராயின் அவ்விதமே செய்வதில் யாதொரு தடையுமில்லை'' என்றனன். ஃ

பிரபுக்களும் இதற்கு இசைந்து கூறவே, கோமகளுக்கும் கான்ஸ்டண்டுக்கும் அன்றே விவாகம் மிகச் சிறப்பாய் நடந்தது. அன்றுமுதற் பதினைந்து நாட்களும் குடிஜனங்களனைவருக்கும் அச்சந்தோஷத்திற்கிணங்க அறுசுவை யுண்டியுடன் அன்னமளித்தார்கள். அந்நாட்களில் அந்த நகரம் அமரர் வசிக்கும் பதியே போல் விளங்கிற்று. ஆவது விதியெனில் அனைத்துமாயிடும். ஃ

நிற்க, முஸ்லீன் சக்ரவர்த்தி தூர தேசத்தினின்றும் திரும்பிவர, அரண்மனை காப்போர் எதிர்கொண்டழைக்க, அவன் நகரில் யாதேனும் விசேஷம் உண்டோ என வினவ, அவர்கள் 'நாட்டில் குதூகலம் குடிகொண்டிருக்கிறது' என்றனர்.

" அவ்வாறிருப்பதற்குரிய காரணம் யாது ?"

"ஏன் தங்களுக்குத் தெரியாததல்லவே?"

"உண்மையில் யான் ஏதும் அறியேன்; சங்கதியைக் கூறுவீராக."

என்று சக்ரவர்த்தி கேட்க, அவர்கள் நடந்தவற்றை யெல்லாம் விளங்கக் கூறினார்கள். ஃ

சக்ரவர்த்தி இதைக் கேட்டதும் திடுக்கிட்டானெனினும் "அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்ற வாக்கின் உண்மையை உணர்ந்தவனாய்த் தான் கோயில் சென்று தன்னை நமஸ்கரித்த மகளையும் மருமகனையும் பல ஆசிகள் கூறி வாழ்த்தினன்.

ஃ

பிறகு சக்ரவர்த்திக்குத் தான் காரியதரிசிக்கு அனுப்பிய கடிதத்தின் ஞாபகம் வந்து, அதைக்காரியதரிசியிடமிருந்து பெற்று வாசித்துப் பார்த்தான். இது தன் புதல்வியின் சூழ்ச்சிதானென அறிந்தானாயினும் விதிவல்லமை மிகுந்ததென்றுணர்ந்து மௌனமாயினன். ஃ

பிறகு முஸ்லீன் சக்ரவர்த்தி இறக்கவே, கான்ஸ்டண்ட் ஸிம்ஹாஸனமேறிச் செங்கோல் கைக்கொண்டு நகரம் செழிப்புற அரசு புரிந்தனன். தன் பெற்றோர்களையும் கண்டறிந்துத் தன்னிடம் அழைத்துக்கொண்டனன். அவனை அன்புடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்த மடாதிபதியை மறந்தானில்லை. அவருக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் புரிந்து மிக்க கௌரவப்படுத்தினான். தன் மனைவியையும் நாட்டிலுள்ள எல்லோரையும் கிறிஸ்தவ மதத்தை யனுஸரிக்கும்படி செய்தனன்.

ஃ

கான்ஸ்டன்டின் அருந்தவப்புதல்வனுக்குக் கான்ஸ்டன்டயின் (Constantine) என்னும் நாமத்தைச் சூட்டவே, இவனது நினைவு இந்நிலவுலகில் எந்நாளும் நிலைத்தற் பொருட்டு பைஸேன்ஷியம் என்ற நகரம் இப்பொழுதும் கான்ஸ்டேன்டிநோபில் (Constantinoble) என்ற பெயர் புனையப்பெற்று விளங்கி நிற்கின்றது.

தூங்குகையில் எழுப்பாதே யென்று ஆயிரம்தடவை சொல்லியுடைம் இயே எழுப்பிவிடுகிறார்கள். பாதி தூக்கத்தில் எழுந்திருப்பது பலக்குறைவு.

பழமொழிக் குறிப்புகள்

3. இல்லறம்.

(628-ம் பக்கத் தொடர்ச்சி.)

தான் பத்தினியானல் தேவடியாள் தெருவிலும் குடியிருக்கலாம்.

ஒரு பெண்மணியின் சிரேஷ்டமான நற்குணத்தின் உயர்வைக் காட்டும் பழமொழி இது. தான் பத்தினியானல் அதாவது, தன் கற்புத்தன்மையைக் காத்துக்கொள்ளும் நற்குணமுடையவளானல், அவள் கேவலம் விலைமகளிர் வசிக்கக்கூடிய இடத்தில் வசிக்கும்படி காலகதி—சந்தர்ப்பம் நேர்ந்தாலும் அவளுடைய நடத்தையோ நற்குணமோ ஒருநாளும் கெடாதென்பதாம். நடத்தை கெடாததற்குக் காரணம் நற்குணத்தின் உறுதியாகும். இந்த நற்குணம் இயல்பிலேயே நம்முடன் கூடப்பிறந்ததாய் நமக்குள்ளேயே இருந்துவருவதாய் இருந்தால் தான் அது உறுதியாக இருக்கும். பலர் மெச்சும்படி நற்குணமுடையவனாகத் தோன்றுகிறவன் வெளிவேஷக்காரனேயாவன். கெட்டுப்போவதற்கு சந்தர்ப்பமும் சகவாசமும் கிடைக்காத காரணத்தாலேயே சிலர் நன்னடத்தை யுடையவர்களாக இருப்பதுமுண்டு. இத்தகையோர் தருணம் வாய்த்தால் ரகசியத்தில் கெட்டுண்டு போய் வெளிக்குமட்டும் பரம யோக்கியர்களாகக் காண்பித்துக்கொள்வார்கள். இப்படிக் கெட்டுப்போனவர்களின் ஒரு திடமான கொள்கையென்னவென்றல், கெடாமலே ஒருபோதும் ஒருவனும் இருக்கமுடியாதென்பதும், அந்தாங்கத்திலாவது கெட்டிருக்கலாமென்பதுமே. இத்தகையோரெல்லாம் மனவுறுதியற்றுப் பிதற்றுகின்றவர்களாவர். அவ்வுத்தமமான உறுதி உள்ளோருக்கே நற்குணம் உண்மையாக உண்டாகியிருக்கும். அது உள்மனத்திலிருந்து எழுந்ததாகவும் இருக்கும். அதன் உறுதிக்கு எந்த நாளும் அழிவில்லை. கற்றூண் ஒடிவதன்றி வளைவதுகண்டதுண்டா?

ஃ

பழைய நாட்களில் ஒவ்வொரு வகுப்பார் ஒவ்வொரு தெருவில் சேர்ந்து குடியிருப்பது வழக்கம். அவ்விதமாகத் தாசித்தெருவென ஒரு தெருவும் தனித்து இருக்கும். அந்தத் தெருவுக்கு யோக்கியர்கள் செல்லார். அத்தகைய தாசித் தெருவில் ஒரு பதிவிரதை குடியிருக்க நேர்வது காலக்கொடுமையாவிருக்கலாம். அங்கு தன் எளிய நிலைமைக்கேற்ப சுலப வாடகையில் வீடு கிடைத்துக் குடிபுகுந்ததாயிருக்கலாம். அத்தகைய கஷ்டகாலத்திலும் அவள் தன் கணவனையே தனது மனோகானகக் கருத, அந்த உத்தமனும் தாசிதெருவில் தான் வசித்தும் எவளிடத்தும் தன் மனதைச் செலுத்தாது தன் மனைவி

யையே தனது துணாயகமாக நம்பியும் வாழ்க்கை நடத்துவோளா யிருக்கலாம். இத்தகைய அந்நியோந்நிய தம்பதிகள் எந்தத் தெருவிலிருந்தாலென்ன; அவர்களுடைய நற்குணமோ அன்போ ஒருநாளும் சோதனைக்குள்ளாவதற்கில்லை. இது இயற்கையால் உண்டான நற்குணத்தினுடைய மகோன்னதமான நிலையாம்.

ஃ

தான்பத்தினியாயிருந்தால் தாசித் தெருவிலும் குடியிருக்கலாமென்பது போல, தான் வாய் அடக்கமும் பொறுமையும் சகிப்பும் கொண்டவளாக இருந்தால் எத்தகைய கொடிய மாமி நாத்தியின்கீழும் க்ஷேமமாக வாழவும் முடியும். மாமி நாத்திகள்

கதவுக்கு உள்
தாள்ப்பாள்போடுவது
எவரும் உள்ளே வராதிருக்கமட்டுமல்லவாம். கதவு தட்டியவுடன் தான் எச்சரிக்கையாய் தனது காரியங்களை ஒருவிதமாய் மூடி ரகசியப்படுத்திப் பிறர் அறியாவாறு செய்துவிடுவதற்காம். குனிந்து வேலை செய்கையில் திறந்துள்ள வாசலுக்குள் நுழைந்து முதுகு பக்கம் மறைந்து எவரும் கவனியாம லிருப்பதற்காம். மூடிய கதவுக்கும் வஸ்துவுக்கும் எப்போதுமேஒரு கௌரவமுண்டு.

மடமடவென்று பேசுகையிலும் தான் வாய்பொறுத்து மவுனமாகி சகித்துக் கொண்டு சென்றுவிடுவதாகில் மேலுக்கு வளரக்கூடிய சண்டைக்கு ஹேதுகாம் ஏற்படமாட்டாது. சீக்கிரத்தில் தானே அது தணிந்துவிடும். உத்தமியாகவே பொறுமைப்பட்டிருக்கக்கூடிய ஒருவளுடன் சண்டை பிடிக்க எவருக்கும் மனம் வராது. தான் அடங்க மற்றவர்களும் அடங்கிப்போவர். பதிலுக்குப் பதில் வார்த்தை சொல்வதாலேயே குடும்பச்சண்டைகள் குரூரப்படுகின்றன. வாயடக்கமுள்ளவளானால் எத்தகைய சண்டை நேருமிடத்திலும் சமாதானமாய் நடந்துகொண்டுபோகக்கூடிய சமர்த்தையா யிருப்பாள்.

ஃ

இவ்விதமே வரவுக்குள்ளடங்கிய செலவில் வாழத் தெரிந்தவளானால், எத்தனைச் சொற்ப வரவிலுங்கூட, எவ்வளவு கஷ்டகாலத்திலுங்கூட கையில் கிடைத்ததற்குள்ளாக வாழ்ந்து பரிமளிப்பாள். உலகமோ ஒரு குடும்பமோ நற்குணத்தின் வசப்படுவது பெண்மணிகளின் கையில் இருக்கிறது. பெண்கள் எத்துணைப் பக்குவமுடையவர்களோ அதற்கேற்ற பக்குவத்தை உலகும் குடும்பங்களும் பெறும்படியாக அவர்கள் அதைத் தயாராக்குகிறார்கள். பெண்களின் மனோவுறுதியையும் நற்குணத்தையும் . பொறுத்து ஆடவர்களின் வாழ்க்கையும் அவர்களின் இவ்வுலக க்ஷேமமும் இருக்கின்றன.

(தொடரும்.)

இன்று நாலணா கடன்கேட்டுப் பெற்று வழக்கமாகி விட்டவன் நாளை ஒரு ரூபா கடன்கேட்க முந்திக் கொள்கிறான். தராவிட்டாலோ முகம் சுளிக்கிறான். தந்து விரோதப்படுவதே லாபம்.



கடைக்குச் செல்பவரைத் தட்டிக்கொடுத்தனுப்பு.

காலையில் கடைக்குப் பலசரக்குசாமான்களை வாங்கச்செல்லும் வீட்டுக்காரரைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தியனுப்பு. பிறகு நீ செய்யப்போகிற சமையலைப்பற்றியும் பக்ஷணங்களைப்பற்றியும் அவர் நாவில் ஜலம் ஊறும்படி ருசிகரமாய்த் தூண்டிவிடு. பின் அதற்கு இன்னின்ன பதார்த்தங்கள் வீட்டில் இல்லையென்று ஜாடையாய்ச் சொல்வதோடுங்கூட, உன்னை மிகவும் சிக்கனமுள்ளவளென்று அவர் எண்ணும்படியாக —“அதிகமாக வாங்கிவந்துவிட வேண்டாம்—கால்படி வாங்கினால் போதும்”—என்று குறிப்பாக ஒரு வார்த்தையையும் நடுவே போட்டுவிடு. அது அவர் மனதில் இது அதிக செலவில்லை, சொற்பமேதான் என்று படுவதுடன் அது ஒரு பளுவாகவும் அவருக்குத் தோற்றுதிருக்கச் செய்துவிடும். அத்துடன் உன்னைப்பற்றியும் செட்டாகவேதான் செலவிடுகிறவள் என்பதான ஒரு உயர்ந்த அபிப்பிராயத்தையும் அவர் மனதில் கொண்டுவிடுவார். நீ தட்டிக்கொடுக்கிற உற்சாகத்தில் அவர் ஒன்றுக்கு இரட்டிப்பான சாமான்களையே வாங்கிவந்துவிடுவார். இந்தக் காய்கறியை இன்னும் கொஞ்சம் அதிகமாக வாங்கினால் நமது வீட்டுக்காரி சந்தோஷப்படுவாள் என்று அவர் நினைத்து இப்படியே ஒவ்வொன்றையும் அதிகப்படியாகக் கொண்டுவந்து கொட்டுவார். அதுமட்டுந்தானா? நீ கேட்காததும், அபூர்வமாய் அகப்பட்டதையுங்கூடத் தானே வாங்கத் தலைப்படுவார். அதை ஏன் அவர் வாங்கினாரென்றால், நீ அதைக் கண்டு சந்தோஷப்படுவாய் என்றுதான். கடைசியில் தானாகவே உனக்குப் புஷ்பமும் வாங்கத் தொடங்குவார். இவ்வளவுக்கு அவரைத் துரிதப்படுத்திச் சுறுசுறுப்புள்ளவராக்கியது எது தெரியுமா? அவர் கடைவீதிக்குச் செல்லும் சமயம் நீ தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தினாயல்லவா?—அது செய்கிற வேலைதான் இவ்வளவும்!

ஃ

இத்துடன் இன்னொன்றையும் நீ செய்வது நல்லது. சாமான்கள் காய்கறிகள் வாங்கிவந்தபின்பு—இதை ஏன் வாங்க, அந்த முற்றி முதிர்ந்து போனதற்கு ஏன் காசைப் போட என்று பழிப்பது பாவமாகும். அது பாடுபட்டு நாலுமூலை சுற்றி யலைந்து ஒரு தடவைக்கும் பல தடவை விலை

பொங்கல், தீபாவளி நாட்களின் ஸந்தோஷத்தை யனுபவிக்க முடியாமல் வீட்டுச் சச்சரவால் கண்ணீர் விட்டவர்களும் எத்தனையோ பேர் உண்டு.

குறைத்துக் கேட்டு சிரமத்துடன் வாங்கிவந்தவருக்கு இடுப்பு முறிந்தது போலாகும், மனதுக்கும் மிக சங்கடமாகக் குத்தும். அதைவிடக் கத்தரிக்காய்க் குழம்புக்கு நீ சொல்லியனுப்புகையில், பெரிது பெரிதாக வாங்கிவிடவேண்டாம்; அது நன்றாயிராது; பிஞ்சாக சிறியதாகப் பார்த்து வாங்கிவாருங்கள், இன்றைக்கு முருங்கக்கீரை வேண்டாம்; வேலை அதிகமிருப்பதால் அதைப் பொறுக்கிக்கொண்டிருக்க நேரமில்லை; இலை இருக்கிறது, இன்றைக்குப் போதும், அதை வாங்கவேண்டாம்; பையனுக்கு வாயெல்லாம் ரணமாயிருக்கிறது; சரியாகச் சாப்பிடமாட்டேனென்கிறான்; கொஞ்சம் நெய் வாங்கிவந்தால் அழாமல் புசிப்பான்——என்று இவ்விதமாகக் கொஞ்சம் விவரத்தோடும் சொல்லியனுப்பிவிட்டால் கடைக்குப் போகிறவரும் விவரம் தெரிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி வாங்கிவர முடியும். இன்றைக்குக் கூட்டம் அதிகம்; உருளைக்கிழங்கு எவ்வளவு வாங்கினாலும் போதாது; ஆனதால் வாழைப்பூ நாலும், வாழைத்தண்டும் கொஞ்சம் கீரையும் வாங்கிவந்தால் அதுதான் எல்லாருக்கும் தாராளமாய்க் காணும்; செலவும் குறையும் என்று சொல்லியனுப்பினால் அவரும் அவ்விதமே வாங்கிவருவார். உன்னுடையசம்சார சாமர்த்தியமெல்லாம் உன் வீட்டுக்காரரைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்துகிற பக்குவத்திலும், முன்னதாக அவருக்கு விவரம் தெரிவித்து அந்தப்படி அவரைச் செய்யும்படி ஏவுகிற அன்பிலும் அமரிக்கையான தன்மையிலுமே இருக்கிறது. இதை நீ சிந்தித்துப்பார்.

ரயிலை விட்டிறங்கியதும் வண்டியேறி ஆவலுடன் அவர்களின் வீட்டிற்குப் போய் இறங்கியதும் ஒருகாலம். அவர்கள் அன்பற்றவர்களாகி மறந்துவிடவே, இப்போது வேறொருவரின் வீட்டில் இறங்க நேர்ந்ததும் ஒருகாலம்!

தேசம் விட்டு மறுதேசம் புகநேர்ந்த காலத்துங்கூட, தமது மனைவியை மறந்தாலும் உபகாயகியைமட்டும் மறவாது செலவுக்குப் பணம்அனுப்பி அதில் ஒரு கௌரவம் தமக்கு முளைத்துக்கொண்டதாக நினைப்பவர்கள் சிலருண்டு.

அந்தரங்க சுத்தியுடனில்லாமல் பொறுமையுடனே எதிரிடையாக இருந்து விட்டு, பிறகு நேரில் காணுகிற சமயம் இனிக்கப் பேசுவதால் மயக்கிவிடலாமென நினைப்பது சிலாது வஞ்சகவழி.



பொங்கலுக்குப் பிறகு இன்று நமது கடை வெகு உத்ஸாகமாகக் கூடிற்று. "கையில் பணமுள்ள வரையில்தான் புருஷன் மனைவிகளின் வாழ்க்கையென்றும், அது வறண்டு தலைகாய்ந்துவிடினோ புருஷன் எந்த ஊருக்கேனும் கம்பி நீட்டி வேறுபிழைப்பு தேடிக்கொள்ள ஓட்டம்பிடிக்க வேண்டியதுதானென்றும், வீட்டோணியும் ஹிம்ஸித்துப் பிடுங்குதற்கு வீட்டு மனுஷ்யனில்லாமல் ஒண்டிக்கட்டையாய் மனம் ஒடிய நேருமென்றும்" சிகரெட் சிங்காரம் பேசினார்.

"ஒரே வீட்டில் குந்தியிருந்து ஒரே பந்தியில் விருந்துண்டு பல நாட்களைப் போக்கியவர்கள் பிறகு அவரவர்களின் ஊருக்குப் பிரயாணப்பட்டு ஒருமிக்க ரயிலில் செல்லுகையில், பக்ஷணங்கள், காபி, பால் முதலியவற்றை ஒருவரே வாங்கி எல்லோருக்கும் தராமல், அவரவரிடமுள்ள காசுக்கும் பணத்திற்கும் அவரவர் வாங்கிப் புசித்துக்கொள்ளும்படி அவரவரும் ஜாடையாக நடந்துகொள்ளுகிற சாமர்த்திய தினுசுகள் வெகு வேடிக்கையானவை" என்று வேப்பிலைப் பண்டாரம் இயம்பினார்.

"நாம் அவர்கள் வீட்டில் புசித்துக் கொண்டிருந்தவரையில், அவர்களும் நம் வீட்டில் தாராளமாய்த் தங்கியிருந்து செல்வதானார்கள். ஆனால் இப்பொழுதோ அவர்கள் வீட்டில் நாம் டிரங்கு பெட்டியுடன்வந்து இறங்குவது நின்றுபோக, அவர்களும் நமது வீட்டிற்கு வந்து தங்க நேரும்போது வேறொரு தனி அறை அமர்த்தித் தனி சமையல் செய்துகொள்ள ஆரம்பித்து விடுகிறார்கள். இது நாம் முகம் சோணாதிருக்கையிலேயே அவர்கள் அவ்விதமாகப் பேதமாய் நடக்கும் சங்கதியாகும். நாமும் அவர்களின் மனவேற்றுமையைக் கண்டு சரிசரியென்று போகவேண்டியதுதான். ஆனால், ஒரு விஷயம்; ஒரு பாத்தியதையான அன்புவைத்தவர்கள் நாம் அவர்கள் வீட்டில் புசிக்காது வந்திருப்பினுங்கூட, அவர்கள் நமது ஊருக்கு வருகையில் நமது வீட்டில் இறங்கி யுண்டால்தான் அவர்களின் மனதிற்குத் திருப்தியாயிருக்கிறது. நாமும் அதற்கேற்ப அவர்களை ஆசையுடனேயே தான் மனஸ்பூர்வமாக உபசரித்து அனுப்புகிறோம். ஒரு பாத்தியதை காண்பித்து அவர்கள் அன்புடன் அதிகாரம் செய்கையில், ஆநந்தம் பொங்கியெழ நாமும் உட்பட்டு நடக்கும்படியே நேருகிறது" என்று தாண்டவக்கோன் நவின்றார்.

"எல்லாப் பகையும் விரோதமும் பக்கத்தில் இருக்கிற வரையும்தான். அவன் வெளியூருக்கு மூட்டைகட்டி விடும்போது எல்லோரும் எல்லாப் பகையையும் மறந்து அவனுக்கு வழியனுப்பி உபசரிக்கிறார்கள். அவன் வெளியூர் வாசியாகவே வேறு குடித்தனமாய்த் தூரத்திலேயே போய்த் தங்கிவிடுவானாகில், அப்போது பகை

விரோதத்திற்குப் பதிலாக அவன் மீது ஒரு கனத்த மதிப்பும் வைத்து விடுகிறார்கள். இன்னும் இரண்டொரு வெள்ளிக்காசு அங்கிருந்து கொண்டு அடிக்கடி அனுப்புவானுனல் அவனைத்தான் ஆகாசத்தில் உயர்த்திப் பேசுவார்கள். இப்படித் தூரத்தில் வாசனையாய்க் கௌரவமாய் இருக்கிற அவன் மறுபடியும் தன் ஊர் வந்துவிட்டாலோ-வந்த நான்கு நாள் வரைக்கும் மிக்க அன்பான பேச்சுகள்தான். பிறகோ ஒரு சண்டை வருகிறது—பேச்சு வளருகிறது—கலகம் முதிர்கிறது—எல்லோரும் தூற்ற நடுத்தெருவில் நிற்பவனுய் விடுகிறான். இதுவே நாளைக்கும் நடக்கும் கதை. வெளியூர் அண்ணன் வெளியூரில் இருக்கிற வரையுமே கௌரவம். அவன் தம்பியிடம் வந்து நெருங்கிவிட்டாலோ சீக்கிரம் இருவரும் ஜென்மப் பகைவர்களாகி விடுகிறார்கள்'' என்று அல்லா பிச்சை உரைத்தார். ஃ

''மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே'' என்று பெரியோர் கூறியிருப்பினும், அழிந்த மானத்தை அவ்வளவுடன் மூடிவிட்டு, அதை வெளியிட்டுக் கொள்ளாமல் சரிசரி யென்று பொழுதைப் போக்கிக் கொண்டு போவதுதான் உலகில் பிழைக்கக்கூடிய தந்திரமான வழி. பிறகு நல்ல காலம் ஒன்று வருமானுல் தன்னை மானம் கெடச்செய்தவர் முன்பே தான் மதிப்பாக வாழ்ந்து காட்டி அவர்களைத் தலைகாணச் செய்யலாம். எதற்கும் பொறுத்துக்கொண்டு காலத்தையொட்டி வணங்கிச் செல்வதே சரி'' என்று உக்காபிரதர் உரைத்தார். ஃ

'' தன் நண்பன் ஏறிச்செல்வதற்காகத் தான் வண்டி கொண்டுவர, வண்டி நிறைய நண்பனின் வீட்டார் ஏறிக்கொள்ள, நண்பன் கால் நடையாய் வண்டியின் பின்வர, அதைக் கண்டு வண்டி கொணர்ந்தவர் நீ நடந்துவருவதற்காகவா நான் வண்டி கொண்டுவந்தது என்று வினவி வருந்தினர். அதற்கு அந்த நண்பர் உனக்கோ என்மேலாசை, எனக்கோ என்னவர்மேலாசை. நான் மகிழ வேண்டுமாயின் என்னவரை மகிழ்விப்பதிலிருந்தே அந்த மகிழ்வைக் காணவேண்டி யிருக்கிறது. நான் கால்நடையாக வரினும் வண்டியில் வருவதாகவே நினைத்துப் பூரித்துளளேன் என்றார். அதைக் கேட்ட வண்டி கொணர்ந்தவரும், ஒருவன் தயவு பெறுவதற்கு அவனைச் சேர்ந்தோரின் தயவும் பெற்றாக வேண்டியிருக்கிறதென்ற உண்மையை உணர்வதானுர்'' என்று தொந்திக் கோன் மொழிந்தார்.

ஃ

''பல நாள் உன் வீட்டில் தங்கி உனக்குக் கனத்த செலவு வைத்து விட்டு, பிறகு—அவர்களே, இன்னும் உனக்குத் தலைச்சுமையாய் இருப்பது சரியல்லவெனத் தெரிந்துகொண்டு 'போய் வருவதாய்'ப் புறப்பட்டு விடுகிறபோது ''அப்படியே செய்யுங்கள்—போய்வாருங்கள்'' என்று உடனே அவர்களை நீ வழியனுப்பி வை. அதுவே நல்லது. அவ்விதமின்றி ''அவர்கள் இருந்து பிறகு

''கண்ணே! உன்னைச் சிறுவயதிலேயே காதலித்தேன். எத்தனையோ இரவு உனக்காகப் புலம்பியும் இருக்கிறேன். கடைசியில் இருவரும் வெவ்வேறிடங்களில் மணம்புரியும்படி விதியின் கொடுமை இருந்தது. நமது பழைய காதலின் அடையாளமாகவும், உனது ஞாபகமாகவும் ஏதாவது ஒரு பரிசை இப்போது நீ தர இயலுமா?'' என்றான் கண்ணீர் ததும்ப ஒரு காதலன்.

போகிறதுதானே" என்று உன் மனைவியிடம் நீ கூறுவதானல், அதற்கு அவள் வெகு பக்குவமாய்—"நான் சொல்லிப் பார்த்தாய்விட்டது; அவர்கள் கேட்கவில்லை"—என்று வெகு வெகு குளிர்ந்த முகத்துடன் பதில் சொல்லுகிறாள். அவளுடைய முகத்தின் ஒளியிலே நீ மயங்கி அறிவு குறைந்து, உன் மனைவியைத் திருப்தி செய்வதற்காக, நீயே வலிய எழுந்துபோய் அவர்களை இருக்கும்படி வற்புறுத்தி நாளைக்குப் போகலாம் என்று வேண்டுகிறாய். இப்படி உன்னிடம் ஒரு வார்த்தை பிடுங்குவதற்காகவே அவர்கள் புறப்பட்டுப் போவதுபோல் பசப்பினர்களானதால், இதற்கு உட்கையாகயிருந்த உன் மனைவிக்கும் அந்த உன் சங்கதி தெரியுமானதால், அவர்கள் போவதை நிறுத்தி வீட்டில் உட்கார்ந்து கொள்ளுகிறார்கள். பிறகு மறுநாள் அவர்கள் போகிறார்களா? அது எது? அவர்கள் புறப்பட இன்னும் இரண்டுவாரம் செல்லலாம். அப்படியே அந்த இரண்டு வாரமும் தொலைந்தபிறகு அவர்கள் புறப்படவிருக்கிற தினத்திற்கு முன் தினத்தில் உன் மனைவி தனக்குத் தலைவலியும் காய்ச்சலும் வந்துவிட்டதுபோல நடித்துக் கம்பளியை யெடுத்துப் போர்த்துக்கொண்டு விடுவாள். அவர்களோ வெகு சிரத்தையாக உன் மனைவியைத் தாங்குகிறவர்கள்போல் காட்டி இப்படிச் சரமாகப் படுத்துக் கிடக்கையில் எப்படி விட்டுப் போகிறதென்று உன் காதில் படும்படி சொல்லிவிட்டு நின்றுவிடுவார்கள். அதிலும் அதை ஒரு தந்திரமான வழியில் உனக்குத் தெரிவிப்பார்கள். "அவளுக்குக் குளிர்காய்ச்சலாம்; எதாவது மருந்து கொண்டுவந்து கொடு" என்பதுபோல உன்னிடம் சொல்லி, தாங்கள் அந்த சமயத்தில் துணையாய் இருக்கவேண்டிய அவசியத்தை உன்னிடம் புலப்படுத்திக்கொண்டு உன் மூஞ்சியில் இடிக்காமலே இடிப்பார்கள்! அவர்கள் அவ்விதம் சொல்லாமற்போனாலும், உன் மனைவி—'நான் காய்ச்சலாகப் படுத்துக் கிடக்கிறேனே, என்னல் சமைக்கமுடியுமா, அவர்கள் போகிறேனென்கிறார்களே, நீங்கள் எதிலும் பட்டுக்கொள்ளாமல் வாயை மூடிக்கொண்டிருந்தால் நான் ஒண்டிக்காரி என்ன செய்யட்டும்"—என்று வாய்ஓயாமற் பேசிச் சிடுசிடு என்று பட்டு உன்னைப் பாம்புபோலப் பிடுங்கிப் போடுவாள். அதற்குப் பிறகு நீ அவர்களை மறுபடியும் கெஞ்சி இருந்துபோகுமாறு வேண்டிக்கொள்ளவேண்டியதாகிவிடும். உன் மனைவிக்கு அதன் பிறகு குளிர் காய்ச்சல் ஓடிவிடும். அவர்கள் இன்னும் பத்து தினங்கள் இருந்துவிட்டுப் புறப்பட எண்ணுவார்கள். இவ்வளவு தொந்தரவுகளுக்கு இடமில்லாமல்—அவர்கள் போய் வருவதாக முதலில் சொன்னபோதே—"சரி போய் வாருங்கள்" என்று அனுப்பிவிடப் பார்ப்பதே பெரிய செலவுகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு வழி. ஆகவே, போகிறவர்களை இருக்கும்படி சொல்லாமல் உடனே பிரயாணப்படுத்தி யனுப்பி மறுவேலை பார். அப்பொழுதுதான் உன் குடும்பம் முன்னுக்கு வர உன் கையில் நாலு காசு சேரும். இவர்களெல்லாம் வேறொ வீட்டில் பிடுங்கித் தின்கிற நரிகளென்று தெரிந்துகொள். ஆனல் ஒன்று: உண்மையான உயிருக்குயிரான அன்புள்ளவர்களின் சங்கதியிலோ

அவரவர்கள் அவசரம் கடனுக்காக வெகுவாய்க்கெஞ்சி வந்து கேட்கிறார்கள். பெற்றுக்கொண்டு போன பின்போ திரும்பியே பார்ப்பதில்லை. பிறகு நாம் அவர்களின் வாசல்களுக்கு அலைந்து கேட்டுப் பெறவேண்டியதே.

நீ பிச்சை எடுத்தாவது அவர்களை உபசரி, போவதாய்ப் புறப்பட்டாலும் ஆனவரை கெஞ்சி இன்னும் சிலநாள் தங்கச் செய். அவர்கள் நல்ல மனம் உனக்கு நன்மையைச் செய்யும்" என்று பம்புளிமாஸ் புலவர் பகர்ந்தார். ஃ

"வீட்டுக்கு வந்த விருந்தினர்களைக் குறித்து இப்படியும் பச்சையாய்க் கேவலப்படுத்திப் பேசலாமா?" என்று பிளாச்சுளேப்பிள்ளை வினவினார். அதற்குப் பம்புளிமாஸ் புலவர் பின் வருமாறு பதில் தந்தார். "நான் எவரையும் பழிக்க வரவில்லை. உண்மையான குடும்ப அனுபவத்தையே கூறியது. குடித்தன ஒழுங்கும் சிக்கனமும் அறியாத மூடப் பெண்ணை மயக்கி அவள் வீட்டில் பலமாக உட்கார்ந்து கொண்டு இரத்தத்தையெல்லாம் உறிஞ்சி முதுகை ஒடிக்கிற சுயநலப் பிசாசுகளையே—பின்னுக்கு என்றும் உதவாதவர்களையே—இங்கே இழுத்துவிட்டுப் பேசியுள்ளேன். உத்தமர்களான உறவினர்களையும், நன்றாக இனிது வாழட்டும் என்று நல்ல நினைவு நினைக்கும் அன்பின் களஞ்சியங்களையும் பற்றி நான் இங்கு ஏதும் குறைபடுத்திப் பேச வரவில்லை. அவர்களும் அதிக நாள் தங்கார்; அவ்விதம் தங்கினும் நமது கஷ்டங்களில் பங்கு பெற்றுக்கொண்டு சேர்ந்து உழைப்பார்கள். இந்தப் போலிகளைப்போல மயக்கு வேஷம் போடார்" என்றார். இவ்வளவுடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

'பகதூர்' பொன்வண்டு செட்டியார்.

எதி விருந்து, எந்த சம்பவத்தி விருந்து, எந்த அறிவு, எந்த ஞானம் எவ்வெப்போது பெறலாமென்று அதைப் பெறுகிற வழியிலேயே ஆராய்ந்து சென்று காரியத்தில் கவனம் கொள்.

திருவிழாவில் மேல் பார்ப்பவர்கள்.

உத்ஸவ காலங்களில் எவ்வளவு கூட்டத்தினிடையிலும் மேல் பார்ப்பவர்களோ, பெரிய தலைகளோ தங்கள் குடும்பத்தாருக்கு முதலில் சௌகரியம் செய்து கொள்வதைக் கவனிக்கிறார்களே தவிர, அதற்குப் பிறகுதான் ஜனங்களின் சௌகரியத்தைக் கொஞ்சம் நினைக்கிறார்கள்.

உயிருடன் இருக்கிற வரையில் தங்கள் கணவனை வெடுவெடுவென்று பிடுங்கித் தின்பது. அவன் இறந்த பின்போ அவன் சொத்துக்களுக்கெல்லாம் சொந்தக்காரியாகிவிடுவது. இது பெண்களின் வழக்கமான சங்கதி.

குழந்தைகள் பக்கம்

கோள் சொல்லுதல்.

---

1. அக்கா இங்கியை மேஜையில் கொட்டிவிட்டது என்று வேணு தன் தகப்பனாரிடம் போய்ச் சொன்னான். தகப்பனார் கோபத்துடன் வந்து பார்த்தார். மேஜையெல்லாம் மசி. சில கடிதங்களிலும் மசி விழுந்து கெட்டுப்போயிற்று. மையை அப்படிக் கொட்டிவிட்ட கமலம் எங்கோ ஓடிப்போய் ஒளிந்துகொண்டாள்.

2. தகப்பனாரின் கோபம் கொஞ்சம் அடங்கிற்று. அவர் வேணுவைப் பார்த்து அக்கா எப்படி மையைக் கொட்டினாள் என்று கேட்டார். அதற்கு வேணு, அக்கா இங்கிபுட்டியை எடுத்தபோது கைதவறி விழுந்துவிட்டது; நான் உடனே சொல்ல ஓடி வந்தேன்; அப்போது "அக்கா நீ சொல்லு பயமில்லை" என்று சொல்லிற்று என்று சொன்னான்.

3. தகப்பனார் அதைக் கேட்டுவிட்டு, அக்காவின் மேல் நீ எப்போதும் கோள் சொல்லுகிறாய்; கோள் சொல்லி அவளுக்கு அடி வாங்கித் தருகிறாய்; அவள் அடிபட்டு அழுவதால் உனக்கு என்ன லாபம்? கோள் சொல்வது மிகவும் கெட்ட குணம்; இனிமேல் இப்படிக் கோள் சொல்லாதே என்று சொன்னார்.

4. அதற்கு வேணு, அக்கா பயமில்லை, தகப்பனாரிடம் சொல்லு என்று பேசிற்றே, அது தப்பிதமல்ல, நான் அதை வந்து சொன்னது மட்டும் தப்பிதமோ என்று தகப்பனாரைக் கேட்டான்.

5. அன்புள்ள வேணு, உன் அக்கா 'பயமில்லை, சொல்லு' என்று சொன்னாலும், நீ அதை என்னிடம் சொல்லக்கூடாது. நீ வந்து சொன்னால் நான் அதைக் கேட்டு அக்காவைக் கோபித்து அடிக்கிறேன்; அவள் அழுகிறாள். இப்படி அக்காவை அடி பட வைப்பது நல்லதாகுமா? அது கெட்ட குணம் அல்லவா; அந்தக் கெட்ட குணத்தை இனி விட்டு விடு என்று தகப்பனார் சொன்னார்.

"பணம் கொடுத்து எங்கும் தின்பதில்லை; போவதில்லை; சும்மா சும்மா வலியவந்தால் விடுவதுமில்லை" யென்கிறார் ஒருவர்.

"தனக்கென்று தன் இல்லாளுடன் அமைந்த தனியறையில் தான் இப்போது ஒண்டி மனிதனானதும் என்ன பாவம்! என்ன அநியாயம்!!"

6. அதற்கு வேணு, அக்கா மட்டும் நல்லவளோ? அம்மா! உன்னைப் பாட்டி திட்டிற்று என்று அம்மாவிடம் சொன்னாள்; பிறகு காணாமற்போன உன் சேலையைப் பாட்டி பெட்டிக்குள்ளாக வைத்திருக்கிறது என்று அம்மாவிடம் சொன்னாள்; அதைக் கேட்டு பாட்டி கோபத்துடன் பெட்டியைத் திறந்து காட்டி அது சேலையல்ல, கறுப்பு கம்பிளி சொக்காய் என்று சொன்னார். பிறகு கமலா! இனி இப்படிக் கோள் சொல்லாதே, வேணு உன்னைப்போல் கோள் சொல்லமாட்டான் எனக் கோபித்தார் என்று சொன்னான்.

7. "அக்காவின் மேலும் தப்பு இருக்கிறது; உன் மேலும் தப்பு இருக்கிறது" என்று தகப்பனார் சொன்னார். அந்த சமயம் மெதுவாகக் கமலம் அங்கு எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டே வந்தாள். உடனே வேணு ஓடிப்போய் கமலத்தைப் பிடித்துக் கொண்டான். தகப்பனாரும் அங்கு வந்து கமலத்தின் கையைப் பிடித்தார். அப்போது கமலம் பயந்துபோய் இருந்தாள். தகப்பனார், இனிமேல் இங்கியைக் கொட்டாதே என்று கேட்டார். கமலம் வேணுமென்று கொட்டவில்லை, தவறி விழுந்து விட்டது என்று பயத்துடன் சொன்னாள். கமலா! தவறுதல் யாருக்கும் சாதாரணம், தவறுதல் செய்தே புதிய புத்தி பெறவேண்டும். இனி ஜாக்கிரதையாய் எடு என்று முதுகில் தட்டிக்கொடுத்தார்.

8. கமலா! நீ பாட்டிமேல் கோள் சொன்னதாக வேணு கூறினான். அது தப்பு. இனி யார் மீதும் கோள் சொல்லாதே. தம்பி மேலும் கோள் சொல்லாதே. எல்லோருக்கும் நல்ல பெண்ணாக நடந்துகொள். வேணு! நீயும் இனி எவர் மீதும் கோள் சொல்லக் கூடாது என்று தகப்பனார் புத்திமதி கூறினார்.

9. இந்த சமயம் வீதியில் சக்கரை மிட்டாய்க்காரன் வரவே, கமலமும் வேணுவும் அதை வாங்கிக் கொள்ளத் தெருவுக்கு ஓடினார்கள். தகப்பனார் இருவருக்கும் காலணாவீதம் மிட்டாய் வாங்கித் தந்தார்.

10. அன்று முதல் கமலமும் வேணுவும் எவர் மீதும் கோள் சொல்லவே யில்லை. அக்கா மீது வேணுவும் கோள் சொல்லவில்லை. தம்பி மீது கமலமும் கோள் சொல்லவில்லை. எல்லோரும் அவர்களை நல்ல பிள்ளைகள் என்று கொண்டாடினார்கள். இதை வாசிக்கிற சிறுமியே! சிறுவனே! நீயும் எவர் மீதும் கோள் சொல்லாதே. கோள் சொல்லிகளால் தான் கலகம் உண்டாகிறது. நீ நல்ல பிள்ளை என்று பெயர் பெறு. நல்ல பிள்ளைகள் மேல் தான் எல்லோருக்கும் அதிகப் பிரியம். எங்கும் புகழ் பெறுவது நற்குணம் தான்.

தன்னைச் சுற்றிலும் உள்ளவர்கள் முட்டாள்களா யிருப்பது தன் வேலையைத் தடங்கலில்லாமற் செய்ய மிக்க சௌகரியமா யிருக்கிறதாம்.

விவேகம்
விநோதம்
விசித்ரம்
விகடம்

விகடப்ரதாபன்

அநுபவம்
அற்புதம்
ஆச்சரிய
ஆநந்தம்

REGISTERED TRADE MARK

கோணல் கட்டைகள்!



யாரப்பா இவர்கள்? எந்த ஊரு?—எந்த சீமை?—எந்த நாடு?—எங்கேயிருந்து வந்தவர்கள்?—எதற்காக வந்தவர்கள்?—எப்போது வந்தவர்கள் என்பீர்களோ?. அப்படியெல்லாம் வெகு தூரத்தில் வைத்து நினைத்து மலைத்துவிடவேண்டாம். எல்லாம் நம்ம பக்கத்திலே, நம்ம தெருவிலே, நம்ம உறவிலே நேசத்திலே, நம்ம வீட்டிலே—உள்ளறையிலே, நம்ம குடும்பத்துக்குள்ளாகவே இருக்கிற கட்டைகள்தான்! நமக்கு அருகில் இருக்கிறவர்கள்தானே நம்ம தலையைத்தடவி மொட்டை யடிக்கிறார்கள்! நாம் பெற்று வளர்த்த குழந்தைகள்தானே நமக்குக் கொள்ளி வைக்கிறார்கள்! விகடன் இந்தக் கோணல் கட்டைகளைப் பார்த்ததும் என் தொனதொனப்புத் தோல்வாய்ப் பிரஸங்கத்துக்கு இது ஒரு நல்ல சரக்காகுமென்று எடுத்துக்கொண்டேன். விறகுக்கட்டையின் கோணல் அடுப்பிலே நிமிருமென்பார்கள். உள்ள கோணலைவிகடன்நோண்டி நோண்டி எடுத்து விளக்கிச்சொன்ன பிறகாவது இந்தக் கோணல் நிமிருகிறதோ இல்லையோ! ஃ

கோணலிலே இரண்டு தினுசு! ஒன்று உத்தமக் கோணல், மற்றொன்று அதமக் கோணல். நமது கைகால்கள் விரல்கள்—இவைகளெல்லாம் கட்டையைப்போல் ஒரே நேராக விருக்கின்றனவா? இல்லவேயில்லை; கொஞ்சம் வளைந்து கோணியே யிருக்கின்றன. அந்தக் கோணல்கள் ஒவ்வொரு வேலைக்கும் பெரிய உதவி. அந்த நாணிக்கோணுகிற நங்கையின் கோணல் கற்புக்கு உறுதி. இவ்விதமே பல கோணல்கள் நலம் செய்வதற்கென்றே யுள்ளன. விகடன் இந்த உத்தமக் கோணல்களை விட்டுவிட்டு அதமக் கோணல்களின் அழுக்குகளையே இங்கே வெளுக்கப் புறப்பட்டிருக்கிறேன்—கேட்கிறீர்களா? ஃ

“பொங்கலும் போச்சு, போகியும் போச்சு, அனுப்படா பெண்ணை” என்கிறான் மருமகன்! இது ஆசை வைத்து அழைப்பதற்கு மனுஷ்யர்கள் இருந்த அவ்விதமாக அழைத்துக் கொண்டுபோய் சீர்வரிசை உபசாரங்கள் விருந்து சிறப்புகள்செய்து,

சென்றவர் வாரார். அவர் படமும் அவரைக் காண்பது போலாகா. வேறு கதியின்மையே படத்தைக்காணச் செய்வது! யாவும் தலைவிதியே!

அப்படிச் செய்யவும் ஒரு திக்கு திசை ஆதாரவு இருந்ததிலே ஏற்பட்டு விடு கிற திமிரின் கோணல் இது! பெண் வீட்டுக்காரர்கள் இன்னும் சில நாட் களுக்குப் பெண் இங்கேயே இருக் கட்டுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொள்வதைக்கூட இந்தத் திமிரின் கோணல் மறுத்துவிடப் பண்ணி விடுகிறது! எந்தப் பொங்கல் போகி அழைப்பும் திக்குதிசையு மில்லாமல் தத்தம் வீடுகளிலேயே கிடக்கிற மரு மகப்பிள்ளைகள் எத்தனை எத்தனை பேரோ! இது அவரவர்கள் செய்த பாக்கியமாக்கும்! ஃ

வீட்டுக்காரன் கடைக்குப்போய்ப் பல சாமான்கள் வாங்கி வருவதில், எந்த ஒரு சாமானை அவன் வாங்க மறந்து போய்விட்டானே அந்த சாமானைத்தான் வீட்டுக்காரி முக்கிய மாய்க் கேட்டு முகம் கோணிக் கொள் கிறாள். பணத்தைச் செலவிட்டு நல்ல மனதோடு இத்தனை சாமான் களையும் வாங்கித் தூக்காமல் சுமந்து வந்தானே யென்கிற விசுவாசத்தை அந்தக் கோணல்கட்டை காட்டக் காணோம்! அதற்குப் பதிலாக, முக்கிய மான பருப்பு வாங்கவில்லையே யென்று அவன் மூஞ்சியிலே இடிக்க வருகிறாள். அதற்கு வீட்டுக்காரன், மறக்கவில்லையடி, நடுவழியிலே ஞாப கம் வந்து ஒரு பையனிடம் பணம் தந்து வாங்கிவரச் சொல்லியிருக்கி றேன், இதோ வந்துவிடுவான் என் கிறான். அப்போதாவது அந்தக் கோணல் கட்டை சும்மாயிருக்கிறதா? இன்னும் அதிகமாகக் கனைத்துக் கொண்டு, எப்போது வந்து தொலை யுமோ, எப்போது பருப்பைப் போடு கிறதோ, சமைக்கிறதோ என்று முறைத்துக் கொள்கிறாள். இந்தத் தொல்லையைப் படுவதைவிட, இந்தச் சலிப்புப் பேச்சுகளைக் கேட்பதை விட, காசு கொடுத்து அனுப்பிய பையன் அதை வாங்கி வருகிறவரை யில் அந்த நடுவழியிலேயே காத் திருந்து அதைப் பெற்றுக்கொண்டு வீட்டிற்குத்திரும்பியிருந்தால் வீட்டுக் காரியிடம் சொட்டு வார்த்தைகள்பட இடமிருக்காதல்லவோ! ஸம்சார விஷ யங்களிலே இப்படியெல்லாம் முன் யோசனையோடும் யுக்தியாக நடந்து கொண்டால்தான் ஒரு பிடி அன் னத்தையாவது பிடுங்கலின்றி ஸந் தோஷமாய்ப் புசிக்க முடியுமென்று விகடனுக்குத் தோன்றுகிறது!

ஃ

இன்னொரு ராமாஷ் கோணல் கட்டையைக் கேட்கிறீர்களா! ராமன் தனக்கு ரொம்பவும் வேண்டியவரான சுடலைமுத்துத்தேவருக்காக ஒரு கடைக்காரனுடன் கனத்த சண்டை யிட்டு அவன் ஏமாற்றிக் கொடுத்த அழுகிய சரக்கைத் திருப்பித் தந்து பணத்தைக் கண்டித்து வாங்கி சுட லைத்தேவரின் கையில் கொடுக்கிறான்! சுடலைத்தேவரோ அந்தவகையில் ராமனைக்கொண்டு தன் காரியத்தை முடித்துக்கொண்டு, பிறகு பொது மனிதப் பாவனையில் ராமனைப் பார்த்து,—'அக்கடைக்காரனை அவ் வளவு கண்டித்துப் பேசியிருக்கக் கூடாது; அவரை மரியாதையாகவே கேட்டிருந்தால் கொடுத்திருப்பார்'— என்று புத்திசொல்ல ஆரம்பித்துக் கொள்கிறார். அதற்குள் கடைக்கா ரன் 'இந்தச் சிறு சங்கதிக்கு ராமன் இவ்வளவு பேச்சுகள் பேசி அவ மதிக்கலாமா' என்கிறான். சுடலைத் தேவர் கடைக்காரன் பக்கம் சேர்ந்து கொண்டு—'ராமன் செய்தது சுத்தத்

உடனே தன் கடிதத்திற்குப் பதில்வராவிடில் அக்கடிதத்திலுள்ள விஷயம் ஆலோசனையி லிருக்கிற தென்று பொருள். அது நிறைவேறுவது சந்தேகமே.

தப்புதான்; அவ்வளவுக்குப் பேசியிருக்கக் கூடாதுதான்'—என்கிறார். இதைக்கேட்கிற ராமனுக்கு, என்னடா இது—நம்மைக்கொண்டே தன் காரியத்தை இந்த கடலைத்தேவர் முடித்துக்கொண்டு இப்போது நம்மைக் கேழேதள்ளிப் புத்தி சொல்லப் புறப்பட்டுக்கொண்டு புதைக்கக் குழியும் தோண்டுகிறாரே! அடடா! நன்றி கெட்ட ஜென்மமே! ஏன் இந்தக் கோணல் கட்டைக்காக வீணே கடைக்காரனிடம் சண்டையிட்டோம்; நாம் இவருக்காகப் பரிந்து பேசி ரோசக சத்தியத்தின் பாதையிலே நடந்ததற்காகவா இவர் இப்படிக் கோணலாக நடந்து நம்மையே பழிக்கிறார் என்று திகைக்கிறான். தன் காரியத்தை இன்னொருவனைக் கொண்டு முடித்தான பிறகு அவன் மீதே குதிரையேறுகிற விசுவாசங் கெட்ட கோணல்கட்டைகள் அநேகம் உண்டு. உஷார்! ஃ

எவரெவர்கள் பாசாங்குக்காரப் பருப்புகளோ, பட்டும் படாமல் ஒதுங்கிநின்று பேச்சுமட்டும் வெகு தித்திப்பாகப் பேசக்கூடிய வாய் வீச்சுக்காரர்களோ, வஞ்சக தந்திர இந்திர ஜாலக்காரர்களோ அவர்களிடம் தான் வீட்டிற்கு முக்கியஸ்தர்களாயுள்ள தலைவர்—தலைவிகளுக்கு வெகு வெகு அபிமானம்! அவர்களையே தங்களுக்கு மிகவும் வேண்டியவர்களாகக் கோணல் புத்தி நினைத்துக் கொள்கிறது! வீட்டிலுள்ளோரையும், தங்களுக்குக் காலமுற்றும் உழைப்போரையுமோ பெரிய பகைவராய் எண்ணி விடுதல் இந்தக் கோணல் கட்டைகளின் போக்கு! ஐயோ! இந்தக் கட்டை எப்பொழுது வெளிச்சத்துக்கு வந்து வெளிவேஷத்தின் உண்மையை யறியுமோ! ஃ

மற்றொரு கோணல் கட்டை! அது அதன் மூஞ்சியைப் பார்க்கும் பொழுதே அந்தப் பவிஷி தெரிந்து விடுகிறது! அந்த மூஞ்சி ஒரு வியாபாரியா யிருந்தாலோ அவன் முகத்தைக் கவனிக்கும்பொழுதே அவன் படுமோசக்கார னென்றும், வெகு பிரியமாய்ப் பேசி, அந்த சாதுரியப் பேச்சின் வழியிலேயே தன் லாபத்தைக் கவனித்துக் கொள்ளக்கூடிய நயவஞ்சக சமர்த்த னென்றும், எங்கே நாம் இந்த மனிதனின் தளுக்கு மயக்கிலே ஏமாறிப்போய் விடுவோமோ வென்றும் மிகக் கலங்கி அஞ்சவேண்டியும் வருகிறது! கடைசியில் சங்கதியும் அப்படியேதான் முடிகிறது! ஃ

எடுத்த முதலிலேயே கோணல் புத்தியோடு நுழைந்து ஊராரையெல்லாம் மோசம் செய்து வெகுவான பணம் திரட்டிப் பல மாடி வீடுகளுக்கும் சொந்தக்காரனாகி விடுகிறது! இந்தக் கோணல் கட்டையின் அருகிலும் ஆதரவிலும் இருப்போர் அவனது செல்வாக்கை நோக்கிப் புகழ்கிறார்களே தவிர, வெகு தூரத்திலே இந்தக் கோணல் கட்டையால் மோசம் போனவர்கள் அலறித் துடிதுறுவதை அறிகிறார்களா? ஒரு சமயம் அந்தக் கதறுதலையறிந்தாலும் அதைப் பற்றிக் கோணல் கட்டையிடம் கேட்கத் தைரியப்படுவதில்லை! எனவே, கோணல் கட்டையின் கொடிதான் உயரப் பறக்கிறது! அந்தக் கட்டை

வீட்டுக்காரி அரையணா கேட்கையில் அந்தசமயம் தட்டுஇல்லாமல் அரை ரூபாயை வீட்டுக்காரன் தந்தால் அதற்கு மிச்சம் வருவதேயில்லை. அதற்கும் ஒரு செலவைச் சொல்லி விடுவது. அது முதல் வீட்டுக்காரனும் இனி இவ்விதம் அதிகம் தந்து ஏமாறாமல் ஜாக்கிரதையாய் விடுகிறான்.

யின் பக்கத்துக்கே தான் பேச மனி தர்களும் கிடைக்கின்றனர்! இது ஒரு வேடிக்கைக் கூத்தல்லவோ!

ஃ

பிழை திருத்தம் தெரிவித்துத் தம் நூலில் பிழையிருக்கிறதென்று காட்டவேண்டாமென்பது சில ஆசிரியர்களின் கோணல் வழி! பிழை திருத்தம் போடப்பட்டுள்ள நூல்களேயோ அவற்றை வாங்குகிறவர்கள் அப்பிழை திருத்தங்களின்படி நூலில் ஆக்காங்குத் திருத்திவிட என்னுவதேயில்லை. இது இன்னொரு கோணல் வழி! ஃ

அந்த வீதியிலுள்ள கடைக்காரியிடமே மண்ணெண்ணெய் வாங்கி வந்த மாரிமுத்து, இடையில் ஒரு நாள் தெருவில் வந்து விற்றவனிடம் வாங்கிவிடுகிறான். உடனே கடைக்காரி நான் இருக்க என்னைவிட்டு வேறிடத்தில் எப்படி நீ வாங்கலாம் என்று முறைக்கிறாள். காசுகொடுத்து வாங்குவதில் உறவு என்னவென்று மாரிமுத்து சுதந்திரத் தியானமாய்ப் பதில் சொல்லிவிடுகிறான். பிறகு சில மாதம் பொறுத்து ஊரெங்கும் வெள்ளப்பாழாக, மண்ணெண்ணெயே கிடைக்காது போக, அதன் மேல் மாரிமுத்து அந்தக் கடைக்காரியிடம் செல்ல, அவளோ இரண்டரையணா புட்டிக்கு எட்டணா கொடுத்தாலும் எண்ணெய் தரமுடியாதென்று கூறிப் பெரிய கோணல் கட்டையாகி விடுகிறாள்! மாரிமுத்து வீடு அன்றிரவுக்கு இருளில் கிடக்கிறது! இந்தக் கடைக்காரியை யொத்த கோணல் கட்டைகளைப் பல குடும்பங்களிலும் பார்க்கலாம்! இவர்களின் அக்கிரமத்தை வெகுவாக சகித்துக்கொண்டு போவதுதான் சரி!

ஃ

கொஞ்சமாகக் காய்கறி வாங்கியதாகச் சொல்வாயென்று எப்போதும் அதிகமே வாங்கிவந்து போடுகிறேன் என்று கணவன் சொல்லித் தான் வாங்கிவந்த காய்கறிகளை மனைவியின் மூஞ்சிக்கெதிரே கொட்டுகிறான்! அவளோ இந்தக் காய்கறியே வேண்டாம்; இந்தப்படிச் சொல்லிக் காட்டிக் குத்துகிற வார்த்தைகளும் வேண்டாம் என்கிறாள். இங்கே இந்த இரண்டு பேர்களும் கோணல் கட்டைகள் தான்! வீட்டுக்காரனே வாங்கிவந்துவிட்டு கம்மென்றிராமல் குத்துச்சொற்களால் நோகவைக்கிற ஒரு கோணல் கட்டை! அவன் மனைவியோ வாயடங்கியிராமல் உடனுக்குடனே பதிலுக்குப் பதில் பேசிச் சிடுசிடுக்கிற இன்னொரு கோணல் கட்டை! இவர்களுக்குப் பொருத்தம் பார்த்துக் 'கண்ணாலம்' பண்ணினார்களே! அதுதான் வேடிக்கை!

ஃ

குலஸ்திரீயான தன் மருமீது ஜென்மப் பகை! ஆனால் எதிர்வீட்டுக்காரன் வைத்துள்ள பரஸ்திரியான அவன் உபநாயகியின்மீது வெகு விஸ்வாசம் வைத்துப் பழகி யுறவாடுவது! இது கோணல் கட்டைகளான மாமிகளின் சங்கதி! ஃ

வீட்டில் சிலரைக் குடியிருக்கச் செய்வதில், அவர்கள் உப்பு, பருப்பு முதல் இரவல் கேட்க வந்துவிடுகிறார்கள்! பிறகு திருப்பித் தருவதுமில்லை! இலவசத்திலேயே எதையும் நக்கி

அவர்கள் மரணம், இவர்கள் மரணம் என்று தனது டைரிகளில் நெடுக எழுதி வந்தவன், தன்னுடைய மரணத்தை இன்னொருவன் எழுத விட்டு விட்டுத் தான் முடிந்து விடுகிறான்.

விடப் பார்க்கிறார்கள். இந்தத் தரித்திரக் கோணல் கட்டைகள் கடைசியில் நல்ல வாழ்வு வாழ்வதாகவும் காணேம்! வஞ்சித்து வாழ்ந்தார் யார் வையக மீது?

ஃ

ஏமாற்றிப் பிடுங்கும் கோணல் கட்டைகளிடம் எவரும் ஜாக்கிரதையா யிருக்கட்டும்! தன் பணத்தைச் செலவிடாமல் பிறர் பணச்செலவிலே தன் வயிற்றை இது நிரப்பிக்கொள்ளும். பொடி போடுவதை ஒருவன் விட்டுவிட்டால், அவனுடைய பொடிடப்பியை இனி உனக்கு எதற்காக வென்று சொல்லி அப்பிக்கொள்ளப் பார்க்கும்! வீட்டுச் சாமான்களை வேறொரு பக்கமாய் எடுத்துவைத்து ஒழுங்குசெய்ய ஒரு கோணல்கட்டையைத் துணைக்கு அழைத்தால், அது வேலையோடு வேலையாக இரண்டொரு சாமான்களை எடுத்துவந்து காண்பித்து இது உனக்குப் பயன் படாதே, எனக்குக் கொடுத்துவிடு என்று வெகு ஜாலக்காக மயக்கிக் கேட்கும். உடனே நாமும் நம்முடன் கூடஇருந்து வேலை செய்கிறதே யென்றெண்ணி அதை எடுத்துக் கொள்ளும்படி சொல்லிவிடுகிறோம். பிறகோ ஏன் தந்தோமென்று மனம் வாதிக்கிறது. ஆகவே, இவ்விதம் பறிக்கிற குணமுள்ள கோணல் கட்டைகளை அருகில் சேர்க்காமலும், அவற்றினிடம் நெருங்காமலும் இருப்பதே மேல்! ஃ

தன் அதிகாரம் வேகிற வீடு இது என்று கண்டுகொண்டு மேலும் ஏறி மிதிக்கப் பார்த்து நசுக்க வருகிற கோணல்கட்டைகள் சிலஉண்டு. ஆரம்பத்திலேயே அவர்களின் அதிகாரம் இங்கு வேகாதென்று கண்டித்திருந்தால் இவ்வளவு நெருங்கவும் மிஞ்சவும் இடம் ஏற்பட்டிராதல்லவா?

ஃ

ஏதும் தெரியாத பேதைகள் போல் மழைக்காக ஒதுங்கிப் பிறகு கால்நீட்டி மனைக்காக வழக்கிடுகிற கோணல் கட்டைகளும் இருக்கிறார்கள்! இவர்களிடம் எவரும் ஏமாறிவிட வேண்டாம்! ஃ

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் மனது பேதப்பட்டுப் பிரியம் தப்பிப் போயுள்ள குடும்பங்கள் அநேகம். தாய்க்கும் மகனுக்கும் சண்டை, மாமிக்கும் மருகிக்கும் ஸதா போர், மூத்தாள் இளையாள் விரோதம், இப்படிப்பட்ட ஒரு குடும்பத்தின் நடுவே ஒருவரோ, அல்லது ஒரு தரித்திரக் குடித்தனமோ உட்புகுந்து தங்கிக் கொள்வதானல், இவர்கள் இருவருக்கும் மத்தியில்நின்று கோள் குண்டுணி சொல்லி என்னென்ன மித்திரபேத நாசங்கள் விளைவித்துக் கோணல்கட்டைகளாய் விடுவார்களோ வென்று நடுங்கவேண்டி யிருக்கிறதப்பா!

ஃ

தகப்பன் பேருக்கு இருக்கிறது வீடு; இவனுக்கு என்ன பாத்தியதை இங்கே?—போ என்றால் வெளியே போக வேண்டியவன்தானே—என்று இடையே வந்து நுழைந்த ஒரு கோணல்கட்டை வீட்டுக்காரனை தந்தையை உயர்த்தி, அவனது முதல் தாரத்துக் குமாரனைப் பழித்துக் கேவலமாய்ப் பேசுகிறது! நடுவே நேற்றுவந்து புகுந்த இந்தக் கட்டை எவ்வளவு வாய்த்துடுக்குக்கு மீறிவிட்டது பார்த்தீர்களா? இந்தக்கட்டையின் பேச்சைக்கேட்டு மூத்தாள் குமாரன் வயிறு எரிய, அவன் தந்தையும், அவன் மாற்றாந்தாயும் அப்படி அந்தக்

பெண்களின் கற்பு அவர்களின் மனவுறுதியிலே. பிறாது காவல் பயனில்லை. அதிகம் காவல் காத்த இடத்தில்தான் கற்பழிவு நேர்கிறது.

கட்டை சொன்னதற்கு சந்தோஷிக்கிறார்கள். அவர்கள் சந்தோஷிப்பது இந்தக் கோணல்கட்டைக்கு முதுகில் தட்டிக் கொடுத்ததுபோலாய் விடுகிறது! ஐயோ அனியாயமே! ஹா! கடவுளே!! ஃ

இன்னொரு வேடிக்கை கேட்கிறீர்களா! வீட்டிலுள்ள மற்றவர்களைப் பற்றி சதா கோள் சொல்லிக்கொண்டு தன் பக்கமே நிற்கக்கூடிய கோணல் கட்டைகளைத் தான் சில வீட்டு ராணிகளும் ராஜாக்களும் தங்களிடம் வைத்துக்கொண்டு அன்னமிட்டு ஆதரிக்கிறார்கள். அவ்விதமின்றி யாவரிடத்தும் அன்பும் ஆதரவுமாக நடுவிற் புகுந்த அன்னியர்கள் நின்றால், அத்தகையோரை வீட்டுத் தலைவியும் தலைவனுமான கோணல் கட்டைகள் தங்களிடம் சேர்த்து வைத்துக் கொள்ளாமல் சீக்கிரத்திலேயே வெறுப்புற்று வெளியேற்றி விடுகிறார்கள்! ஃ

மருமகள் ஒரு தச்சனைத் தருவித்து தனது பெட்டியைப் பழுது பார்க்கிறாள். அந்த சமயம் மாமி அந்த உடைந்துபோய் மூட முடியாம லிருக்கிற கதவைச் சரிசெய்யக் கூடாதாவென முணுமுணுக்குகிறாள். அதைக் கேட்ட மருமகள் தச்சனைக் கொண்டு அந்தக் கதவையும் சரிசெய்துவிட்டு மாமி சந்தோஷப்படுவாளென்று அந்த சங்கதியை அருகில் வந்து சொல்வதற்கு வாயெடுக்கிறாள். அதற்குள் மாமி கதவு சரியாய்விட்டதை யறிந்துகொண்டு, கதவை என் பழுதுபார்க்க வேணும்; அதற்கென்ன அவசரம்; வீட்டுக் கொல்லைச் சுவர் இடிந்து கிடக்கிறது—அதைக் கவனிக்காமல் கதவுக்கென்ன அவசரம் என்று குத்தலாய்ப் பேசத் தொடங்கிவிடுகிறாள்! மாமி சந்தோஷப் படுவாளென்று கதவு பழுது பார்த்ததைச் சொல்லவந்த மருகியோ தன் வாயை மூடிக்கொள்கிறாள்! செய்தாலும் குற்றம், செய்யாவிட்டாலும் குற்றமாய்ப் பேசுகிற இவ்வித கோணல் கட்டைகளால் குடும்பங்கள் படும்பாடு கொஞ்சமா? ஃ

தோசைக்காரி காலையில் எழுந்ததும் ஒரு பெரிய பானை நிறைய மாவை வைத்துக்கொண்டு, ஒரு அகப்பை மாவைத் தோசைக்கல்லில் கடுதாசிபோல் தேய்த்துவிட்டு அதைக் காலணா என்கிறாள்! அந்தத் தோசையைக் கையால் எடுப்பதற்குள் பல துண்டுகளாய் விடுகிறது! நேற்றே வேலையோடு வேலையாக கால்படி அரிசியும் உழுந்தும் போட்டு மாவு அரைத்துக் கொள்ளச் சோம்பல்பட்ட கோணல் கட்டைகள் கையில் தட்டுகளோடும் இப்பொழுது தோசைக்காரியைச் சுற்றிக்கொண்டு காத்துக் கிடக்கிறார்கள்! இதுவும் ஒரு குடித்தனக் கோணல் தானே! அந்தக் கொஞ்சம் மாவை வீட்டிலேயே அறைத்துக்கொண்டால் எங்கேயும் தட்டு ஏந்திப் போகாமல் வீட்டிலேயே சுட்டுத் தின்றுகொள்ளலா மல்லவோ! ஃ

அன்னிய மனிதர்களை எதிரில் வைத்துக் கொண்டு அவர்களை மகா யோக்கியமானவர்களாக எண்ணித் தன் வீட்டிலுள்ள மனுஷ்யர்களைப் பற்றி—அவர்கள் பல சாமான்கள் திருடிவிட்டதாகப் புகார் செய்கிறார்கள். இந்தக் கோணல் கட்டைகள் அந்த அன்னிய மனிதர்கள் நல்லவர்கள்போலிருந்து எவ்வளவு சாமான்களைச் சுருட்டிக்கொண்டு போய்விட்டார்களென்பதை அறிகிறதேயில்லை! ஃ

விளக்கு தன்னை அதிகம் நெருங்கியவரைச் சுட்டுவிடுவதுபோல, சிலாது நேசமும் உறவும் அளவு கடந்து விட்டால் மரியாதை மண்ணுவதுடன் மனஸ்தாப கலகமும் சூழ்கின்றது.

வீட்டில் வேலைக்காரர்களை வைத்துப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கையில் சில கோணல் கட்டைகள் நடுவில் ஒரு கலகத்தை எழுப்பிக்கொண்டு, வேலை வாங்கிக்கொண்டிருக்கிற வீட்டுக்காரனை அந்தக் கலகத்தில் நியாயம் பேசும்படி இழுத்துவிட, இந்த அல்லோல கல்லோலத்தில் வேலைக்காரர்கள் அரைகுறையாய் வேலைசெய்யத் தொடங்கிவிட, அதைக் கண்டித்து அருகிலிருந்து முழுவேலையையும் வாங்குவதற்கு இந்தக் கலகத்தால் கூடாமற்போக, கடைசியில் பாதிவேலைக்கு முழுக் கூலியையும் கொடுத்தனுப்பவேண்டி வருகிறது! இந்த நஷ்டத்தை வேலை சமயத்தில் கலகத்தைக் கிளப்பிக்கொண்டு கெடுத்த கோணல் கட்டைகள் அறிகிறார்களா? அது எது?


ஃ

ஒரு நூலை வாசிக்கையில் அந்த நூலிலுள்ள நல்ல கருத்துகளை விட்டுவிட்டு, செய்யாது தவிர்க்கும்படி இடித்துக் கூறியிருக்கும் தீயசங்கதிகளிலேயே கண் வைத்து அதைத் தானும் செய்து பார்த்துவிட நினைக்கும் ஆபாஸக் கோணல் கட்டைகள் எத்தனை எத்தனையோ! வீட்டில் அழகுமனையாள் இருக்க வெளியில் அன்னிய மாதர்களோடு திரியும் கோணல் கட்டைகள் எத்தனை! வாங்கிய கடனை ஏமாற்றிவிடும் கோணல் கட்டைகள் எத்தனை! எப்பொழுது பார்த்தாலும் குடும்பத்துடன் விரோதப்பட்டுக் கொண்டே நிற்கும் கோணல் கட்டைகள் எத்தனை! நன்றி மறந்த—தனக்கு உதவியவனுக்கே குழி வெட்டுகிற—கோணல் கட்டைகள் எத்தனை! விவாககாலத்தில் ஒரு கலக மனஸ்தாபத்தைத் தூண்டிவிடுகிறகோணல் கட்டைகள் எத்தனை! கடவுளைத் தொழக் கோயிலுக்குச் சென்றுங்கூட அதில் மனத்தைச் செலுத்தாத கட்டைகள் எத்தனை! போட்டி போட்டுத் தானும் லாபம் அடையாமல், மற்றவனும் லாபமடையாமல் இருவருமே கெடவைக்கிற கோணல் கட்டைகள் எத்தனை! புது உத்தியோகம், புதுப் பெண்டாட்டி, புது வாழ்வு, புது செல்வம், புது வீடு வாசல் உண்டானதும் புது முகமாய் மாறிக் கண்களே தெரியாது போகிற கோணல் கட்டைகள் எத்தனை! ஏழெட்டுப் பிள்ளைகள் பெற்றுக்கொண்ட பிறகுங்கூட, புருஷனும் மனைவியும் இன்னும் 'டூ' கொடுத்துக்கொண்டு ஒருவரையொருவர் முட்டிமோதிச் சச்சரவிட்டுக் கொள்ளுகிற கோணல் கட்டைகள் எத்தனை! மற்றுமுள்ள கோணல்கட்டைகளை என் நஞ்சான் குஞ்சான்களே நினைத்துப் பார்த்துக் கொள்ளும்படி விட்டு விடுகிறேன்! இந்தக் கோணல் கட்டைகள் திருந்துமா வென்பது கேள்வி! இந்தக் கேள்விக்கு நீங்களே உலக அநுபவத்தை உங்கள் முன்பாக இழுத்துப் போட்டுக்கொண்டு நோரான பதில் சொல்லிக் கொள்ளுங்கள்! ராம்! ராம்! சுபம்! ஞ!! சுவாஹா!!!

வெண்பா

நாடி அமிர்தமவள் நண்பா! வருமுன்னே
தேடிச் செலுத்தினையோ சந்தாவை?—நீடுலகில்
அன்னாள் வயதாறும் இன்னருளால் கொள்வதற்கே
உன்னு துதவு உவந்து.

மு. துரைப் பிள்ளை



வயிறு எரிந்தவர்களின் கொதிப்பு வஞ்சகக்காரர்களின் சிம்ஹாஸனத்தை ஆட்டி வாட்டி வதைக்குமாம்!

ஃ

ஒரே மூர்க்கமாய்முறண்டு இரக்கமற்று அநியாயம் செய்கையில் உள்ளதும் தேய்ந்துபோவதே அதனால் காணக்கூடிய பயனாகுமாம்!

ஃ

அகப்பட்டுக் கொண்டவர்களுக்கே திருடன்—விபசாரி என்று பேராம்! ஃ

எவ்வளவுக்கு நிர்வாணமோ அவ்வளவுக்கு நாகரீகம் அதிகமாகுமாம்!

ஃ

மானம் அவமானம் என்பது அந்தஎல்லை மீறாத வரையில் தானாம்!

ஃ

குனிந்துள்ள மணப் பெண்ணும், வளைந்துள்ள வில்லும், தலையணை மந்திரமும்—வெகு வேலைகள் செய்து விடுமாம்! ஃ

முன் பின் அறியாதவரைத்தனது நெருங்கிய பந்து என்பது பிடுங்கித் தின்பதற்காம்! ஃ

காணும் காரிகையர் மீதெல்லாம் கருத்து செலுத்தும் கபடருக்கே பராரீ ஸகோதரர் என்று பேராம்!

ஃ

துக்கம் விசாரித்த லென்பது அங்கு குந்திக்கொண்டு காலை நீட்டிக் கொழுக்க விருந்து உண்பதற்குத் தானாம்! ஃ

உள்ளுக்கு நெஞ்சு நஞ்சானாலும் மேலுக்கு மட்டும் புன்சிரிப்பு தானாம்!

ஃ

ஒருவன் மற்றவர்களை ஏமாற்ற நினைக்கையில்தான், அந்த மற்றவர்கள் இனி ஏமாறாதிருக்கக் கற்றுக் கொள்கிறார்களாம்! ஃ

அவனும் இவனும் சிரித்துக் குலாவினாலும் உள்ளுக்கு ஒருவனையொருவன் விழுங்கிவிடப் பார்க்கிறானாம்! ஃ

உனக்குப் படிக்கத் தெரியுமா? என்று விகடனை ஒருவர் கேட்டதற்கு, எனக்கு ஓயாமல் எழுதமட்டுமே தெரியுமென்று பதில் சொன்னானாம்! ஃ

18-வயதில் சந்யாஸமும், 60-வயதில் கிரகஸ்தாசிரமமும் கொண்டால் பிள்ளை குட்டிகளின் தொல்லையே யிராதாம்! ஃ

தாதா கட்டிக்கொண்ட அழகு கண்ணாட்டி அவருக்கு உட்பட்டு நடப்பது அந்த முதல் நாள் மட்டுந்தானாம்! ஃ

பஞ்சாங்க சாஸ்திரிகளுக்கு வெங்காயம் விலக்கே தவிர, பரத்தையர் விலக்கல்லவாம்! ஃ

அதிக நேசத்திலும், அதிகம் எட்டிய உறவிலும்தான் ஒருவரை யொருவர் மறந்து போவதும், கைவிடுவதும், கடிதம் எழுதாததும் அதிகப்பட்டிருக்குமாம்! ஃ

தெரிந்தவர் வெகு வேகு கேவலம் செய்ய, முகமே காணாதவர் எவ்வளவோ கௌரவத்தில் மதிக்க—இதுவே விகட உலகின் போக்காம்!

ஃ

காவிரிநதி யிருக்கிற இடத்திற்கு கங்கை வந்த பிறகுதான் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அரசாக்ஷி கிடைக்குமாம்! ஃ

நிற்பது கோவிலில் பக்தர்களின் கூட்டத்திலானாலுங்கூட கீழே தவறிப் போட்டுவிட்ட அந்தக் காலணா மறுபடி அகப்படாதாம்!

பத்ம பாரிஜாதம்.

என் கண்மணியே, குழந்தாய், பத்மா! நீ அரும் பெரும் நூல்களை வாசித்து நன்கு கற்ற பெண்ணாக வேண்டுமென்று நான் மிக்க பாடுபட்டேனம்மா. என் முயற்சி வீண் போகவில்லை. நீ "அமிர்த குணபோதினி"யை வாசிப்பது எனக்கு எவ்வளவோ ஆனந்தமாயிருக்கிறது. நீ கல்வியிலும் ஞானத்திலும் உயர்வதற்கு அந்த ஒரு பத்திரிகையே உன் ஜீவிய முழுதுக்கும் போதுமானது. அநேக அரிய நூல்களின் சாரமாகவும் அப்பத்திரிகையைச் சொல்லலாம்.

பத்மா :—என் அருமை அன்னாய்! உங்கள் பெயரே பாரிஜாதம். பாரிஜாதத்தின் வயிற்றில் பிறந்த பெண் பாரிஜாதமாகக் கேட்பானேன்? புஷ்பத்தின் பரிமளம் அதைச் சூட்டிக் கொண்டார்க்கும் உண்டாவது சாதாரணமே. 'அமிர்தம்' என் பர்த்தாவுக்கு வருகிறது. அதை அவர் பார்த்துவிட்டு இங்கு எனக்குஅனுப்புகிறார். உங்களுக்கு 'அமிர்தம்' வருவது அவருக்குத் தெரியாது.

பாரிஜாதம் :—"அமிர்த குணபோதினி"யே நமது உயிர்; அதுவே நமது சொந்த சொத்து; அதுவே நமது பெருந்துணை; அதுவே நமது செல்வக்குழந்தை; அதுவே நமது சிநேகிதி. அதை நமது வாழ்நாள் முழுதுக்கும் பெற்று ஆனந்திக்க வேண்டும். அதன் ஆறவது வருட சந்தாவை இந்த மாசி மர்தத்திலேயே மணியார்டர் செய்து விடுவோம். வி. பி. அனுப்புகிற கஷ்டம் அவர்களுக்கு வேண்டாம். அது மூன்று அணா வீண் செலவு தானே.

பத்மா:—ஸ்ரீமான் இராஜகோபால் முதலியார் மிகவும் திறமைவாய்ந்த நிர்வாகஸ்தர். அதிக சாமர்த்தியசாலி. 64-பக்கங்களாக இருந்த "அமிர்த குணபோதினி"யை இப்போது ஒரு நிமிஷத்தில் 80-பக்கங்களாக்கி விட்டாரே! அவருக்குத் தகுந்த பத்திராசிரியரே கிடைத்தார். அந்த இராமாநுஜத்தைப் பெண்கள் பக்கத்து வக்கீல் என்றுதான் சொல்லவேண்டும். பிறவி ஆசிரியர்; ஒரு பெரிய அநுபவ ஞானி. சிறுவர் சிறுமியர்கள் வாசிக்க வேண்டுமென்றே வெகு சுலபமான நடையில் மிக்க இனிமையாய் எழுதி வருகின்றார்.

பாரிஜாதம் :—இராமாநுஜத்திற்கு சரஸ்வதியின் அருள் ஸம்பூர்ணமாயிருக்கிறது; இராஜகோபால் முதலியாருக்கு லக்ஷ்மீ கடாக்ஷம் அபரிமிதமாயிருக்கிறது. இந்த ஸரஸ்வதியும் அந்த லக்ஷ்மியும் பத்திரிகையின் மேல் அட்டையில் ஆனந்திதராய் வீற்றிருக்கின்றனர். "அமிர்த குணபோதினி"க்கு நாம் ஒரு ரூபாய்

நமது உதவிக்கு ஒருவரை வருமாறு கடிதமெழுதி, அவர் சிலரோடு வந்து தங்கி, அந்த வகையில் ஆகும் பெரும் பெரும் செலவுகளைவிட, எவருக்கும் எதுவும் எழுதாமல் மௌனமாய் நமது கஷ்டத்தை நாமே தாங்குவது எவரது மனஸ்தாபமும் வாராதிருக்க வழியாவதுடன் வீண் செலவுகளும் நேரா.

கொடுப்பது மஹா புண்ய கைங்கரிய மாகும்; ஒரு உத்தமமான வித்தியா தானத்தை ஆதரித்து அதற்கு உதவி செய்ததுபோலு மாகும்.

பத்மா:—ஒரு நிமிஷத்தில் செல வாகிவிடுகிற அந்த ஒரு ரூபாயை நாம் ஆறும் வருட சந்தாவாக அமிர்த குணபோதினிக்குக் கொடுத்தால் அது கடவுளுக்குப் பிரீதியான செய் கையாகும். அதற்காகப் பகவான் நம்மை ஆசிர்வதிப்பார். நாம் லக்ஷ்மீ தேவிக்கும் ஸரஸ்வதிக்குமே அந்த ஒரு ரூபாயை ஸமர்ப்பிப்பதாகவும் நினைத்துக் கொள்ளலாம். ஆறுவது வருட சந்தாவை இன்றே மணியா டர் செய்துவிடுவோம் அம்மா.

பாரிஜாதம்:—மணியாடர் செய் வதுதான் இன்றைய நமது முதல் வேலை. அதற்குப் பிறகே புசிப்பு.

பத்மா:—அம்மா, அதுதான் சரி. எனக்குத் தெரிந்து இந்தத் தெருவில் எட்டு பேருக்கு "அமிர்த குணபோ தினி" வருகிறது. அவர்களிடமும் சென்று ஆறுவது வருட சந்தாவைப் பெற்று எல்லாம் ஒன்று சேர்த்துப் பத்து ரூபாயாக ஒரே மணியாடரில் அனுப்பிவிடுவோம். மணியாடர் கமி ஷனும் லாபமாகும்.

பாரிஜாதம்:—அப்படியே மணியா டர் செய்வோம் என் கண்ணே! உனக்கு இருக்கிற பத்திரிகையின் ஆசையைப் பார்த்து நான் எவ்வள வோ சந்தோஷப்படுகிறேனம்மா, உடனே புறப்படு. இருவருமாகப் போய் ஆறுவது வருட சந்தாவை மற்றவர்களிடம் கேட்டு வாங்கி வரு வோம். நமது குழந்தை "அமிர்த குணபோதினி"க்கு நாம் எவ்வளவு சிரமப்பட்டாலும் தகும். அது ஒரு பெரிய தர்மமாகும். அதி உத்கிருஷ்ட மான ஸத் கைங்கரியமுமாகும். ஆறு வது வருட சந்தாவை மணியாடரில் அனுப்புவது நமது கடமைகளில் முதற் கடமை. குழந்தாய்! வா, ஆறுவது வருட சந்தாவை வசூலிக் கப் போய்வருவோம்.

[இருவரும் புறப்பட்டுச் செல் கின்றார்கள். இதை வாசிக்கும் ஸ்ரீமதி களும், ஸ்ரீமான்களும் இவ்விதமே ஆறுவது வருட சந்தாவை இந்த மாசி மாதத்தில் தானே மணியாடர் மூலம் அனுப்பிவைத்து உதவிபுரி வார்களாக. அது புது வருஷத்து நிர்வாக ஏற்பாடுகளைச் செய்ய எவ்வ ளவோ சகாயமாயிருக்கும்.]

மு. துரைப்பிள்ளை.

ஆறுவது வருட சந்தா.

வெளிநாடுகளிலுள்ள கையொப்ப நேயர்கள் இந்த மாசி மாத ஸஞ்சிகையைப் பெற்றவுடன் ஆறுவது வருட சந்தாவை உடனே அனுப்பிவைக்க வேண்டுகிறோம். அவ்விதம் அனுப்பினால் தான் குறித்த காலத்தில் நமக்கு வந்துசேர சௌகரியமாயிருக்கும்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களிலுள்ள பத் திரிகாபிமானிகளும் புதுவருட சந்தாவை இந்த ஸஞ்சிகை கிடைத்த வுடனே மணியாடர் செய்யவேண்டுகிறோம். வி. பி. நிர்ப்பந்தங்கள் மிகவும் அதிகரித்துவிட்டதால் அனைவரும் மணியார்டர் மூலமாகவே அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். பத்திராசிரியர்.



வாழிய நாளே!

(604-ம் பக்கத் தொடர்ச்சி.)

பெருமணல் சிந்திய அருமைப் பாலை
ஒருகால் அடையினும் அடையலாம், ஆயினும்
கடந்தபின் உன்னைக் கடவுளும் பிடியார்
மெல்லனீ நகரினும் வல்லையே கதியில்
கழிந்தோ டுதலே கழிபேர் உவகையாக்
கொண்டுள நீயோ கொணர்வை, சென்றவுன்
சோதரை தவிப்பவர் சுகங்கொளு மாறே?

[சென்ற உன் சோதரரை—சென்றுபோன தினங்களை.]

நோதல் கண்டவர் நைந்தநாட் பலவே
சென்றவோர் நாளே பொன்னாள் எனவவர்
இன்றும் படுந்துயர் எண்ணுதற் கிலையே
சென்றது சென்றதே! செய்வதும் எதினி?

[மணலிற் சிந்திய பாலை ஒருவேளைத் திரும்பப்பெறுவது கூடுமானதாயிருந்தாலும், நாளே நீ கடந்துபோனபின்பு உன்னைக் கடவுள்கூட எட்டிப் பிடிக்கமுடியாது. நீ நிமிஷம் நிமிஷமாக வெகு மெதுவாய் நகர்ந்தபோதிலுங்கூட பெரிய பெரிய காலயுகங்களைக்கூடத் தாண்டிச் சென்றுவிடுவாய். சிறுகச்சிறுகப் பொழுதையும் காலத்தையும் குறைத்துக் கழிந்துபோவதையே உன்னுடைய சந்தோஷத் தொழிலாகக் கொண்டிருக்கிற நீ சென்றுபோன நாட்களான உன் சகோதரர்களை—அந்த சென்ற தினங்களை—மறுபடியும் கண்டு களிக்க நினைக்கிறவர்களின் முன் கொண்டுவந்து காட்டமுடியுமோ? சென்ற நாளே தங்கமான நாள் என்று அவரவர் எண்ணிப் படுந்துயரம் என்னே! சென்றநாள் போனநாளே! அது திரும்பி வருவது இனி எது?]

என்னுடன் இருந்தே இன்மொழி பலவே
வன்னமாய் மொழிந்தபல் அன்பரும் பெரியரும்
முன்னாள் இருந்தனர்: இன்னாள் அவர்க்கு
என்னவா கியதோ? எவரெனக் குரைப்பர்?
அன்றுயான் இன்பம் அடைந்தவோர் நாளும்
என்பொருட் டாகுமோ இனியும் இசைந்தே

ஃ

வாழ்வில் பற்பல விதமாய் நேரும்
தாழ்வில் கருமம் தரும்பல ஆண்டிற்
கப்பால் ஆகின ஆயினும்: தோற்றமோ

தப்பித மாகத் தக்கதா நேற்றுதான்
ஆயின தோன்றுய் அனைவரும் எண்ணுமா
றுயினும் ஆகும் : அவ்வுழி ஆவன
காற்றது போலே கடிகிடும் நாளால்

ஃ

என்றுதோன் றியதிது? என்றிது மறையும்?
என்பதை அறிந்தார் எவரென அறியேன்
சென்றநாள் யாவும் கண்டனன் தமியேன்
இன்றும் என்பால் இருக்குநாள் என்னவோ?
நாளே என்றன் றேழா, நாள்பல
உண்டோ எனக்கும் உணர்த்துவை உவந்தே


ஃ

சென்றதை நினைத்தேன் சிந்தையும் அலுத்தது
இன்றேன் கண்முன் இருக்குநன் னுளே!
என்றும் எனக்கு இனிமையே தருக
என்முன் உளவேன் அன்பரும் பலரும்
இன்போடு வாழ்க! அன்னுர் வாழ்நாள்
என்னேடு தொடர்க அவர்முன் என்னுள்
இன்பப் பெருக்கால் இனிமையாய் முடிக!
ஈதோன் றுனையான் இயல்பாய் வேண்டுவன்
ஈதல் ஒன்றே இதமெனக் கொண்டாய்
ஆதரம் வேறிலே அரசே!
நாதனே கைவிடேல் நம்பினேன் உனையே!

மூ. துரைப்பிள்ளை.

வீடு இரண்டுபட்டால் கொண்டாட்டமே!

ஊரிலிருந்தும் வந்து இலவச நுழைப்பில் தங்க விரும்புகிறவர்களை இந்த வீட்டார் இங்கு வந்து சாப்பிடுங்களென்றும், அந்த வீட்டார் அங்கு வந்து உண்ணுங்களென்றும் போட்டி போட்டுக்கொண்டு அழைத்தால், வந்தவர்கள் இன்னும் பல நாளைக்கு அன்ன விசாரமின்றி சுகமாக இருந்து புசித்துவிட்டுச் செல்லலாம். வந்த சுயகாரியப்புலிகள் லாபமடைய, ஏதோ ஒரு பெரிய கௌரவம் வந்து முளைத்துக் கொண்டதாக முட்டாள்தனமாய் நினைத்து ஏமாறிப் போட்டி போட்டுக்கொண்டு உபசரித்தவர்களோ இளிச்சவாயர்களாகிறுர்கள். இப்படி வீடு இரண்டுபட்டால் வந்தவர்களுக்கு மகா கொண்டாட்டமே!



அன்புள்ள ஐயா,

நம் நாட்டில் எங்கு பார்த்தாலும் சைவ சபைகளிலும், மடங்களிலும், மடங்களில் ஆண்டுதோறும் நடைபெறும் குரு பூஜை முதலிய விசேஷங்களிலும் சைவர் மகாநாடுகளிலும் மேடைமீது பேசும் அன்பர்களில் ஒருவர் மற்றவர்களைப்பற்றிப் பேசும்போது அவர்களின் பெயருக்கு முன்னால் சில பட்டங்கள் சேர்த்துப் பேசுவதை எங்கும் காணலாம். அவையாவன:- கவிச்சிங்கம், சதாவதானம், அஷ்டாவதானம், பிரசங்க பூஷணம், பிரசங்க ரஞ்சிதம், அருட்கவி, பாலுகவி, பாலகவி, சித்ரகவி, வரகவி, சரபம், சுவாமி, முத்துமணி, பாவலர், பண்டிதர், வித்வான், சாது என பலவிதமாய்ச் சொல்லப்படுகிறது. அவரவர்களுக்கு இவ்வித பட்டங்கள் எப்போது கிடைத்தது, யாரால் கொடுத்தது, யார் யாருக்கு எப்படிப்பட்ட பட்டங்கள் கிடைக்கக்கூடும் என்ற விஷயங்களை விவரமாய் நம் போதினியின் மூலம் எழுதக் கேட்டுக்கொள்கிறேன்.

வே.ச.தர்மலிங்கம் பிள்ளை, களம்பூர்.

[அன்பரவர்கள் தயவு செய்து தாமே தமக்குத் தோன்றிய பட்டத்தைத் தமக்கு முன் சேர்த்துக்கொள்ளலாம். அது அவ்வளவு உசிதமாகப் படாத பக்ஷத்தில் தமக்குவேண்டிய நாலைந்து பேர்களை அப்பட்டத்தைத் தமக்களிக்கும்படிச் சொல்லலாம். இதுவே பெரும்பாலும் நடைபெறும் முறை. பட்டம் பெற்றபிறகு ஒரு தோட்டக் கச்சேரி வைத்தால் இன்னும் பிரபலமே! ப-ர்.]

II

ஐய, **சிநேக சச்சரவு.**

ஒருவனுக்கு இரண்டு நண்பர்கள். அவ்விரு நண்பர்களில் ஒருவன் தன் நேசனை நோக்கி, அவனுடைய மற்றோர் நண்பனிடம் பேசக்கூடாதென்றும், அவ்விதம் பேசினால் தன் முகத்திலேயே விழிக்கக் கூடாதென்றும் சொன்னால் அதற்குக் கூறவேண்டிய பதில் என்ன? இவனுக்கு இந்த நண்பனையும் விரோதிக்க மனமில்லை. அந்த நண்பனிடமிருந்து விலகவும் விருப்பமில்லை. இதற்கு முடிவு என்ன? ஜெ. சுந்தரலிங்கன்.

[இவ்விதம் சொல்லுகிற நண்பனிடம், "நீ உன் மனைவியிடம் பேசக்கூடாது; பேசினால் என் முகத்தில் விழிக்கக்கூடாது; இதை நீ முதலில் நடந்து காட்டியபிறகு, நானும் நீ தெரிவித்தபடி நடந்து காட்ட இயலுகிறதாவென்று முயற்சித்துப் பார்க்கிறேன்"—என்று பதில் சொல்லி அவனை மடக்குக. ப-ர்.]

III

மு. த. கரிகாலி என்னும் கிராமத்தில் ஒரு மாரியம்மன் கோவிலிருக்கிறது. அதிலிருக்கும் அம்மன் கல் சிலை மேலெல்லாம் சங்கம்பழம்போல் கொப்பளங் கண்டிருக்கிறது. அதைத் தொட்டால் மனிதர்களுக்கு அம்மை கண்டு நசுங்கி ஜலம் வடிவதுபோல் அதிலிருந்தும் நீர் வடிகிறது. அதை பூஜை செய்யும் பூசாரி அழுக்கு அவ்விதம் படிந்திருக்குமெனத் தேங்காய்

னார்போட்டுத் தேய்த்துக் கழுவியும் மறுபடியும் கொப்பளம் சங்கம்பழம் போல் அதே நிறம் அவ்வளவு கனத்துடன் ஊசிவைக்க இடமில்லாமல் ஷை சிலை முழுதும் அம்மை கண்டிருக்கிறது. ஷை சிலைக்கு இதற்கு முன் கால்புட்டி எண்ணெய் விட்டால் வழிந்து போகும். தற்சமயம் 2½-புட்டி எண்ணெய் விட்டும் தடவினது போலவுமில்லாமல் இழுத்துக் கொள்ளுகிறது. அம்மை கண்டு 20-நாட்களுக்கு மேலாகிறது. சிறிது முகத்தில் மட்டும் இறங்கியிருக்கிறது. தினம் 500-ஜனங்களுக்குக் கம்மி இல்லாமல் வண்டி வண்டியாய் வாழைமரம், கரும்பு, தேங்காய், பழம் சாமான்களுடன் வந்து அபிஷேகம் செய்துகொண்டு போகிறார்கள். அபிஷேகமாகும் பால், இளநீர், ஜலம், கரும்புச்சார் வாய்க்காலில் ஜலம் போவதுபோல் வெளியில் போய்க்கொண் டிருக்கிறது. சமீப கிராமங்களிலிருந்து பிரபுக்களும் ஏழைகளும் 400—500 பேர்களுக்குக் கம்மியில்லாமல் மேள வாத்தியங்களுடன் இராப்பகலாய்வந்து அபிஷேகம் செய்துவைத்துப் பார்த்துக் கொண்டு போகிறார்கள். கற்கண்டு திராக்ஷைப்பழம் கற்பூரம் வந்து குவிகிறது. பூசாரி எடுத்துவைக்க நேரமில்லாமல் கஷ்டப்படுகிறார்.

இதை நம்பாமல் நாங்களும் எங்கள் ஊரில் சில பிரபுக்களும் வேதபிராமணர்கள் சகிதமாய் சென்று கொப்பளத்தைத் தொட்டுப் பார்த்ததில் எங்களுக்கும் சந்தேகம் நிவர்த்தியாகி விட்டது. பிரபுக்கள் பலரும் ரூ. 100—200 சிலவு செய்து அபிஷேகம் செய்து வைக்கிறார்கள். நம் முன்னோர்கள் காலத்திலும் கேள்விப் படாத புதுமையாயிருப்பதால், பத்திரிகையில் பிரசுரிக்கவென்று ஆசையாய் எழுதலானேன். இது நன்மைக்கோ தீமைக்கோ தெரியவில்லை.

S. A. ஆதிமூலம் பிள்ளை.

இரண்டும் பரிசுத்த மனது.

அந்த நண்பன் ஐந்து ரூபாய் பெற்றுப் பல நாட்களாகியும் இன்னும் திருப்பித் தரவில்லை. அத்துடன் ஊர் விட்டும் புறப்படுகிறான். அந்த நிலையில் மறுபடியும் "ஏதாவது கிடைக்குமா?" என்று தன் நண்பனைக் கேட்கிறான். அந்த நண்பனோ என்னிடம் 20-ரூபா இருந்தது ; யாவும் செலவாகி ஐந்தே மிச்சம் ; அதைத் தருகிறேன் என்கிறான். இவனும் சரி யென்று அதைப் பெறுகிறான். கடன் வாங்கிய நண்பனுக்கும் மோசம் செய்ய நினைவு இல்லை. கடன் தந்தவனுக்கும் தந்தது வருமோ என்ற சம்சயமில்லை. இரண்டும் பரிசுத்த மனதாகி விடுவதில் கபட நினைவுக்கு இடமற்று விடுகிறது. ஆனால், பெறும் பொழுது பரிசுத்த மனது கொண்டு, பிறகு பணம் திருப்பித் தரவேண்டிய சமயத்தில் வறுமையால் தராமலே போனவர்களு முண்டு.

பிரிந்த தோழர்கள்.

(638-ம் பக்கத் தொடர்ச்சி.)

வளம்பெற வாழ்ந்த வாழ்வை இழந்து
இன்ப ஒளியினை என்று காண்போமோ
என்பதாய் ஏங்கி இருந்த காலையிலும்,
உண்மைப் பொருள்கள் உணர்த்தி 'அறிவுத்
திண்மையே திண்மை தேறு தி' என்று
உயிர்க்கிங்(கு) உறுதி உறுவிப் பனவாம்
செயிர்இலா உரைபல செப்பி, என் மயல்
தீர்த்திட என்னைத் திருத்தி உய்வித்த
சாந்தமே வடிவாம் சகர்களும் சிலரே.

ஃ

இன்பமோர் துன்பமோ எதுவந் தெய்தினும்
அன்பினோ டென்றன் அருகினி லிருந்து
சொந்த மனையில் சூழ்சுபம் எனவே
சிந்தையில் கொண்டு சிரமம் எண்ணாது
உழைத் திருந்து உவகை ஊட்டியும்
இழைத்த வினையாலும் எச்சரிக்கையோ(டு)
இராத தாலும் எய்திடும் பிணியால்
இராப்பக லாக இன்னலே நுகர்ந்து
படுக்கையில் கிடந்து பரிதவிக் குங்கால்,
அடுத் திருந்து அகம் சலியாது
கவலையோடு கவனித் திருந்தும்
உவகை எனக்கு உற்றிடில் தமக்கே
உற்றதெனத் தாம் உவகை மிகுந்தும்
பெற்றதாய் அனைய பேரன்பு சொண்டும்
இன்னியல் பினராய் இலங்கியிருந்த
என்னுயிர்த் தோழ இன்பினர் சிலரே.
அன்னோர் காட்டிய அன்பை நினைப்பின்,.
என்னே இந்நிலை! இந்நாள் அன்னவர்
எய்துவரோ ? அவர் ஏகினர் அந்தோ!
வையம் நீங்கி வானுறைகின்றனர் !

ஃ

புன்னகை முகத்தொடு புகழுரை கூறி
என்னை மயக்கி என்னிட மிருந்து
எவ்வெப் பயனை எய்தக் கூடுமோ
அவ்வப் போது அதையதைப் பெறலில்
தன்னலப் புலிகளாம் சகபாடிகளே
என்னது நேசராய் இன்(று) உறைகின்றனர்!
பிரிந்த தோழர்களால் பெற்ற இன்பத்தில்
விரிந்த அனுபவ மேன்மையில் சிறிதும்
என்னைச் சுற்றும் இன்றைய நேயர்பால்—

தன்னலம் ஒன்றையே சார்ந்து நிற்பவர்பால்—
காண்கிலேன் அந்தோ ! கடந்ததை எண்ணி
விண்துயர்ப் படலில் விளைபயன் என்னே !

ஃ

அன்று சொரிந்த அன்புக் கண்ணீர் !
அன்று மொழிந்த ஆசைச் சொற்கள் !!
அந்தோ ! அவையும் அகல்வனவோ என்
சிந்தையை விட்டு ! சீரியர் அன்னோர்
எப்பதி இருப்பினும் என் மனமென்னும்
நற்பதி விட்டு நழுவிடு வாரோ ?
அந்தகையோர் தம் அன்பினை எண்ணிச்
சித்தம் கலங்கித் தியங்கும் என்முன்னர்
இன்று தோன்றி இன்முகம் காட்டி,
என்றனெதிரில் இன்னுரை பேசி
புறத்தில் சென்று புன்மையாய் இகழும்
திறத்தினராய சிநேகரை நோக்க
நெஞ்சு கலங்கி நின்று அவர்தம்மை
அஞ்சி நிற்கின்றேன் அளவளா விடவே. (தொடரும்)

ஆரியூர் - வ. பதுமநாப பிள்ளை.

கை கடித்தவனும் கை கடிக்காதவனும்.

வந்த விருந்தினர் இத்தனை நாள் தாங்கள் இருக்கப் போவதாகத் தெரிவிக்காமலே வெகு கபடமாய் ஒவ்வொரு நாளையும் போக்குகிறார்கள். அவர்கள் இரண்டொரு நாள் தங்குவார்களென்று நினைக்கப்போக, எட்டுநாளாகியும் இன்னும் புறப்படுகிற ஜாடை தோன்றாதது கண்டு கண்விழி பிதுங்க, செலவிட்டு வாடி நிற்கும் வீட்டுக்காரனின்மீது, வந்த விருந்தினரும் தங்களின் இருப்பை அவன் விரும்பாதது தெரிந்து அவன் மீது உர் என்று கோபமாகிறார்கள். தங்களைச் சரிவரக் கவனிக்கவில்லை யென்கிறார்கள். செலவிட்டுக் கை கடிப்புண்டவன் கதி யிதுவாக, எவ்வித செலவும் செய்யாத—கையும் கடிக்காத மற்றொருவன் அங்கு வந்து விருந்தினரை வெகு ஆசை உறவோடும் ஆவல் பொங்க, "எப்பொழுது வந்தீர்கள்" என்று க்ஷேமம் விசாரிக்க, விருந்தினரும் அன்பாய்ப் பேச, அவனும் அவ்வளவுடன் ஒதுங்கித் தந்திரமாய் விடைபெற்றுப் போய் விடுகிறான். அவன்மீது கொண்ட சந்தோஷமும் அன்பும் இத்தனை நாள் தங்களைக் கவனித்தவன் மீது காணோம் !

பாப்பா பாட்டு

1. காலையிலெழுந்திரு பாப்பா—உன்
காரியத்தில் கவனம் வை பாப்பா
வேலைகள் மகிழ்ந்து செய் பாப்பா—பாடம்
வாசித் தெழுதவேண்டும் பாப்பா.

2. தினமுங் குளிக்கவேண்டும் பாப்பா—எல்லாந்
தீர யோசித்தல் நலம் பாப்பா
மனதில் கெட்டதை நினையாதே—நீ
மறந்தும் பேசாதே தினம் வாதே.

3. சுத்தம் சுகந்தருமே பாப்பா—சொன்ன
சொல்லுக்கு மாறுதே பாப்பா
சித்திரம் பழகு நீ பாப்பா—என்றும்
சிக்கனமாய் வாழவேண்டும் பாப்பா.

4. அதிகம் பேசுதல் வீண்தொல்லை—நன்கு
அறிந்து சென்றால் கவலை யில்லை
மதியுளோர் யோசனையே தீபம்—இதை
மதித்து விலக்கமுயல் கோபம்.

5. அன்பு, துன்பமொழிக்கு மருந்து—நீ
அறிவுளோர் வழி சென்று திருந்து
இன்சொல்லே சந்தோஷ விருந்து—தினம்
அளவு அறிந்து உணவருந்து.

6. சிற்றெறும்பு ஒற்றுமையாய் பாப்பா—கூடி
சிறப்புடன் வாழ்வதைப்பார் பாப்பா
அற்பர்களோடு சகவாசம்—நம்மை
அடியோடு கெடுத்திடும் மோசம்.

7. தந்தையுந் தாயுமே தெய்வம்—வீண்
தற்பெருமை கொள்ளாதே பாப்பா
அந்தரங்கஞ் சொல்லாதே பாப்பா—நீ
அனைத்தையும் நம்பிடாதே பாப்பா.

அ. பொன்னுத்தம்பி, ("நாடார்குல மித்திரன்.")

"எங்கள் ஊருக்கு வருகிறது தானே" என்போரெல்லாம் வரக்கூடியவர்களைக் கூப்பிடுவதில்லை. எங்கு வந்து விடுகிறார்களோ வென்ற எக்கமும் உள்ளுக்கு உதைக்காமலில்லை. எல்லாம் வெளியுபசார வாசகமே.

சென்றமாதம்

விடுதலை.

"வாழ்க நீ எம்மான்" என்று ஸ்ரீ பாரதியார் புகழ்ந்து போற்றிய காந்தி மகாத்மாவும், பண்டித ஜவஹர்லால்நேருவும், மற்றும் சில முக்கியஸ்தர்களும் சிறையினின்றும் விடுவிக்கப்பெற்றுள்ளார். சமாஸப் பேச்சுகள் இனி நடக்கலாம். உப்பு வரி நீக்கத்தையும், அன்னியத்துணியின் சாந்தமான மறியலையும், மதுவிலக்கையும் மகாத்மா பெரிதும் வற்புறுத்துகின்றார். சிறையிலுள்ள அனைவரையும் விடுவித்து "சுயேச்சையின் சாரம்". நன்கு காட்டப்பட வேண்டுமென்கின்றார். உப்பு, மது இவற்றையொதுக்கிவிடின் ஏராளமான பணக்கஷ்டம் நேரும். அன்னியத்துணி மறியல் இங்கிலாந்துக்குக் கனத்த நஷ்டம் தரும். ஆதலின் அரசாங்கமும் இதில் பின்னடைந்து வெகு கவலையுடன் யோசிக்கும். கடைசியில் சமரசம் உண்டோ இல்லையோ யாதோ!

***

ஒரு வீர வாலிபனின் புலி வேட்டை.

"ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு" என்று துணியும் தீரம் பழய நாளில் நம்மவரிடமிருந்தது. இப்பொழுதோ ஒரு திருடன் எதிர்ப்பட்டாலும் அவனுடன் போராட ஆற்றலின்றி உடனே போலீஸாரை யழைத்தலே வழக்கமாய்விட்டது. இத்துணைத் தீர்ப்பலத்திலுங்கூட, பழய பெருமையைக் காக்கும் வீரமணிகள் சிலர் இன்றும் இருக்கின்றார்கள். கெயிரா ஜில்லாவைச் சேர்ந்த கிராமமொன்றில் ஒரு காட்டினிடையே ஒரு வாலிபன் 6-அடி நீளமுள்ள புலியை எதிர்த்துத் தன் கத்தியால் குத்தினான். கத்தி தூள் தூளாகிவிட, புலிக்கும் வாலிபனுக்கும் கனத்த போர் நேர, வாலிபனது கிழிந்த சரீரத்தினின்றும் ரத்தம் பெருகியோட, அச்சமயம் கிராமஜனங்கள் வந்து புலியைக் கொன்று வாலிபனை மீட்டனர். எனினும், வாலிபன் தன் காயங்களால் வீரசொர்க்கம் புகுந்தனன். தன் வீரத்தில் உறுதி—நம்பிக்கை கொள்ளும் ஆண்மையின் தத்துவம் ஒப்பற்றது. அதற்கு ஈடு, நிகர் வேறில்லை.

***

பொறுமையற்ற குடித்தனக் கோலைகள்.

"ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு" என்பார்கள். ஆத்திரம் காரியத்தைக் கெடுப்பதுடன்கூட மனிதனையும் விழுங்கி விடுகிறது. கல்யாண மாப்பிள்ளை யாவதற்கு முன்னர் "பொறுமைப் பாடசாலையில்" ஒரு வருஷமேனும் படித்துத் தேர்ச்சி பெறுதல் அவசியம். இல்வாழ்வில் ஸதா தினப்போர் ஸர்வ சாதாரணம். சகித்தும், பல்லைக் கடித்து அடக்கியும், இறைவனை நோக்கி அலறியழுது சாந்தம் கொண்டும், கண்டும்

முனிசிபல் கௌன்ஸிலர் முதலிய உயரிய பதவிகள் கிடைத்ததும் சிலர் புதுநடை ஒய்யாரம் போட்டு, மற்றவர் தம்மை மதிப்பாய்ப் பார்க்கின்றனரா என்பதைக் கவனிப்பதில் ஓயாமல் கருத்து செலுத்துகின்றார்கள். பாவம்!

காணாததுபோல் நடந்தும், சினத் தீயைப் பொறுமையால் அடக்கியும், அவமான அக்கிரமங்களைச் சுமை தாங்கியைப்போல் தாங்கியும் சரிசரி என்று சமரசமாய்ச் சென்றாலன்றி சந்தோஷம் என்பது கடுகளவும் காண இயலா. ஒரு சிறு வார்த்தை கொலைக்குத் தூண்டிவிடும். ஒரு சிறு சச்சரவு மரண காயங்களைச் செய்துவிடும். பாலக்காட்டைச் சேர்ந்த தெக்கத்தா என்னுமிடத்தில் ராக் கண்டி என்ற ஈழுவர் தன் ஆத்திர புத்தியில் ஈன்ற அன்னையையே கொன்று மரணசிக்ஷை பெற்றார். வீட்டுச் சச்சரவில் அவர் தன் மனைவியின் பக்கமே பேசுவதும், மாதாவை எதிர்ப்பதும் வழக்கமாம். அன்னையோ தன் மருகியைக் கசக்கி வாட்டினான். ஒரு தினம் ரொட்டிக்காரிக்கு 2-அணா தரவேண்டியதில் மாமிக்கும் மருகிக்கும் கனத்த ஸம்வாதம் நேர்ந்தது. மாமி மருகியை அடித்துத் துரத்திவிட, மற்றவர் சமாதானப் படுத்த, பின் மருகி அரிசியையறைக்கச் செல்ல, மாமி குழவியைப் பிடுங்கிக்கொண்டு பட்டினி போட, பசியால்ஏங்கிய மருகி கண்ணீருடன் தன் தாய்வீடு செல்ல, மாலையில் வீடு திரும்பிய குமாரன், தன் மனைவி எங்கேயென்று மாதாவை வினவ, அவள் எவருடன் போனாளோவென்று அன்னை கூற, வரும் வழியிலேயே யாவும் கேட்டறிந்திருந்த குமாரன் தன் ஆத்திர புத்தியில் மீறித் தாயின் கழுத்தை வெட்டித் தீர்த்தான். அன்னையும் முடிந்து, அவனும் மரணதண்டனைக் காளானான். ஒரு குடும்பம் மாமியின் கொடுமையால்நாசமாகியது. இதேவிதமான மற்றொரு ஆத்திரக்கொலை பாலக்காட்டைச் சேர்ந்த கொடுவாயூரில் நிகழ்ந்துளது. மாமி வீட்டையே சாஸ்வதமாகக் கொண்டு வசித்த கிருஷ்ண மன்னாடியார் என்பவர் தனது—5-வயது சிறுமி மலபாதைக்கிருந்து விட்டு சுத்தி செய்யாமலே உட்கார்ந்ததற்குத் தன் மாமி அச்சிறுமியை ஏசியதற்காகக் கோபம் மிஞ்சி, "நீங்கள் ஏன் அலம்பிவிட்டிருக்கக் கூடாது" என்று தன் மாமியைக் கேட்க, அதற்கு அம்மாமி, "அது உங்கள்பாடு, உங்கள் பெண்டாட்டி பாடு" என்று பதில் கூற, அதில் ஆத்திரம் தாளாமல் மாப்பலகையொன்றால் மாமியின் தலையில் அடித்து மண்டையைப் பிளந்துவிட, மாமியும் இறந்து மருமகனும் ஜன்ம தீபாந்திர சிக்ஷை பெற்றார். இதில் யார் என்ன லாபம் வாரிக் கொண்டது? சகிப்புத்தன்மை பெறாதவர்கள் விவாகத்திற்குத் துணியாதிருப்பதே மேல். இவையெல்லாம் எவ்வளவோ ஸந்தோஷ வைபவமாய் மேளம் கொட்டி நடந்த கல்யாண முடிச்சுகள் தான்! என் செய்ய?

***

விபசாரத்தின் அநியாயங்கள்.

"எத்தனை பேர் தொட்ட முலை—
எத்தனை பேர் பற்றியிழுத்த இதழ்"

என்று பரத்தையரைக் குறித்துப் பட்டினத்தார் பாடினார்.

காமம் இவற்றையெல்லாம் கவனிப்பதேது? இந்த விபசாரத்தைப்பற்றி சிங்கப்பூரில் நேரில் கண்ட ஒருவர் விஸ்தாரமாகத் தெரிவித்துள்ளார். அதில் சில குறிப்புகளை இங்கு தருகிறோம். *** உடனே அந்தப் பெண்கள் யாவரும் நாங்கள் பரீட்சை (!) செய்வதன் பொருட்டு வரிசையாக அணிவகுத்து நிறுத்தப்பட்டனர். *** ஒரு மனிதன் உள்ளே வந்தால்

கோபமும் கொடுமையும் காட்டுகிறவர்களிடம் மட்டுமே காட்டலாம்.

அவர்களுக்குப் பணம் கிடைக்குமாத லால் அது அவர்களுக்குத் திருப்தி யாம். *** அவர்கள் புன்சிரிப்புடன் பார்த்தனர். *** அவர்கள் எங்களை வரவேற்ற சப்தம் எஞ்சின் சப்தத் தைவிடப் பலமாக இருந்தது. *** ஒரு சீனன் எங்களை நிறுத்தி நாங்கள் வேறெங்கும் தேடவேண்டா மென்றும், தான் ஒரு இடத்திற்கு எங்களை அழைத்துச் செல்வதாயும், அங்கு சிறு வயதுள்ள நல்ல யௌவ னம் வாய்ந்த இளங்கன்னிகைகள் இருப்பதாயும் கூறினான். *** எங்க ளுக்கு முன் நின்ற சீனப்பெண்க ளுக்கு 13, 14 வயதுக்கு மேல் இருக்க நியாயமில்லை. *** அவர் களை விலைக்கு வாங்கிய ஒரு சீன மாதின் உத்திரவின்பேரில் இந்தப் பெண்கள் புன்சிரிப்பு கொள்ள முயன் றனர். காட்சி மிகவும் பரிதாபமா யிருந்தது. *** இளமங்கையர்களும் எங்கள் கையைப்பிடித்து இழுத்தார் கள். *** வலையில் மீன் அகப்பட்டு விட்டது. இனிமேல் காசு பறிப் பது அந்த இளங்குட்டிகளுடைய வேலை. *** மெதுவாகத் தாகரி யான ஸ்திரீ அவ்வறையை விட்டு நீங்கினாள். விளக்கை மங்கலாகச் செய்து, சிறுமிகள் எங்களுக்கு சொற்ப விரற்கடை ஸமீபத்திலமர்ந் தனர். ***மங்கையரெல்லாம் நல்ல அழகுடையவர்களே. எப்பொழுதும் முகத்தில் புன்சிரிப்புடன் இதரர்களை ஸந்தோஷப்படுத்தும் குறிகள் இருந் தன. அவர்கள் எங்களைப் புகழ ஆரம் பித்தார்கள். நாங்கள் அழகில் மன்மத னுக்கு ஒப்பானவர்களென்றும், தங் கள் "தொழிலை" விட்டுவிட்டு வந்து விடப் பிரியமென்றும் கூறினார்கள். *** இந்த இரவின் ஜந்துக்களும் ஒருகாலத்தில் சாதாரண ஸ்திரீயைப் போல் நல்ல உணர்ச்சியுள்ளவர்க ளாகவே இருந்திருப்பார்கள். *** உண்மையில் அவர்களைப் பலவந்தம் செய்து அடக்கி, சில சமயங்களில் சவுக்காலும் தடியாலும் அடித்து நரக உலகத்துத் தொழிலுக்குப் பழக்குகிறார்கள். கடைசியில் இந்தத் துன்மார்க்கத் தொழில் அவர்களுக் குப் பழகப்பழக சகஜமாய் விடுகிறது. பெண்களை 500-வெள்ளிக்கு வாங்கு வதாகவும், விபசாரம் தொடங்கிய முதல் மாதத்திலேயே 1000-வெள்ளி சம்பாதித்து விடுவதாகவும் சொல்லப் படுகின்றது. ஆடவர்கள் உள்ள வரை விபசார அநியாயங்களும் உண்டுதான். கொள்பவ ரில்லாவிடில் விற்பவருமில்லையன்றோ?

***

"வெண்ணெய் திரண்டு வரு கையில் தாழி உடைந்தாற்போல"

பண்டித மோதி லால் நேருவின் அந்தியம்.

ஸமரஸப் பேச்சு கள் நடத்தப்பட வேண்டிய முக் கியமான சந் தர்ப்பத்தில் பண்டித மோதிலால் நேரு அவர்கள் 6-2-31-ம் தேதியன்று கடவுள்பத மடைந்துவிட்டது கேட்க இந்தியா முற்றிலும் கண்ணீருடன் கதறுகின் றது. ஸமீபத்தில் கராச்சியில் ஸர் தார் வல்லபாய் படேலின் அக்ரா ஸனத்தில் காங்கிரஸ் மகா ஸபை கூடி ஸமரஸப் பேச்சுகளை முடிவு செய்ய இருக்கையில், அதற்கு மோதிலால்ஜீ இல்லாமை பரம துக்கம்! இவர் இரு முறை காங்கிரஸ் அக்ராஸனம் வகித் தவர். இரு முறை சிறை சென்றவர். தமது புத்திரன், புத்திரி, மருமகள், மருமகன் யாவரையும் சிறை செல்ல விட்டவர். ஹா! இவரன்றோ தியாக மூர்த்தி. இவரது ஸ்தானத்தைப் பூர்த் தி செய்வது சாத்தியமில்லை. ஸ்ரீ மக ம்மதலியை அங்கு இழந்தோம்! இன்று இவரை இங்கு இழந்தோம்!! இராஜ்ய ஸமரஸத்திற்கு இத்துக்க ஸம்பவங்கள் நற்சகுனங்களல்ல.

சிறுமணித்திரள்

("பன்னிரு மாசதங்களின் மர்மம்" என்ற நாவலினின்றும் திரட்டியது.)

(640-பக்கத் தொடர்ச்சி.)

793. தர்மத்திற்கு எதிரிடையாய் முறை தவறிய பாதையில் ஒரு பெண்ணிடத்து விருப்புற்றுக் காம பாராயணம் செய்வதற்கே மோஹம் என்பது. (60)

794. தெய்வ சாக்ஷியாக மணந்த அருமைத் தேவியிடத்துக் கொள்ளும் பற்றுதல் ஒருநாளும் மோகமாகாது. அது 'காதல்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும். (60)

795. காமமும், மோகமும் சிற்றின்ப வாஞ்சை தீர்ந்ததும் மறைந்துவிடும் தன்மையதாம். (61)

796. ஒருவன் தன் மனைவியுடன் தர்ம மார்க்கமாய் இல்லறம் நடாத்தி வருகையில் அவன் சிற்றின்பத்தின் பாற்பட்டபோதிலும் அவன் ஒரு துறவிக்குச் சமமாகவே எண்ணப்படுவான். (61)

797. பரஸ்பரம் ஒருவரையொருவர் கண்டு வெகு காலமாயினும் கடிதங்கள் மட்டும் தவறாமல் வந்துகொண்டிருந்தால் அது அவர்கள் மனத்திற்கு வெகு சாந்தி யளிக்கின்றது.

798. மனிதனுடைய வாக்கிலும் கடிதத்தின் வாக்கு விசேஷித்தது.

799. ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கும் விஷயம் பாதி பேச்சில் நின்றுபோய்ப் பிறகு தொடங்க ஹேதுகாமும் சந்தர்ப்பமும் அகப்படாமலிருக்கலாம். காகிதமோ பாதியைப் படித்து விட்டபோதிலும், மறு பாதியைப் பிறகாவது படிக்கும்படி தூண்டும். (88)

800. தபால் காகிதம் என்றவுடனே எத்தகைய வேலையையும் விட்டுவிட்டு வெளியில் ஓடிவருவர். (88)

801. ஒரு சின்னஞ்சிறு கடிதம் வெகுகாலத்துப் புண்களையும் நிவர்த்தித்துவிடும். அவ்விதமே வெகுகால உறவு—நட்புகளையும் ஒரு சிறு கடிதம் வேரறுத்து விடும். (88)

802. கடிதத்திற்குள்ள சக்தி போர்க் கருவிகளுக்குக்கூட இல்லை. அக்கருவிகளை யெல்லாம் இயக்கி நடத்துவது ஒரு சிறு கடிதத்திலுள்ள சில வரிகளேயாகும்.

803. காகிதத்தில் நமது உள்ளத்தையும் ஆசையையும் காண்பித்து எழுதிக் கொள்வதுபோல் வாயாற் சொல்லமுடியாது—அதற்கு ஒருபோதும் மனதும் வராது. (89)

804. எதிர்பார்த்த கடிதம் வராமையால் எவ்வளவு சஞ்சலப்படுகிறோம், எவ்வளவு ஆவல் கொள்ளுகிறோம், எவ்வளவுக்கு எதிர்பார்த்து நிற்கிறோம், என்ன என்ன எண்ணித் தடுமாறுகிறோம்--ஏங்குகிறோம்? (89)

"இல்லானை இல்லாளும் வேண்டாள், ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்" என்பதைக் குறித்து அநுபவமாய்க் கண்டவர்களின் கதை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரிய ஞானத்தை உண்டாக்க வல்லதாகும்.

805. தாயும் பிள்ளையும் ஒன்றானாலும், வாயும் வயிறும் வேறாயிருப்பதுடன், எவ்வளவோ பரஸ்பரம் பேதித்த எண்ணங்களும், அந்தரங்க உட்கொள்கைகளும் நிறைந்திருப்பது உலக இயல்பு. (90)

806. எவ்வளவு நெருங்கிய பந்துக்களாயினும் ஒருநாள் இருநாள் தான் தங்கலாம். அதற்கு மேல் இருந்தால் சலிப்பு தோன்றிக் கொள்ளும். (93)

807. எவ்வளவு அன்பு பொங்கினவர்களாயிருந்தாலும், இந்தப் பாழும் பணப்பிசாசு எப்போதும் பிரித்து விடக்கூடிய தன்மையுடையதேயாகையால் எதிலும் முன் ஜாக்கிரதைப்பட்டுக் கொள்வது பிறகு மனஸ்தாபம் இல்லாமல் புறப்படுவதற்கு நல்ல வழி. (96)

இருக்கிற மதிப்பு எப்பொழுதுமே இருக்குமானாலும் அது இருக்கவேண்டிய ரீதியில் அதனதன் இடத்தில் அமர்ந்திருந்தால்தான் அந்த மதிப்பு நிலைக்கும். கோயிலிலுள்ள விக்கிரகம் நம்வீட்டிற்கு வந்துவிட்டால் முன்பு கோயிலில் அதற்கு வைத்திருந்த மதிப்பை இப்போதும் வைக்க முடியுமா? சற்று விலகி—மூடி—எட்டி—பிரிந்து — தூர இருந்தால்தான் அததற்கு உள்ள மதிப்பு நிலைக்கும்.

808. ஒருவரையொருவர் பிரிந்து தூர நிற்கையில் "பாசம்" சிறிது சாந்தப்பட்ட நிலையில் தணிந்திருத்தலால் இன்னும் சிலகாலம் வரைக்கும் ஒருவரையொருவர் பாராமலே இருக்கவும் மனதைத் தைரியப்படுத்திக் கொள்ளவும் முடியும். ஆனால் நேரில் கண்டுவிட்டாலோ பிறகு மறுபடியும் அவ்விதம் பிரிவதென்பது சாத்தியமல்ல. (99)

809. முக்கியமானவர்களை மறந்து போவதுதான் எங்கும் வழக்கம். யார் நமக்கு அதிக நன்மை செய்தார்களோ அவர்களைத் தான் இப்போது நாம் நினைப்பதில்லை. (107)

810. மனைவி வந்ததும் அந்தப் புதிய உறவிலேயே மகிழ்ச்சி. அவ்வுறவுக்கே பல பல செலவிடுவது. (107)

811. முதல் மனைவி—யௌவனவேகம் வடிந்து ஒடிந்த ஒரு காய்ந்த கட்டையாக, பின் வந்த இளையாள் பூர்ண யௌவன ரஸம் மிக்குடைத்தாய், தேகமுற்றும் அந்தக் காந்திபரிமளிக்கும் கட்டழகியாய்க் காட்சிதரும் கண்மணியாவளன்றோ? இவ்விதம்தானே உலகத்தார்க்கு எண்ணம்? வீட்டிலும் அரசாக்ஷி அதிகாரம் அவளுக்கே அதிகரித்திருப்பது எங்கும் காணும் சங்கதிதானே.

P. G. குலசேகரன்.

---

1. துன்மார்க்கத்துக்குச் சோம்பலே காரணம்.
2. அவசியமான கல்விப் பொருளையும் செல்வப் பொருளையும் தேடுவதில் ஒவ்வொரு நாளையும் வாழ்நாளின் கடைசிநாளாகப் பாவித்து நட.
3. அவனவன் பகுத்தறிவே அவனவனுக்கு ஆசிரியை.

ச. முனிசாமி பிள்ளை.



ஹாஸ்ய சஞ்சீவினி



தீக்ஷிதர் :—உன் பிராண சிநேகி தன் தன் வீட்டில் எவருமில்லையென்றும், இன்று பொழுதுக்குப் போஜனம் வேண்டுமென்றும் கேட்டானே; நீ என்ன சொன்னாய்?

சாஸ்திரிகள் :—வீட்டில் திதியானதால் இன்று சூத்திரர்களுக்கு அன்னமிட ஒப்பமாட்டார்களென்று சொல்லியனுப்பிவிட்டேன்.

தீக்ஷிதர் :—சாஸ்திரக் குப்பை இருக்கட்டும். உனக்கு மனம் இருந்தால் ஹோட்டலில் வாங்கித் தந்துவிடலாமே?

—"கடவுள் பதம் இந்த நிமிஷமே கிடைக்கும்வழி எப்படி?"

—"குளம், ஆறுகளில் விழுந்து செத்தால் ஜில்லென்று ஒரு ஜோதி தோன்றி உடனே கிடைக்கும்"

அவன் :—என்னைக் காணும்படியான சந்தர்ப்பமும் சாவகாசமும் உங்களுக்குக் கிடைத்ததைப்பற்றி நான் மிகவும் பூரிக்கிறேன்.

இவன் :—பூரிப்பது சரி, என் கடன் பாக்கியை இன்று கண்டிப்பாகக் கொடுத்துவிடுவதாய்ச் சொன்னாய். அதை முதலில் எடு.

அவன் :—கோர்ட்டுக்குப் போய் வாங்குகிற வழியில் வாங்கிக்கொள்ளு.

ராதா :—அடிமைக்கு மோக்ஷம் உண்டோ?

சீதா :—பெண் ஜன்மத்திற்கு சுகமும் உண்டோ?

ராதா :—கிடைக்கிற கணவனைப் பொறுத்து சுகம் ஏற்படும்.

சீதா :—ஏற்படுகிற எஜமானனின் தர்மபுத்தியைப் பொறுத்து அடிமைக்கு மோக்ஷம் கிடைக்கலாம்.

—"எவ்வளவு உருக்கமான பக்திப் பிரஸங்கம் பார்த்தாயா?"

—"ஆம், அவ்வளவும் பணம் திரட்டுவதற்காகத் தான்."

காதலன் :— நான் புதியவனல்லவே. உன் பழய ஆசாமிதானே. என் இப்படி மறுக்கிறாய்?

காதலி :—விவாகத்திற்கு முன்பு நடந்ததை இப்பொழுது சொல்லிப் பயனில்லை. இனி இங்குப் பழய நினைவோடு வராதே.

—"வயதாய் விட்டதே, நீங்கள் சுகமாகப் போகலாமே?"

—"எங்கே போக?"

—"வைகுண்டத்திற்கு?"

—"ஏன் அப்பா?"

—"பூமிக்குப் பாரமாக எவருக்கும் உதவாத மனிதனாய் என் உயிருடன் இன்னும்இருக்கவேண்டுமோ?

வினா :—நாணம் என்றால் என்ன?

விடை :—அது ஒரு உத்தம குணம். நாணம் அதிகப்பட்டால் அது ஒரு நோயாகித் தொல்லைதரும். வலியப் பேசித்தான் அதைக் குறைக்க வேண்டும்.

—"எப்போது நமக்குத் தபால்கள் வருவதில்லை?"

—" நாமே தபால்காரனைத் தேடிக்கொண்டு போகும்போதுதான் அவன் ஒன்றுமில்லை யென்று கையை விரிக்கிறான்." ——

வினு :— 'முத்தம்' என்றால் பொருள் என்ன?

விடை :—அன்பின் அறிகுறிக்காக வைக்கிற ஒரு முத்திரையாகவும் பாவிக்கலாம். அல்லது கற்பு என்னும் வைர ஆபரணத்தை நாணம் என்னும் பெட்டியிலிருந்தும் அபகரித்துக்கொள்ள நினைத்துத் திறப்பதற்கு உபயோகிக்கிற திருட்டுச் சாவியாகவும் முத்தத்தைக் கொள்ளலாம்.

—

" அவன் என்னவோ அடிக்கடி தன் விரலை முகர்ந்து பார்க்கிறானே?—அது ஏன்?"

—" அது அவனுக்கு ஒரு வாசனை. மற்றவர்களுக்கு அப்படி அது ஒரு வாசனையாகத் தோன்றாது." ——

குப்பன் :—எவ்வளவோ சம்பாதிக்கிறாயே. உன் மனைவிமீது நகைகளைக் காணோமே?

சுப்பன் :—அவள் புருஷனுக்கு அடங்கி நடக்கிறவரையில் நகைகிடையாது. எனக்கும் நகை செய்ய அதுவரைக்கும் பணம் சேராது.

—

சோமு:—அவன் உனக்கு வெகு ராங்கியாகக் கடிதம் எழுதினானே? நீ என்ன பதில் தந்தாய்?

ராமு :— அவனைவிட எனக்கு அதிக 'ராங்கி' யிருக்கிறதென்பதை அவனே கண்டுகொள்ளும்படி மௌனமாகப் பதில்தாராம லிருந்துவிட்டேன்.

—

சீனு :—காந்தத்திலிருந்து மின்சார ஜோதி எப்படிப் பாய்கிறதென்று உனக்குத் தெரியுமா?

வேணு :—நாணத்தால் சுருங்கிய அரைக் கண்களோடும் ஒரு நங்கை நோக்கும் கூர்மையான பார்வையில் இந்த மின்சாரம் தோன்றிக்கொண்டு, அந்த சமயம் எப்படியோ சட்டென்று அவள் முகத்தைப் பார்த்துவிடுகிற ஆடவனின் மீது அந்த மின்சாரம் பாய்ந்துவிடுகிறது. அந்த சமயம் நங்கையின் கண்கள் நெருப்புத் தணல்போல் ஒளிவீசி ஆடவன் தன் தலை குனியும்படி செய்துவிட, அதை அவன் தன் ஜீவிய காலமுற்றும் மறப்பதேயில்லையாம். ——

வினு:—பத்திராசிரியர்கள் நல்லவர்களா?—கெட்டவர்களா?

விடை:—அது அவர்களை நீ உபயோகப்படுத்திக் கொள்ளுகிற மாதிரிக்குத் தக்கபடியிருக்கும்.

—

கணவன் :—ஏது நமக்கென்று தனியறையைக் காலிசெய்து தந்து வெகு உபசாரம் நடக்கிறதே?

மனைவி :—நாம் அதிகமாக சீர் வரிசைகள் செய்யும்படி நம்மை மயக்குவதற்குத் தான்.

—

வினு:—கிணற்றில் கல்லைப் போட்டதுபோல மௌனமாய் இருப்பவர்கள் யார்?

விடை:—ஒரு காரிய நோக்கத்தோடும் நம்வீட்டிற்குவந்து தங்கியவர்கள்தான். அவர்கள் எதற்காக வந்தார்களென்றும் தெரியாது. எத்தனை நாள் இருப்பார்களென்றும் தெரியாது.

—

வினு :—ஊரிலிருந்தும் வந்தவர்களின் உள்வீட்டுச் சங்கதிகளை யார் மூலம் அறியலாம்?

விடை :—நமது பெண்கள் வந்திருப்பவர்களின் பெண்களோடு கலந்துகொண்டு யாவும் அறிந்து பிறகு நமக்கும் சொல்வார்கள்.

பிரமோதூத வருஷத்திய மாசி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்.	தேதி	வாரம்	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள் முதலியவை.
பி-சி	12	1	வி	தச 8-8, கேட் 9-10, கும்பரவி 21-16, அகஸ் 28-54.
அ-பி	13	2	வெ	ஏகா 10-39, மூல 13-3, துவாதசிதிதி. [திதி.
சி	14	3	ச	துவா 14-19, பூரா 18-10, பிரதோஷம், திரயோதசி
அ	15	4	ஞா	திர 18-50, உரா 23-52, மஹாசிவராத்திரி, காளஹஸ்தி [ரிஷபவாஹனம், அதிதி.
அ-சி	16	5	தி	சசி 24-15, ஶ்ரவ 30-28, நடராஜர் அபிஷேகம், சதுர் [தசி திதி. [தெப்பம்
சி-ம	17	6	செ	● 30-16, அவி 37-40, அகஸ் 29-2, திருவல்லிக்கேணி
சி-அ	18	7	பு	பிர 36-45, சத 45-17, கோச்செங்கட்சோழர். 134-2.
சி	19	8	வி	துவி 43-29, பூட் 53-5, ஜம்புகேசுரம் ரதம், மீனயனம்
சி	20	9	வெ	திரி 50-9, உட் 60-0, ஷவ்வால்மீ 1உ.
சி-பி	21	10	ச	சது 56-26, உட் 0-50.
அ-சி	22	11	ஞா	பஞ் 60-0, ரே 8-6, அகஸ் 29-11, ஸத்திய விரதம்.
சி	23	12	தி	பஞ் 1-51, அசு 14-31.
சி	24	13	செ	ஷஷ் 6-1, பர 19-41, கிருத்திகாவிரதம்.
அ-சி	25	14	பு	ஸப் 8-28, கிரு 23-9, திருக்கச்சியூர் சேஷவாஹனம்.
உ-ம	26	15	வி	அஷ் 8-56, ரோ 24-44. [பம், திருக்கச்சிநம்பி.
சி	27	16	வெ	நவ 7-20, மிரு 24-10, அகஸ் 29-20, தென்னேரி தெப்
சி	28	17	ச	தச 3-40, உப 54-29, ஆரு 21-35. [ராழ்வார்.
சி	1	18	ஞா	துவா 51-2, புந 17-16, ஸ்ரீமுஷ்ணம் ரதம், குலசேக
சி	2	19	தி	திர 42-46, பூச 11-25, பிரதோஷம். [ரியூர் மகிழடி.
சி	3	20	செ	சசி 33-39, ஆயி 4-35, உப 52-36, மாசிமகம், திருவொற்
அ	4	21	பு	○ 24-3, பூர 49-37, அகஸ் 29-28, ஹோலி பண்டிகை, [ராயஜீகுள தெப்பம்.
ம-சி	5	22	வி	பிர 14-37, உத் 42-21, ஸத்தியநாதர்விதிராஜர் திதிவயம்.
அ-சி	6	23	வெ	துவி 5-48, உப 52-3, ஹஸ் 35-46, எறிபத்தர், திருதியா [திதி.
ம-அ	7	24	ச	சது 51-8, சித் 30-16, வியாசராயர்.
சி-உ	8	25	ஞா	பஞ் 45-58, ஸ்வா 26-17.
ம-சி	9	26	தி	ஷஷ் 42-34, விசா 24-5, அகஸ் 29-38.
சி-உ	10	27	செ	ஸப் 41-4, அநு 23-40.
சி-ம	11	28	பு	அஷ் 41-29, கேட் 25-6.
சி	12	29	வி	நவ 43-39, மூல 28-19, நவமிதிதி.
பி-சி	13	30	வெ	தச 47-20, பூரா 33-5, தசமிதிதி.

(இங். தேதி நிரலில்: பிப்ருவரி (4-16); மார்ச்சு)

ரா			குரு
ரவி பு	15உக்கு ராசி.		செவ்
ச சு			கே

" அமிர்த குணபோதினி " பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை, 1931.